# වාර්ෂික වාර්තාව 2023

කළමනාකරණ පශ්චාත් උපාධි ආයතනය

ශ්‍රී ජයවර්ධනපුර විශ්වවිද්‍යාලය

# ஆண்டறிக்கை 2023

முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவகம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

# Annual Report 2023

POSTGRADUATE INSTITUTE OF MANAGEMENT

University of Sri Jayewardenepura



# "புதிய உலகத்திற்காக"

# PIM வணிக பாடசாலை தாபித்தல்



முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவகம்

**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்**

PIM Postgraduate Institute of Management

University of Sri Jayewardenepura



# நோக்கு, செயற்பணி மற்றும் பெறுமானங்கள்

## நோக்கு (vision)

தெற்காசியாவின் முகாமைத்துவ துறையில் கீர்த்தி மிக்க மத்திய நிலையம் ஒன்றாக மாறுதல்

## செயற்பணி

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் உறுதிப்படுத்திய தரம், முன்மாதிரியான நிருவாகம் மற்றும் மலர்ச்சியுடன் கூடிய நின்றுநிலைக்கும் புத்தாக்க கற்றல், அறிவியல் ஆராய்ச்சி, பயனுள்ள கூட்டுடமை அத்துடன் எதிர்கால அபிவிருத்தி ஊடாக நபர்களிடத்திலும் அமைப்புகளிலும் பெறுமானங்களை உருவாக்குவதற்கு பாரிய பணியை மேற்கொள்ளுதல்

## எமது பெறுமானங்கள் Values

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அடிப்படை பெறுமானங்கள் எவையெனில், அவா, நேர்மை மற்றும் சிந்தனை உணர்வு என்பனவாகும். ஒவ்வொரு பெறுமானங்களின் கீழும் பிரதான நடத்தை காரணிகளான (KBLs) மீது கவனம் செலுத்துகின்றோம்.

| அவா | நேர்மை | சிந்தனையுடன் செயலாற்றுதல் |
| --- | --- | --- |
| முடிவுகளில் மலர்ச்சியையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தல், செயற்பாடுகளில் நிபுணத்துவத்தைக் காட்டுதல் மற்றும் சட்ட விதிகளுக்கு அமைவாக முழுமையாக ஒத்துழைப்புடன் செயலாற்றுதல்.<br><br>பிரதான நடத்தைக் காரணிகள் *(KBIs)*<br><br>• எதிர்பார்க்கும் நடத்தைகளிலிருந்து விலகாமல் சுயக் கட்டுப்பாட்டை வெளிப்படுத்தல்<br>• விதிகளை அமுல்படுத்தும் போது விருப்பத்துடன் ஒத்துழைப்பு வழங்குதல்.<br>• முடிவுகளைப் பெறுவதற்கான விருப்பத்தை நிரூபித்தல்<br>• செயலில் ஆற்றலையும் சுறுசுறுப்பையும் வெளிப்படுத்தல் | கொடுக்கப்பட்ட பணிகளின் செயற்திறனில் முழுமனதுடன் பங்களித்தல் மற்றும் நிறுவனத்தின் சிறந்த நலன்களை மனதில்கொண்டு நெறிமுறையாக செயலாற்றுதல்<br><br>பிரதான நடத்தைக் காரணிகள் *(KBIs)*<br><br>• நிறுவனத்தின் நன்மை-க்காக நேரத்தையும் சக்தியையும் செலவிடுதல்<br>• ஒப்படைக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதில் அதிக ஈடுபாட்டைக் காட்டுதல்<br>• ஒரு சிக்கலை அணுகுவதற்கான நேர்மறையான மற்றும் உற்சாகமான வழிகளைக் காட்டுதல் | பணிகளை மேற்கொள்கின்றபோது ஒரு மனதுடன் கவனம் செலுத்துதல் மற்றும் மற்றொரு நபரின் கண்ணோட்டத்தில் அவர்களின் அனுபவங்களைப் புரிந்துக்கொள்ளுதல்<br><br>பிரதான நடத்தைக் காரணிகள் (KBIs)<br><br>• ஒப்படைக்கப்பட்ட பணிகளைக் கையாள்வதில் கவனம் செலுத்துதல்<br>• வேலை தொடர்பான பொறுப்புகளை நிறைவேற்றுவதில் விரிவாக கவனம் செலுத்துதல்<br>• கடமைகளைச் செய்வதில் மிகுந்த கவனம் செலுத்துதல்<br>• மற்றவரின் கருத்தைக் செவிமடுக்கும் அதே நேரம், மற்றவர் ஒரு பிரச்சனையை எப்படிப் பார்க்கிறார் என்பதைப் புரிந்துகொள்ளவதற்கு முயலுதல் |

# உள்ளடக்கம்


பணிப்பாள் அவர்களின் செய்தி………………........…….................................................. 08

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) தொடர்பாக ……………………….....10

நிருவாகம் நிறுவனத்தின் ஆளுகைச் சபை ……………………………………………...22

நிறுவனக் கட்டமைப்பு ………………………………………………………………..29

நிறுவனத்தின் நிறுவன ஆளுகை ………………………………………………………31

இடர் முகாமைத்துவம் ………………………………………………………………..33

பெறுமதி ஊக்கி 1 – புதிய கற்பித்தல் மற்றும் கற்றல் ………………………………...37

பெறுமதி ஊக்கி 2 – ஆழமான புரிந்துணர்வுடன் கூடிய பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் …………………………………………………………………………40

பெறுமதி ஊக்கி 3 – ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டாண்மைகளை வளப்படுத்தல் ……….46

பெறுமதி ஊக்கி 4 – எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி ….62

இயக்குவிக்கும் காரணி 01 : உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலை …………….68

இயக்குவிக்கும் காரணி 02 : முன்மாதிரியான ஆளுகை ……………………………...….72

இயக்குவிக்கும் காரணி 03 : நிலைத்தன்மைக்காக தூண்டுவித்தல் ……………………...74

இயக்குவிக்கும் காரணி 04 : புதிய டிஜிரல் சிறப்பு …………………………………..83

ஸ்வொர்ட் (ளுறுழுவு) பகுப்பாய்வு ……………………………………………………86

தற்கால செயலாற்றுகை ………………………………………………………………88

பதவியணி பற்றிய விபரங்கள………..………………………………………………90

கற்கைநெறிகள் …………………………………………………………...………97

ஒட்டு மொத்த நிறுவனம் சர்வதேச ஒத்துழைப்பு ………………………………..…………114

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆரம்பம் ………………………………. 117

பேராசிரியர் உதித லியனகே ஞாபகார்த்த நூலகம் ..……………………………………..119

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம் ..………120

தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரம் ……………..………………………………………122

சமகால கற்றல் சூழல் …………………………….………………………………………… 124

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பழைய மாணவர்கள் …………….………...125

ஒட்டு மொத்த நிதி மீளாய்வு …………………………….…………………………...135

நிதியியல் கூற்றுகள் ……………………………….…………………………………..142

# பணிப்பாள் அவர்களின் செய்தி

2023 ஆம் ஆண்டுக்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) வருடாந்திர அறிக்கையை மிகுந்த பெருமையுடன் சமர்ப்பிக்கின்றோம். கடந்த ஆண்டு நமது நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக நிச்சயமற்ற காலப்பகுதியாக அமைந்தது. வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் மாறிவரும் உலகளாவிய இயக்கவியல் நிறைந்த உலகில், இலங்கையில் பட்டநிலை பின்படிப்பு கல்வியின் சிறப்பிற்கான முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அர்ப்பணிப்பு உறுதியாக பராமரித்து வந்தது.

1998 ஆம் ஆண்டு முதல் சுயமாக நிதியளிக்கப்படும் மற்றும் பகுதி சுய கட்டுப்பாட்டு அரசு நிறுவனமான முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், அதன் முகாமைத்துவ சபை மற்றும் கல்வி சபை ஆகியவற்றின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் செயல்படுவதுடன், 2023 ஆம் ஆண்டிற்கான நிறுவனத் திட்டத்தால் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் நோக்கங்களை அடைவதில் இந்நிறுவனம் கவனம் செலுத்தியது. நிறுவனத்தின் பாடத்திட்டங்கள் முழுவதும் உள்நாட்டு மற்றும் சர்வதேச மாணவர் சேர்க்கை அத்துடன் பட்டதாரிகளின் வெளியீடுகள் அதிகரித்தலும், ஆராய்ச்சி வெளியீடுகளில் அதிகரித்தலும் கவனத்தில் கொள்கையில் இது நன்கு பிரதிபலிக்கின்றது. எதிர்காலத் தலைவர்களை மேம்படுத்துவதில் நிறுவனத் துறைக்கு மதிப்புக் கூட்டுவதன் மூலம் நிர்வாக அபிவிருத்திப் பிரிவின் இருப்பை மேம்படுத்துவதற்கும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பணியாற்றியது. அதன் கற்றல் பங்காளிகளுக்கு சாதகமான மற்றும் சிறந்த வகுப்பறை கற்றல் சூழலை வழங்க உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப வசதிகளை மேம்படுத்துவதிலும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் கவனம் செலுத்தியுள்ளது. கூடுதலாக, தெற்காசிய முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனங்களின் கூட்டமைப்பு (AMDISA) ஊடாக தெற்காசிய தர உத்தரவாத கட்டமைப்புகள் (SAQS) அங்கீகாரம் பெறும் செயல்பாட்டில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் விரைவான முன்னேற்றத்தை அடைந்துள்ளது.

கடந்த ஆண்டு, ஆராய்ச்சி கலாச்சாரம் மற்றும் கல்விச் சிறப்பை ஏற்படுத்துவதற்காக ஆசிரியர்களின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். தெளிவான அறிவுறுத்தல்களையும், நடைமுறை அனுபவத்தையும் ஒருங்கிணைக்கும் பாடத்திட்டத்தின் மூலம், தற்போதைய நவீன பணிச்சூழலில் வெற்றிபெற தேவையான திறன்கள், அறிவு மற்றும் மனப்பான்மைகளை எங்கள் கற்றல் பங்காளிகளுக்கு நாங்கள் வழங்கியுள்ளோம். எங்கள் ஆசிரியர்களும், எங்கள் கற்றல் பங்காளிகளும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சி கட்டுரைகளை வெளியிட்டும், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து அதில் பங்கேற்றும், மதிப்பீடுகளைப் பெற்றும், தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தை அடைந்துள்ள கூட்டுத் திட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இறுதியாக, கடந்த ஆண்டில் முகாமைத்துவ பட்டப்பின் நிறுவனம், பொது திறசேரியிடம் பங்களிப்பு செய்வதோடு, ஒரு சுய-நிதியளிப்பு நிறுவனமாக அதன் நிலையை வலுப்படுத்த

முடிந்தள்ளது. எங்கள் பொதுவான தொலைநோக்குப் பார்வையை அடைவதற்காக அவர்களின் தொடர்ச்சியான ஆதரவு மற்றும் அர்ப்பணிப்புக்காக எங்கள் ஆசிரியர்கள், பதவியணி மற்றும் கற்றல் பங்காளிகளுக்கு நான் மனதார நன்றி கூறுகின்றேன். "புதிய உலகத்திற்கான வணிகப் பாடசாலையாக" செல்கின்ற எங்கள் பயணத்தில், நாங்கள் ஒன்றாக இலங்கையிலும் அதற்கு அப்பாலும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு கல்வியின் எதிர்காலத்தை வடிவமைப்போம்.




இலங்கையின் உயர் முகாமைத்துவக் கல்வி மற்றும் பயிற்சியின் முன்னோடியாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) 35 ஆண்டுகளுக்கும் மேலாக வணிக சமூகத்திற்கும் நாட்டிற்கும் சேவை செய்து வருகின்றது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த, பகுதி தன்னாட்சி நிறுவனமாக, இது தொழில், கல்வி மற்றும் அரசு பிரதிநிதிகளைக் கொண்ட முகாமைத்துவக் குழுவால் நிர்வகிக்கப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள ஒரே சுய-நிதியளிப்பு நிறுவனம் ஆகும். முகாமைத்துவ பட்டபின் படிப்பு நிறுவனத்தின் பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறிகள் ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான முகாமையாளர்களை ஈர்க்கின்றன, ஏனெனில் இது இலங்கையில் முகாமைத்துவத்தின் மிகவும் சவாலான கற்றல் வாய்ப்புகளை வழங்குவதனால் ஆகும்.

# PIM Anthem

ජයවද්දන පුර විදුදය සරසවි
පද්ම තටාකේ විකසිත පියුම ඔබ යි
පින්බර අප විද්‍යා භූමි
කිතු ගොස දස දෙස විදා
වොරැදේවා ජය දද බන්දා
පින්බර අප විද්‍යා භූමි
දියුණුව සලසන නව්‍ය තාක්ෂණ
විදුරුවන් කිරණ නොමින් පෙරා ගෙන
මානව ශ්‍රම ගුණ නිසි ලෙස යොදවන
කළමනාකරණ විදුනැණ වඩවන
සරසවි වරමින් නැණ ගුණ රන්දන
ජය මඟ පාදන නියමු නිකේතන
සිරිලක සිරිසර මල්පල ගන්වන
විදුබිම නන්දන කරනෙමු වන්දන
ජයවද්දන පුර විදුදය සරසවි
පද්ම තටාකේ විකසිත පියුම ඔබ යි
පින්බර අප විද්‍යා භූමි
කිතු ගොස දස දෙස වීදා
වොරැදේවා ජය දද බන්දා
පින්බර අප විද්‍යා භූමි

ගී පද රචනය: ආචාර්ය එච් ඒ පී අබේවර්ධන
ගී තනු නිර්මාණය: විශාරද ආචාර්ය ඩබ් ඩී අමරදේව

# PIM Anthem

## *(English translation)*

Like unto a lotus fully blossomed,
In the pond: The Vidyodaya,
University of Jayewardenepura,
Our meritorious seat of learning,
May your fame spread,
In all ten directions,
With the banner of victory fluttering,
For providing us insight into new technology,
Imbibing the essence thereof,
Distilling the rays of science,
Enabling human endeavour appropriately,
Enhancing skills in management,
And by the grace of Saraswathi,
Fostering sublime qualities and virtues,
We adore you,
Our delightful centre of wisdom,
Like unto a lotus fully blossomed,
In the pond : The Vidyodaya,
University of Jayewardenepura,
Our meritorious seat of learning,
May your fame spread,
In all ten directions,
With the banner of victory fluttering.

*English version by Dr. H A P Abeywardana*
*The composer of the original in Sinhala*

# PIM Anthem

## *(Tamil translation)*

ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
பத்ம தடாகத்தில் இலங்கிடும் கமலம் நீ

நம்முயிர் கல்விக் கூடம் நீ
உன் புகழ திக்கெட்டும் பரவ
உன் கொடி உயரப் பறந்திடுமே

நம்முயிர் கல்விக் கூடம் நீ

வளம்பெற வழிசெய் தொழில்நுட்ப ஆற்றல்
அறிவொளி தந்திடும் புதிய விஞ்ஞானம்
மானிட பண்புகள் இனிதே கற்றிட
முகாமைத் திறன்களை விருத்தி செய்திட
சரஸ்வதி அருளால் அறிவினை ஈந்து
ஜெயவழி காட்டிடும் பல்கலைக் கூடம்
தேசத்தின் பெருமையை பரப்பிடும் உனை நாம்
சிரமது தாழ்த்தி வணங்கிடுவோமே

ஜயவர்தனபுர பல்கலைக் கழகம்
பத்ம தடாகத்தில் இலங்கிடும் கமலம் நீ

நம்முயிர் கல்விக் கூடம் நீ
உன்புகழ் திக்கெட்டும் பரவ
உன் கொடி உயரப் பறந்திடுமே
நம்முயிர் கல்விக் கூடம் நீ

## நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ் 1986 ஆம் ஆண்டில் கட்டளைச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், இலங்கையின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பத்து பட்டநிலை பின் படிப்பு நிறுவனங்களில் ஒன்றாகும். இது ஒப்பீட்டளவில் நிறுவப்பட்டு அதிக காலம் ஆகவில்லை என்றாலும், பட்டநிலை பின்படிப்பு நிறுவனங்களில் மிகப்பெரிய மாணவர் தொகையைக் கொண்ட நிறுவனமாகவும், நாட்டின் பல்கலைக்கழக அமைப்பில் உள்ள ஒரே சுய-நிதியளிப்பு உயர் கல்வி நிறுவனமாகவும் திகழ்கிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் இணைந்திருக்கும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் 60 ஆண்டுகளுக்கும் மேலானதாகும். உண்மையில், ஒருவர் உயர் கல்வியின் இடமாக, அதன் பல ஆண்டு கால நீண்ட வரலாற்றை கருத்தில் கொண்டால், அது இன்னும் மிகப் பழமையானது ஆகும். இந்த நிறுவனத்தின் வரலாறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திற்கு செல்கிறது. அதாவது 1873 ஆம் ஆண்டில் அதி வணக்கத்துக்குரிய ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள நாயக்க தேரர் வித்யோதயா (அறிவின் விழிப்பு என்று பொருள்) என்ற பெயரில் ஒரு பிரிவேனாவை (பௌத்த மற்றும் பண்டைய ஆய்வுகளுக்கான நிறுவனம்) நிறுவியபோது இந்த உயர் கல்வி நிறுவனத்திற்கு அடித்தளம் இடப்பட்ட காலம் வரை செல்கின்றது.

1958 ஆம் ஆண்டில், அது பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் இலங்கை வித்யோதய பல்கலைக்கழகமாக மறுசீரமைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் கீழ், அது இலங்கையின் புதிய நிர்வாகத் தலைநகரின் பெயரால், "ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்" எனப் பெயரிடப்பட்டது. தற்போது, அங்கு 16,000 க்கும் மேற்பட்ட முழுநேர மாணவர்கள் மானிடவியல், சமூக அறிவியல், பிரயோக விஞ்ஞானம், முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல், மருத்துவம், பட்டப்படிப்பு கற்கைகள், தொழில்நுட்பம், பொறியியல், இணை சுகாதார விஞ்ஞானம், பல் மருத்துவம், நகர மற்றும் நீர்வாழ் உயிரியல் வளங்கள் மற்றும் கணினி பீடங்களில் சேர்ந்து கல்வி பயில்கின்றனர்.



# நாம் யார் ?







அதிணக்கத்துக்குரிய ஹிக்கடுவே ஶ்ரீ சுமங்கள நாயக்க தேரர் | அதிவணக்கத்துக்குரிய வெலிவிட்டியே ஶ்ரீ சோரத்த தேரர் | கலாநிதி குணபால நானாயக்கார

மருத்துவவியல், கலை, அறிவியல், பொறியியல் மற்றும் சட்டம் போன்ற ஏனைய பாடங்களுடன் ஒப்பிடும்போது, இலங்கையில் உயர்கல்வித் துறையாக முகாமைத்துவக் கல்வி அண்மையில் தோன்றிய ஒன்றாகும். 1958 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் வித்தியோதய பிரிவேனாவுக்கு (கிழக்கத்தியக் கற்றலுக்கான உயர் கல்வி நிறுவனம்) பல்கலைக்கழக அந்தஸ்து வழங்கப்பட்டதன் மூலம் இந்த பயணம் 1959 இல் இலங்கை வித்தியோதய பல்கலைக்கழகம் தாபிக்கப்பட்டதன் மூலம் தொடங்கியது. வித்தியோதய பல்கலைக்கழகத்தின் ஸ்தாபக உபவேந்தர் அதி வணக்கத்துக்குரிய வெலிவிட்ட ஶ்ரீ சோரத்த நாயக தேரரின் தொலைநோக்குடன் கூடிய தலைமையின் கீழ், இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்புக்கு முகாமைத்துவக் கல்வியை அறிமுகப்படுத்துவது உட்பட புதிய திசைகளின் ஊடாக கல்வியை விரிவுபடுத்துவதற்கு தெளிவான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் (PIM) என்பது ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்துடன் இணைந்த, பகுதி தன்னாட்சி நிறுவனமாகும். முகாமைத்துவம் மற்றும் நிர்வாக ஆய்வுகளின் பல்வேறு துறைகளில் பட்டநிலை பின்படிப்புக்கான ஆலோசனைகள், பயிற்சி, ஆய்வு மற்றும் அபிவிருத்தி ஊடாக இலங்கையில் முகாமைத்துவத் துறையில் உயர்கல்வி மற்றும் தொழில்முறைத் தன்மையை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும். தற்போது, இது தொழில்முறை முகாமைத்துவக் கல்வி மற்றும் பயிற்சியின் தேசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. மேலும் ஆயிரக்கணக்கான உயர் மட்ட முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டிற்கான சவாலான வாய்ப்புகளை வழங்குகிறது. இலங்கையின் உயர் முகாமைத்துவக் கல்வியின் முன்னோடியாக இருப்பதால், முகாமைத்துவ அறிவைப் புத்தாக்கம் செய்தல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும், உயர் கற்றல் விருப்பங்களைத் தேடுபவர்களுக்கும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் வழிகாட்டுதலை வழங்குகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) பயணம் சுவாரஸ்யமானதும் முக்கியமான நிகழ்வுகளையும் உள்ளடக்கியதாகும். இது 1981 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் ஶ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் (கங்கொடவில, நுக்கேகொட) ஶ்ரீ சுமங்கல கட்டிடத்தில் ஓர் அர்ப்பணிப்புள்ள கல்வியாளரின் (கலாநிதி குணபாலா நாநாயக்கார) தலைமையில் தொடங்கப்பட்டது. கனடாவின் ஒட்டாவா மற்றும் கார்ல்டன் பல்கலைக்கழகங்களுடனான ,ணைப்புத் திட்டத்தின் ஊடாக ,ந்த பட்டநிலை பின்படிப்பு கற்கைப் பிரிவால் வணிக நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA) / பொது நிர்வாக முதுமாணிப்

பட்டம் (MPA) கற்கைநெறிகள் ஆரம்பித்தலை தொடங்கப்பட்டது. கல்வி நிகழ்ச்சிகளின் பிரபல்யம் காரணமாக அது 1986 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில், நாட்டின் உயர்மட்ட முகாமைத்துவக் கல்விக்கான முதன்மை நிறுவனமாக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) தாபிப்பதற்கு வழிவகுத்தது.

சில மாதங்களுக்குப் பின்னர், 1986 ஏப்ரல் மாதத்தில், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) தெஹிவளையில் (கொழும்புக்கு அருகில்) அமைந்துள்ள ஒரு சிறிய, இரண்டு மாடி கட்டிடமான ஸ்டார் இன்ஸ் ஹோட்டலுக்கு மாற்றப்பட்டது. அந்த இடத்தில் அது அடுத்த பத்து ஆண்டுகளுக்கு இயங்கியதுடன், அதன் செயல்பாடுகள் மற்றும் செயல்திறனில் விரைவான வளர்ச்சியைப் பதிவு செய்தது. 1995 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், ஒரு நிலத்தைக் கைப்பற்றுதல் மற்றும் அதிநவீன கட்டிட வளாகத்தை கட்டிய பின்னர், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM), கொழும்பு 8, லெஸ்லி ரணகல மாவத்தை, இலக்கம் 28 இல் அமைந்துள்ள அதன் சொந்த கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது. அன்று தொடக்கம் இருபத்தேழு ஆண்டுகள் கடந்துள்ளதுடன், அந்த காலப் பகுதியில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) பௌதீக மற்றும் மனித வளங்கள், வழங்கப்படும் சேவைகள், வெளியீடுகள் மற்றும் மிகை ஆகியவற்றின் அடிப்படையில் வேகமாக வளர்ந்துள்ளது. மேலும் அதன் செயல்பாடுகள் இலங்கை கடற்கரைகளுக்கு அப்பாலும் விரிவடைந்துள்ளன.

முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் இலங்கையின் உயர்மட்ட முகாமைத்துவக் கல்வித் துறையில் பல முதன்மையான சந்தர்ப்பங்களை உருவாக்கியுள்ளது. பரந்த அளவிலான செயல்பாடுகள் ஊடாக விரிவாக்கப்பட்டுள்ள இந்த முன்னோடி நிறுவனம், கல்வித்துறை, தொழில்துறை, நிர்வாகிகள், தொழில்முனைவோர், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் ஒரு கலங்கரை விளக்கமாகத் திகழ்கிறது. அது உருவாக்கிய முதன்மையான சந்தர்ப்பங்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கவையாகும்:

- வெளிநாட்டு ஒத்துழைப்புடன் வழங்கப்படும் முதலாவது வணிக நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA) / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA)*
- வணிக நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA) / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA) கற்கைநெறியின் கட்டாய அம்சமாக அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது தங்குமிடப் பயிற்சி பட்டறை (1982 முதல்)
- இலங்கை பல்கலைக்கழகமொன்றினால் நடத்தப்பட்ட முதலாவது முகாமைத்துவம் / நிறைவேற்று அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (1990)
- இலங்கையில் நடைபெற்ற முகாமைத்துவ ஆய்வுகள் தொடர்பான முதலாவது ஆராய்ச்சி மாநாடு (1992)
- இலங்கை பல்கலைக்கழக கட்டமைப்பில் வெளியிடப்பட்ட முதலாவது கல்விசார் பதவியணி கையேடு (1994)

- சொந்தக் கட்டிடத்தைக் கொண்ட முதலாவது இலங்கை பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் (1995)
- இலங்கையில் தொடங்கப்பட்ட முகாமைத்துவ ஆய்வுகள் தொடர்பான முதலாவது கல்விசார் சஞ்சிகை (1996)
- நிதி சுதந்திரத்தை அனுபவிக்கும் முதலாவது (மற்றும் ஒரே) இலங்கை பல்கலைக்கழகம் (1998 முதல்)
- சுனாமி பேரழிவின் போது நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டத்தில் ஈடுபட்ட முதலாவது இலங்கை பல்கலைக்கழகம் (2005)
- வெளிநாட்டில் தனது கற்கைநெறிகளை (ஆடீயு) வழங்கும் முதலாவது இலங்கை பல்கலைக்கழகம் (2007)
- சூப்பர் பிராண்ட் (2007) மற்றும் ஐளுழு 9001: 2008 தரநிலையைப் பெற்ற முதலாவது இலங்கை பல்கலைக்கழகம்
- தொழில்சார்ந்த வணிக நிர்வாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை ஆரம்பித்த முதலாவது இலங்கை பல்கலைக்கழகம் ஐசுங்க நிர்வாகம் (2009) மற்றும் சர்வதேச வணிகம் மற்றும் வழங்கல் (2010)
- தனது மிகையில் ஒரு பகுதியை பொது திறைசேரியிடம் வழங்கும் முதலாவது இலங்கை பல்கலைக்கழகம் (2022) மற்றும்,
- ஆண்டின் 361 நாட்களும் திறந்திருக்கும் முதலாவது (மற்றும் ஒரே) இலங்கை பல்கலைக்கழகம்.

இலங்கையர் வாழ்க்கையின் தனிநபர், நிறுவன மற்றும் சமூக மட்டங்களில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் மகத்தான பங்களிப்பை வழங்கியுள்ளது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தால் அறிவூட்டப்பட்ட ஏராளமான முகாமையாளர்கள் மற்றும் நிர்வாகிகள் வணிகத் தலைவர்கள், உயர் மட்ட நிர்வாகிகள்/ முகாமையாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர் என தங்கள் தொழில்களில் அழியாத முத்திரையை பதித்துள்ளனர். பட்டப்படிப்பு கற்கைநெறியால் ஏற்படுத்திய மாற்றத்தக்க மாற்றமானது, அவர்களின் நிறுவனங்களை சிறப்பை நோக்கி வழிநடாத்த அவர்களுக்கு உதவியுள்ளது, இதன் விளைவாக பொருளாதாரம் மற்றும் சமூகத்தில் சாதகமான தாக்கம் ஏற்பட்டுள்ளது. மேலும், நவீன முகாமைத்துவ அறிவில் பயிற்சி பெற்ற இரண்டாம் நிலை முகாமையாளர்கள் தங்கள் பணியிடங்களின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளனர். தனித்துவமான ஆனால் முக்கியமான துறையில், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் ஆராய்ச்சிப் பணிகள், ஆலோசனை சேவைகள் மற்றும் வெளியீடுகள், இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாட்டில் முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய அறிவை விரிவாக்க உதவியுள்ளன. மேலும், அதன் சட்டப்பூர்வ பொறுப்புகளுக்கு மேலதிகமாக, பல செல்வாக்குமிக்க நிறுவன சமூகப் பொறுப்புணர்வுத் திட்டங்கள் மூலம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவியுள்ளது. நிதி

ரீதியாக சுதந்திரமான நிறுவனமாக இருப்பதுடன், தேவைப்படும்போது அரசாங்க நிதிகளுக்கு கூட பங்களிப்பதில் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பெருமிதம் கொள்கிறது. எல்லாவற்றிற்கும் மேலாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நாட்டின் ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு பின்பற்றத்தக்கதான ஒரு முன்மாதிரியாகும்.

இலங்கையின் முதலாவது வணிக நிர்வாக முதுமாணிப் பட்டம் (MBA) / பொது நிர்வாக முதுமாணிப் பட்டம் (MPA) கற்கைநெறிகளை வழங்கிய பெருமை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு உரியகும். 1968 இல் தொடங்கப்பட்ட இந்த கற்கைநெறிகள் ஏழு வருடங்களுக்குப் பின்னர் 1975 இல் முடிவுறுத்தப்பட்டது.



1983 ඇතුළත් වූ ශිෂ්‍ය කණ්ඩායම සිය උපාධි ප්‍රදානෝත්සවයේ දී- බණ්ඩාරනායක සම්මන්ත්‍රණ ශාලාව, කොළඹ

# நிருவாகம்

## நிறுவனத்தின் ஆளுகைச் சபை

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் 1976 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் 24அ பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் கலந்தாலோசித்து, உயர் கல்வி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சராக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதியினால் வெளியிடப்பட்ட கட்டளையின் மூலம் 1986 சனவரி 1 ஆம் திகதி சட்டரீதியாக தாபிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த கட்டளை 1985 திசெம்பர் 24 ஆம் திகதி 381/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அதிகாரங்களும் செயல்பாடுகளும், அதன் அதிகாரிகள் மற்றும் அவற்றின் அமைப்பு, கடமைகள் மற்றும் செயல்பாடுகள் இலங்கை பாராளுமன்றத்தால் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஒழுங்கு விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தற்போதைய நடைமுறையில் உள்ள ஒழுங்கு விதிகள் 2018 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்கு விதிகளாகும். இது இதற்கு முந்தைய 1985 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் மற்றும் 1996 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க ஒழுங்கு விதிகள் ஆகியவற்றை இரத்துச் செய்கின்றது. சந்தைப்படுத்தல், மனித வள முகாமைத்துவம், நிதி, மூலோபாய முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு முகாமைத்துவத் துறைகளில் மாணவர்களைச் சேர்க்கவும் பட்டநிலை பின்படிப்பு கல்வியை வழங்கவும் முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்திற்கு அதன் ஒழுங்கு விதிகள் அதிகாரம் வழங்குகின்றன. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் வழங்கப்படும் பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறிகள் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் செனட் சபை மற்றும் ஆளுகைச் சபையின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

முகாமைத்துவ முதுகலை நிறுவனம் தனது நடவடிக்கைகளின் வருடாந்த அறிக்கையைத் தயாரிக்கின்றது. வருடாந்த கணக்கு அறிக்கை இலங்கை கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு செய்யப்படுகின்றது. வருடாந்த அறிக்கை மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை இலங்கை பாராளுமன்றத்தின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முகாமைத்துவ சபை இலங்கை பாராளுமன்றத்திடம் பொறுப்பு கூறுதல் வேண்டும். விளக்கங்களைப் பெறவும் ஆலோசனைகளை வழங்கவும் முகாமைத்துவ சபை பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் பற்றிய குழுவுக்கு (COPE) அழைக்கப்படலாம். எனவே, முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனத்தின் ஒட்டுமொத்த செயற்பாடுகளும் இலங்கை பாராளுமன்றத்தால் அவதானிக்கப்படுகின்றது.

முகாமைத்துவ முதுகலை நிறுவனத்தில், மூலோபாயத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு குறிக்கோள் மற்றும் மூலோபாயத்திற்கும், பிரதான செயல்திறன் குறிகாட்டிகள் (KPIs) மற்றும் பொறுப்புகூற வேண்டிய நபர்களை அடையாளம் காணப்படுகிறது. மூலோபாயத் திட்டத்தின் அடிப்படையில் வருடாந்திர செயல்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன, மேலும் ஒவ்வொரு மூலோபாயத்தின் கீழும் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கியமான செயல்பாடுகள் பட்டியலிடப்படுகின்றன. ஒவ்வொரு செயல்பாட்டிற்கும் முக்கியமான செயல்திறன் குறிகாட்டிகள் மற்றும் ஒவ்வொரு மூலோபாய நடவடிக்கையையும் செயல்படுத்துவதற்கு பொறுப்பான நபரும் அடையாளம் காணப்படுகிறது. இந்த முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளின் சாதனைகள் பணிப்பாளரால் அவதானிக்கப்படுவதுடன், அவ்வப்போது முகாமைத்துவ சபைக்கு தெரிவிக்கப்படுகின்றது. சில செயற்பாட்டு விடயங்கள் தொடர்பான முடிவுகள் பணிப்பாளர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர், இரண்டு நிதியாளர்கள், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர் மற்றும் இரண்டு சிரேஷ்ட பீட உறுப்பினர்களைக் கொண்ட முகாமைத்துவக் குழுவால் எடுக்கப்படுகின்றன.

ஆராய்ச்சி தொடர்பான செயல்பாட்டு நடவடிக்கைகள் ஆராய்ச்சி ஆலோசணைக் குழுவால் வழங்கப்படும் வழிகாட்டுதலின் கீழ் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளரால் மேற்கொள்ளப்படுவதுடன், அந்தக் குழுவானது பணிப்பாளர், ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்பு கற்கை பீடத்தின் பீடாதிபதி மற்றும் முகாமைத்துவ சபையின் நியமன உறுப்பினர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது.

தர உத்தரவாத செயற்பாடுகள், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தால் மேற்கொள்ளப்படுகின்றது. செயல்பாட்டுக் குழு தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் குழுவாகுவதுடன், இதில் பணிப்பாளர், தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் தலைவர், கற்கைநெறி ஒருங்கிணைப்பாளர்கள், ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர், ISO ஒருங்கிணைப்பாளர், உதவி நூலகர், சிரேஷ்ட உதவிப் பதிவாளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர்/தகவல் தொழில்நுட்ப அலுவலர் ஆகியோரைக் கொண்டமைந்துள்ளது. இந்தக் குழுவின் மாதாந்திரக் கூட்டங்களில் அனைத்து தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நடவடிக்கைகள் விவாதிக்கப்பட்டு தேவையான முடிவுகள் எடுக்கப்படுகின்றன. சில முடிவுகள் அனுமதிக்காக முகாமைத்துவ சபை மற்றும்/அல்லது கல்வி சபைக்கு தெரிவிக்கப்படுகின்றன.

இந்து நூலகத்தின் செயல்பாட்டு நடவடிக்கைகள், பணிப்பாளரிடம் நேரடியாக அறிக்கையி-டுவதுடன், உதவி நூலகரால் மேற்கொள்ளப்படுகின்றது. நூலகத்தின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார நிலையத்தின் குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தேவையான வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.

இந்தக் குழுவில் எடுக்கப்படும் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பான முடிவுகள் பீடாதிபதி கூட்டங்களில் பீடத்திற்கு அறிவிக்கப்படுகின்றன. இந்தக் கூட்டங்களில் பீட உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் கருத்துகள் செயல்பாட்டு நடவடிக்கைகளில் உரியவாறு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

## *முகாமைத்துவ சபை*

நிறுவனத்தின் கல்வி மற்றும் நிறைவேற்று நிறுவனமான தற்போதைய முகாமைத்துவ சபை பின்வருமாறு ஆகும்.

கலாநிதி திரு. அசங்க ரணசிங்க
(தலைவர்)
பணிப்பாளர், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்

திரு. டி. எம். ஜே. பண்டார
பணிப்பாளர், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், நிதி அமைச்சு

கலாநிதி திரு. ஹர்ஸ கப்ரால்
தலைவர், தேசிய சேமிப்பு வங்கி

திரு. ரவி ஜயவர்தன
குழு பிரதம நிறைவேற்று அலுவலர்,
மெலிபன் பிஸ்கட் உற்பத்தி (தனியார்) நிறுவனம்

கலாநிதி துஸான் ஜயவிக்கிரம
பீடாதிபதி, முகாமைத்துவ கல்வி மற்றும் வணிக பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர் திருமதி நில்மிணி லியனகே
பீடாதிபதி, தொழில்நுட்ப பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர் திரு ரவி லியனகே
தலைவர், ரைகம் மார்க்கெட்டிங் சேர்விசஸ் (தனியார்) நிறுவனம்

பேராசிரியர் திரு. ரசிக பெரேரா
பீடாதிபதி, பட்டநிலை பின்படிப்பு பீடம், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

திரு. தீபால் சூரியாராச்சி
AIA குழுமம் நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்

திரு. ரோஹித்த உடுவாவல
மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு

திரு. லலித் வீரத்துங்க
அதிமேதகு சனாதிபதியின் முன்னாள் செயலாளர்,

## கல்விசார் சபை

நிறுவனத்தின் வணிக நிர்வாக கல்விசார் சபை மற்றும் பொது நிர்வாக ஆய்வு கல்விசார் சபையால் ஆண்டு முழுவதும் கற்பித்தல், தேர்வுகள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தியதுடன், பின்வரும் உறுப்பினர்கள் இந்த சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தினர்.

கலாநிதி திரு. அசங்க ரணசிங்க
(தலைவர்)
பணிப்பாளர், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்

சிரேஷ்ட பேராசிரியர் திரு அஜந்த தர்மசிறி

ஒருங்கிணைப்பாளர், வணிக நிர்வாகம் தொடர்பான தத்துவ கலாநிதி (DBA கற்கைநெறி), முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்

கலாநிதி திரு. ரவி பெர்னாண்டோ

தலைவர், உலகளாவிய நிறுவனங்களின் மூலோபாய நிலைப்பாடு

பேராசிரியர் திரு. மங்கள பொன்சேகா

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கணக்கியல் தொடர்பான முன்னாள் பேராசிரியர்

வைத்தியர் திரு. அனில் ஜாசிங்க

செயலாளர், சுற்றுச்சூழல் அமைச்சு

பேராசிரியர் திரு. ஏ. கே. எல். ஜயவர்தன

ஒருங்கிணைப்பாளர், ஆராய்ச்சி, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம்

சிரேஷ்ட பேராசிரியர் திரு.பத்மலால் மானகே

துணைவேந்தர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

பேராசிரியர் திரு. ட்ரெவர் மெண்டிஸ்

வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டநிலை பின்படிப்பு பட்டம் (EMBA) திட்டம், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்

பேராசிரியர் திரு.ட்ராவிஸ் பெரேரா

ஒருங்கிணைப்பாளர், கலாநிதி பட்டப்படிப்பு திட்டம், முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்

பேராசிரியர் திரு.ஜயந்த ரத்னசேகர

துணைவேந்தர், ICST பல்கலைக்கழகம்

பேராசிரியர் திரு.ஆர். எச். எஸ். சமரதுங்க

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு சனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர்

கலாநிதி திரு. அருள் சிவகனநாதன்

முன்னாள் தலைமை நிறைவேற்று அதிகாரி, ஹேலீஸ் பிசினஸ் சொலியுஷன்ஸ் இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட்

லலித் வீரதுங்க

அதிமேதகு சனாதிபதி அவர்களின் முன்னாள் செயலாளர்,

# நிறுவனக் கட்டமைப்பு



# நிறுவனத்தின் பலம்

முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் அந்தந்த துறைகளில் புகழ்பெற்ற நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன், அவர்கள் வகுப்பறைக்கு அறிவு மற்றும் அனுபவத்தைக் கொண்டு வருகிறார்கள். வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைக்கு அர்ப்பணிப்புடன், எங்கள் ஆசிரியர்கள் ஒரு ஒத்துழைப்பு கற்றல் சூழலை வளர்க்கின்றார்கள். இந்த சூழலில், கற்றல் பங்காளிகள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் கற்றல் முயற்சிகளின் எல்லைகளைத் தாண்டிச் செல்ல ஊக்குவிக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட ஆலோசனை, கூட்டுத் திட்டங்கள் மற்றும் பல்துறை கருத்தரங்குகள் மூலம், எங்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் கல்விப் பயணத்தை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றார்கள். மேலும் அவர்கள் அந்தந்த துறைகளில் விரும்பப்படும் தலைவர்களாக உருவெடுப்பதை உறுதி செய்கிறார்கள்.

தற்போது, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் வழங்கும் கற்கைநெறிகள் பின்வருமாறு ஆகும்:

- வணிக நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MBA)*
- வரியிடல் தொடர்பான வணிக நிர்வாக முதுமாணி பட்டம் (MBA-T)
- வணிக நிர்வாகம் தொடர்பான நிறைவேற்று முதுமாணி பட்டம் (EMBA)**
- சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம் தொடர்பான வியாபார நிருவாக முதுமாணி பட்டம் (MBA-CIT)
- கல்வி நிர்வாகம் தொடர்பாக பொது நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MPA-EM)
- தத்துவ கலாநிதி பட்டம் (Ph.D)
- வியாபார நிர்வாகம் தொடர்பான கலாநிதி பட்டம் (DBA)
- முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா (PGDip-Mgmt)
- கல்வி முகாமைத்துவம் தொடர்பான பொது நிர்வாகத்தில் முதுமாணி பட்டம் (MPA-EM)
- முகாமைத்துவம் தொடர்பான முதுமாணி டிப்ளோமா (PDM)

* வணிகம் தொடர்பான முதுமாணிப் பட்டப்படிப்பு (MBA) ஐக்கிய அராபி எமிர் அரசு, கட்டார், குவேட், ஓமான் மற்றும் பஹரேன் ஆகிய நாடுகளுக்கு வழங்கப்படுகிறது.

** 2023 தொடக்கம் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் சீன மாணவர்களுக்கு வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்றுப் முதுமாணிப் பட்டம் (EMBA) வழங்குவதற்கு தொடங்கியுள்ளது.

# நிறுவனத்தின் நிறுவன ஆளுகை

1978 ஆம் ஆண்டு 16 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் மூலம் வழங்கியுள்ள தன்னாட்சி அதிகாரத்துடன் கூடிய முதுமாணி பட்டப் படிப்பு நிறுவனம், ஒரு அரச நிறுவனம் என்ற வகையில் உயர் ஆளுகை தரநிலைகளை பராமரிக்கின்றது. முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆளுகை கட்டமைப்பு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் பல்கலைக்கழக ஆளுகை கட்டமைப்பிற்கு ஏற்ப கட்டாய மற்றும் தன்னார்வ கட்டமைப்புகளுக்கு இணங்க உருவாக்கப்பட்டுள்ளன.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் "வணிக பாடசாலையாக செயல்படும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் (UGC) நிறுவனத்திற்கு வழிகாட்டுவதற்காக நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபையின் (BOM) உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்களின் பீடாதிபதிகள், திறைசேரி அலுவலர் மற்றும் கல்வி அமைச்சின் அலுவலர் ஆகியோரைக் கொண்ட முகாமைத்துவ சபையின் உறுப்பினர்கள் நிறுவன உலகை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். அனைத்து கல்வி கற்கைநெறிகளுக்கும் வழிகாட்டுதல் மற்றும் பாடத்திட்டம் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் கல்விசார் சபை உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். கல்விசார் சபையின் உறுப்பினர்களில் பல்கலைக்கழக பேராசிரியர்கள், நிறுவன உலகைச் சேர்ந்த கல்விமான்கள் மற்றும் பல்வேறு கல்வித் திட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட பீடாதிபதிகள் உட்பட பலர் உள்ளனர்.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவன சட்டத்தின்படி, அனைத்து நிதி முகாமைத்துவ செயற்பாடுகள் திறைசேரி சுற்றறிக்கைகளின் அடிப்படையில் அரசு கணக்காய்வின் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன. கூடுதலாக, முகாமைத்துவ சபையின் துணைக்குழுக்களான நிதிக்குழு மற்றும் கணக்காய்வு குழு என்பன முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் நிதி முகாமைத்துவத்தை கிட்டியதாக அவதானித்து ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக முகாமைத்துவத்திடம் அறிக்கையிடுகின்றன. முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் சுமுகமான செயற்பாடுகளை சான்றுப்படுத்துவதற்காக, முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலின்படி முகாமைத்துவம் தவறாமல் கூடுகிறது. கல்வி சபையும் தேவைப்படும்போது கூடுவதுடன், கல்வி விடயங்களை கலந்துரையாடுவதற்காக ஆண்டுக்கு குறைந்தது நான்கு முறை கூட்டங்களை நடாத்துவதுடன், அத்தகைய கூட்டங்களின் அறிக்கைகள் தேவையான அனுமதிக்காக முகாமைத்துவ சபையிடம் அனுப்பப்படுகின்றன.

வேறு கண்ணோட்டத்தில் பார்த்தால், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனமானது, உலகளாவிய மாற்றங்களுக்கு இணையாக மூலோபாயங்களை திட்டமிடல், சந்தை தகவல்களை சேகரித்தல் மற்றும் கற்பித்தல் முறைகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் போது, முன்னாள் மாணவர்கள், நிறுவனத் துறை மற்றும் பிற கூட்டாளர்கள் அத்துடன் திறைசேரி, கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) உட்பட அனைத்து முக்கிய

பங்குதாரர்களையும் தொடர்புபடுத்துகின்றது. எனவே, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் அதன் ஆளுகை கட்டமைப்பு, ஒழுங்குமுறை கட்டமைப்பு மற்றும் பங்குதாரர்களின் முகாமைத்துவ செயல்முறையை திறம்பட செயல்படுத்தியுள்ளது.

# இடர் முகாமைத்துவம்

நவீன வணிகவியல் பாடசாலையொன்றாக கல்வியை வினைத்திறனாக வழங்குவதற்கு இடர் மதிப்பீடு மற்றும் குறைத்தல் மிகவும் முக்கியமானது என்று முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் நம்புகின்றது. எனவே, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் சந்தை தகவல்கள், அதன் தற்போதைய திட்டங்கள் மற்றும் நிதி இடர், முகாமைத்துவ இடர், சந்தை இடர், நற்பெயர் இடர், நாடு தொடர்பான இடர்கள், நாணய மாற்று விகித இடர் மற்றும் உலகளாவிய இடர்கள் போன்ற பல்வேறு இடர்களை தவறாமல் மதிப்பிடுகிறது.

வெளிநாட்டுச் சந்தையில் வணிக நிர்வாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்புபட்டத்தை (MBA) செயற்படுத்துதல் மற்றும் இத்தகைய சந்தைகளிலிருந்து வெளிநாட்டு நாணயத்தில் கட்டணங்களைப் பெறுதல் காரணமாக, வெளிநாட்டு நாணய ஏற்ற இறக்கங்களின் நிலையற்ற தன்மை, பேரினப் பொருளாதார பின்னடைவுகள் மற்றும் நிலையற்ற தன்மையின் அளவு காரணமாக, ரூபாய் பணப்புழக்கத்திற்கு மட்டுமல்லாமல், கட்டண நுழைவாயில்கள் மூலம் வெளிநாட்டு நாணய வரவுகளுக்கான இடர் மதிப்பீடு நெருக்கமாக கண்காணிக்கப்படுகிறது. பிரதி நிதி அதிகாரி மற்றும் இயக்குனர் நிதி இடரை நெருக்கமாக அவதானிக்கப்படுகிறது. பிரதி நிதியாளர் மற்றும் பணிப்பாளர் நிதி இடர்களை அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கின்றனர். புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் அவர்களின் பயனுள்ள நடவடிக்கையின் காரணமாக, நிறுவனம் அனுபவித்த செயற்பாட்டு இழப்புகள் தற்போது குறைந்துள்ளன, மேலும் இடர் மதிப்பீட்டிற்கான நேர்மறையான அணுகுமுறை மட்டுமல்லாமல், அடையாளம் காணப்பட்ட நிதி இடர்களை உடனடி நடவடிக்கைகளுடன் எவ்வாறு குறைப்பது என்பதையும் போதுமான அளவு சுட்டிக்காட்டுகின்றது.

மே 8 ஆம் திகதி புதிய பணிப்பாளரை நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் சுமூகமான தலைமைத்துவ மாற்றம் ஏற்பட்டது. இது அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு நிலையான நிர்வாகத்தை உறுதி செய்கிறது. இருப்பினும், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பல வெளிப்புற காரணிகள் சவால்களை ஏற்படுத்துகின்றன. இவற்றில் நாட்டின் தற்போதைய நிலையற்ற தன்மை, வரவிருக்கும் தேர்தல்கள், அறிவுசார் வெளியேற்றம், நிதி நிலையற்ற தன்மை மற்றும் குறைந்த வாங்கும் சக்தி ஆகியவை அடங்கும். இந்த காரணிகள் புதிய கற்கைநெறிகளின் வெற்றி, வருவாய் உருவாக்கம் மற்றும் ஒட்டுமொத்த பொருளாதார நிலைத்தன்மை ஆகியவற்றை பாதிக்கலாம். 36 ஆண்டுகால பெருமைமிக்க வரலாற்றைக் கொண்ட முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தற்போது பல சவால்களை எதிர்கொள்கிறது. கல்வித்துறையின் கட்டுப்பாடற்ற தன்மை மற்றும் பல்வேறு பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகளை வழங்கும் அங்கீகாரம் இல்லாத மற்றும் தற்காலிக நிறுவனங்களின் விரைவான அதிகரிப்பு ஆகியவை அவற்றில் அடங்கும். இந்த வளர்ச்சிகள் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு

நிறுவனத்தின் தொடர்ச்சியான வெற்றிக்கு அதிக சந்தை இடர் மற்றும் கடுமையான போட்டியை உருவாக்குகின்றன. கூடுதலாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம், தனது பெரும்பாலான வணிக நிர்வாக பட்டப்பின் படிப்பு கற்கைநெறிகள் தற்போது வழங்கும் பிராந்தியமான மத்திய கிழக்கில் போர் மூழும் சாத்தியக்கூறு காரணமாக சாத்தியமான உலகளாவிய இடரையும் காண்கின்றது.

## எங்கள் பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்கும் முறை

## நிறுவனத்தின் மூலோபாய எதிர்கால திசை: முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் சிறப்பின் அடிப்படை

| | | | | |
|---|---|---|---|---|
| • உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரம்<br>• முன்மாதிரியான ஆளுகை<br>• ஊக்கமளிக்கும் நிலைத்தன்மை<br>• புதுமையான டிஜிட்டல் சிறப்பு | → | கற்பித்தல் மற்றும் கற்றல் | → | “புதிய உலகத்திற்கான” வணிகப் பாடசாலை |
| | → | ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள் | → | |
| | → | ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டாண்மைகள் | → | |
| | → | திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ மேம்பாடு | → | |
| சாதகமாக்கும் காரணி (Enabler) | | மதிப்பு ஊக்கி (Value Drivers) | | வெற்றியின் நோக்குகை |

| | |
|---|---|
| பெறுமதி ஊக்கி 1 – புதிய கற்பித்தல் மற்றும் கற்றல் | அனைத்து கல்வித் திட்டங்களிலும், உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவத்தை வழங்குதல். |
| பெறுமதி ஊக்கி **2 –** ஆழமான புரிந்துணர்வுடன் கூடிய பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள். | கைத்தொழில் தேவைகளுடன் பொருத்தமான, ஏற்புடைய மற்றும் காலோசிதமான வகையில் PIM ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகளில் விடயவெல்லையை மேம்படுத்தல் |
| பெறுமதி ஊக்கி 3– ஒத்துழைப்புகள் மற்றும் கூட்டாண்மைகளை வளப்படுத்தல் | கைத்தொழில் உயர்கல்வி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் சங்கங்களுடன் ஒத்துழைப்பு கூட்டாண்மையை விருத்தி சயெ்தல் |
| பெறுமதி ஊக்கி 4 – எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ அபிவிருத்தி. | தனியார் மற்றும் அரசு துறை அமைப்புகளின் பொருட்டு ஆற்றல் விருத்தி மற்றும் தலைமைத்துவ அபிவிருத்திக்காக தலைமைத்துவம் வழங்குதல் |

## *பெறுமதி ஊக்கி (Value Driver) 1 –* புதிய கற்பித்தல் மற்றும் கற்றல்

கொள்கை என்பது முடிவுகளை வழிநடாத்துவதற்கும் தர்க்கரீதியான விளைவுகளை அடைவதற்கும் வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட வழிகாட்டுதல் அமைப்பாகும். கொள்கை என்பது ஒரு நோக்கத்தின் வெளியீடு ஆவதுடன், இது ஒரு செயல்முறை அல்லது நெறிமுறையாக, குறிப்பாக ஒரு அமைப்பிற்குள் ஒரு ஆளும் அமைப்பால் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல்கலைக்கழகங்களும் நிறுவனங்களும் இதற்கு விதிவிலக்கல்ல. கொள்கைகள் அகநிலை மற்றும் விடயத்துடன் தொடர்புடைய முடிவுகளை எடுப்பதில் உதவக்கூடும்.

இந்த கருத்தில் இருந்து தொடங்கியுள்ள முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம், பின்வரும் நோக்கங்களுடன் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு கொள்கையை (TLAP) முழுமையாக உருவாக்கி செயல்படுத்தியுள்ளது.

- முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு செயல்முறைக்கான வழிகாட்டுதல்களை முறையான மற்றும் விரிவான முறையில் வழங்குதல்.
- அனைத்து மாணவர்களுக்கும் அறிவு மற்றும் அவர்களின் அபிலாஷைகளை மேம்படுத்துவதற்கான தரநிலைகளைத் தொடர்ந்து உயர்த்துதல்.
- பல்வேறு கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு உத்திகளை செயல்படுத்த ஆசிரியர்களை ஊக்குவித்தல்.
- நிறுவனத்தின் கற்பித்தல் அதன் மாணவர்கள் மீது நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதை உறுதிப்படுத்துதல், "சிறப்பான" கற்றல் அனுபவங்களின் சதவீதத்தை தொடர்ந்து அதிகரிப்பதை உறுதிப்படுத்துதல்.
- உலகளாவிய அளவில், மூலோபாய ரீதியாக திட்டமிடப்பட்டு, மாணவர்கள் எதிர்பார்க்கப்படும் கற்றல் விளைவுகளை அடைவதற்காக, வடிவமைக்கப்பட்ட கற்பித்தல் மற்றும் கற்றலுடன் மதிப்பீடுகள் ஒத்துப்போகின்றன என்பதை உறுதிப்படுத்துதல்.
- உள்ளூர் உணர்வுடன் உலகளாவிய தலைவர்களை உருவாக்குவதற்கு பங்களித்தல்.

முக்கியமான கொள்கை கோட்பாடுகளில் ஒன்றாக, முகாமைத்துவ பட்டப்பின்படிப்பு நிறுவனம் கல்வி அறிவை வழங்குதல், அறிவைப் பயன்படுத்துதல், திறன்களை மேம்படுத்துதல் மற்றும் அறிவைப் தக்கவைத்தல் ஆகியவற்றை உறுதி செய்கின்றது. இந்த கொள்கை பல துறைகளை உள்ளடக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. பதின்மூன்று பக்க ஆவணத்தின் சுருக்கம் பின்வருமாறு ஆகும்.

### பாடத்திட்ட உருவரை (The Course Outlines)

பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மதிப்பாய்வுக் கொள்கையுடன் (CDRP) ஒருங்கிணைந்து, கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் (TLAP) பாடத்திட்ட உருவரையுடன் (CO) தொடங்குவதுடன், இது நிகழ்ச்சித்திட்ட கற்றல் நோக்கங்களை (PLOs) விபரிக்கப்படுவதுடன், இந்த நோக்கங்கள் ஒவ்வொரு பாடநெறிக்கான கற்றல் விளைவுகளுக்குள் (LOs) எவ்வாறு ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன என்பதை விளக்குகின்றது. இந்த செயன்முறை

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) பணி அறிக்கையுடன் ஒத்துப்போகின்றது. பாடத்திட்ட உருவரையில் (The Course Outlines) பகிர்ந்தளிக்கும் முறை, அமர்வு எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட கல்வித் துறை மற்றும் மாணவர்களுக்கான எதிர்பார்ப்புகள் போன்ற தகவல்களை உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த எதிர்பார்ப்புகளுக்கு தெளிவான அளவுருக்கள், மதிப்பீட்டு கட்டமைப்பு, அடிப்படை பாடநூல் மற்றும் தேவையான கூடுதல் வாசிப்பு, அத்துடன் பாடநெறிக்காக பரிந்துரைக்கப்பட்ட சாத்தியமான ஆராய்ச்சி பகுதிகள் ஆகியவை துணைபுரிகின்றன. அத்துடன் பாத்திட்டத்திற்கான சாத்தியமான ஆராய்ச்சி பகுதிகள் அதற்கு பொதுவாக மற்றும் அதிகமாக ஏற்புடைதாகும் கட்டுரைகள், காப்பியத் திருட்டு ஆகிய நிலைமைகளை குறைப்பதற்கான நடைமுறைகள் மற்றும் முறையான கல்வி நடத்தைக்கான எதிர்பார்ப்புகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**வடிவமைப்பு மற்றும் சுருக்க மதிப்பீடுகள்**

கற்பித்தல் என்பது அறிவைப் போஷித்து வழங்குதல், திறன்களை வளர்த்தல் மற்றும் சரியான மனப்பான்மையை உருவாக்குதல் என்பனவாகும். பொதுவாக, ஒப்படை திறன் மேம்பாட்டில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதே நேரத்தில் தேர்வு பட்டப்பின் படிப்பு மட்டத்தில் அறிவு மற்றும் அறிவு வழங்கப்பட்ட சூழ்நிலைக்கு ஏற்புடையதாக்கி கொள்ளும் வகையில் மதிப்பிடுவதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. களப்பணி, தொழில்துறை சுற்றுலாக்கல், பகுப்பாய்வு, விளக்கக்காட்சிகள் மற்றும் நேர்காணல்கள் ஆகியவை நிபுணர்களை பொதுவானவர்களாக மாற்றுவதற்கும் நிறுவனங்களில் குறுக்கு-செயல்பாட்டு அறிவைப் பெறுவதற்கும் ஒப்படைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள சில பகுதிகள் ஆகும்.

முக்கியமான பகுதிகளைக் கருத்தில் கொண்டு பல்வேறு மதிப்பீடுகளுக்கான தலைப்பு உரைகள் (Rubrics) உருவாக்கப்பட்டுள்ளன. உதாரணமாக, கட்டுரை வகையில் இறுதித் தேர்வுக்காக தயாரிக்கப்பட்ட தலைப்புரை, மதிப்பீட்டின் நோக்கம் மாறுபடுவதால், ஒரு தனிப்பட்ட எழுத்து வடிவிலான ஒப்படையில் வேறுபடுன்கிறது. விளக்கக்காட்சிகளுக்கான தலைப்புரை மற்ற தலைப்பு உரைகளுடன் ஒப்பிடும்போது வேறுபடுகிறது. இருப்பினும், ஒவ்வொரு தலைப்புரையும் அறிவு பயன்பாடு, கருத்துகள் மற்றும் நிறுவப்பட்ட கோட்பாடுகளுக்கு சவால் விடுதல் மற்றும் அவர்களின் அனுபவங்களைப் பகிர்வது ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. எதிர்பார்க்கப்படும் கல்வித் தரநிலைகள், கட்டுரை திருட்டுத் தரநிலைகள், ஒப்படைகளை தாமதமாக சமர்ப்பித்தல் ஆகியவை கொள்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தேர்வுத்தாள் ஏழாவது வாரத்திற்குள் ஒவ்வொரு கேள்விக்கும் மாதிரி பதில்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், மேலும் ஒவ்வொரு பகுதிக்கும் துணைப்பகுதிக்கும் குறிப்பாக ஒதுக்கப்பட்ட மதிப்பெண்கள் வழங்கப்படுதல் வேண்டும். இது தரநிலைகளை பராமரிப்பதற்கு மட்டுமல்ல, இரண்டாவது மதிப்பீட்டு செயல்முறையை எளிதாக்குவதற்கும் ஆகும். முடிவுறுத்தப்பட்ட பின்னர் அனைத்து மதிப்பெண்களும் மாணவர்களுக்கு வெளியிடுவதற்கு முன்னர் தேர்வு சபையால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். தோல்விகளை எவ்வாறு கையாள்வது, மறுதேர்வு மற்றும் மறு ஒப்படைப்புகளுக்காக பின்பற்ற வேண்டிய நடைமுறை மற்றும் இறுதி தரவரிசையை தீர்மானிப்பதற்காக இத்தகைய மதிப்பெண்கள் எவ்வாறு கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன என்பதும் கொள்கையில் அடங்கும்.

பட்டநிலை பின் படிப்புகளுக்கான முதன்மையான நிறுவனம் என்ற வகையில், கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் (TLAP), இலங்கை தகுதி கட்டமைப்பு (SLQF) என்பவற்றுக்கு ஏற்ப இறுதி ஆய்வில் கவனம் செலுத்தப்படுவதுடன், மேலும் இறுதி ஆய்வுக்கு 15 credits ஒதுக்கப்படுகின்றன. பின்னர் ஆய்வுகள் குறித்து கேள்விகளை முன்வைப்பதற்காக முறையான வாய்மொழித் தேர்வு நடத்தப்படுகின்றது. கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டத்தை நெருக்கமாக ஆய்வு செய்ததில் இருந்து, பெரும்பாலான கற்றல் பங்காளிகள் நிறுவனத் துறையைச் சேர்ந்தவர்கள் என்பதால், பட்டநிலை பட்டப்படிப்பு நிறுவனம் (PIM) பாரம்பரிய ஆய்வறிக்கைக்கு பதிலாக ஏழு வகையான ஆராய்ச்சி திட்டங்களை வழங்குகின்றது என்பது தெரியவருகிறது. எனவே, கொள்கை பல விருப்பங்களை வழங்குவதன் மூலம் இந்த தேவையை பூர்த்தி செய்கிறது.

இறுதியாக, கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டுத் திட்டம் (TLAP), மேற்பார்வை செயல்முறை மற்றும் மதிப்பீட்டு செயல்முறை ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றது, மேலும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு யார் பொறுப்பு என்பதை தெளிவாக அடையாளம் காணுதல் மற்றும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) TLAP வெற்றிகரமாக செயல்படுத்துவதை மேற்பார்வையிடப்படுகிறது.

# *பெறுமதி ஊக்கி 2* – ஆழமான புரிந்துணர்வுடன் கூடிய பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள்.

"செயற்பணிக் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தாக்கத்தை ஏற்படுத்தும் ஆராய்ச்சியை மேற்கொள்வது முதுகலை பட்டப்படிப்பு நிறுவனத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாகும். முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தினது, சிறப்புகளின் கட்டமைப்பில் ஆராய்ச்சியும் ஒரு முக்கிய தூணாக விளங்குகிறது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் உயர்தர ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு உறுதிபூண்டுள்ளதுடன், மேலும் அனைத்து பீடா உறுப்பினர்கள் மற்றும் மாணவர்கள் திட்டமிடல் முதல் கண்டுபிடிப்புகளை வெளியிடுதல் வரையிலான ஆராய்ச்சியின் அனைத்து அம்சங்களிலும் ஒருமைப்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையை பராமரித்து, கோட்பாடுகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை கடைபிடிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நிர்வாக பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) அறிவுசார் கண்டுபிடிப்புகள் அடங்கிய ஆராய்ச்சித் தொகுப்பில் ஆசிரியர்கள் மற்றும் கற்றல் கூட்டாளர்களின் பங்களிப்புகள் உள்ளன. இந்த அறிவுசார் பங்களிப்புகளின் தொகுப்பு நிறுவனத்தின் செயற்பணி, வெளியீடுகள், விளைவுகள் மற்றும் உத்திகள் ஆகியவற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ள PIM இன் ஆராய்ச்சி முன்னுரிமைகளை பிரதிபலிக்கிறது. இந்தத் தொகுப்பில் உள்ள பெரும்பாலான பங்களிப்புகள் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள், விடய ஆய்வுகள் மற்றும் இறுதியாண்டு ஆராய்ச்சி அடிப்படையிலான திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறை ஆய்வுகள் ஆகும். ஆராய்ச்சி மாநாடுகள், கலாநிதி பட்ட கருத்தரங்குகள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து பணியாற்றுதல் மூலம் அறிவைப் பகிர்வதன் மூலம் வணிகம் மற்றும் சமூகத்திற்கான அறிவுசார் பங்களிப்புகளின் தாக்கம் மேலும் மேம்படுத்தப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி திட்டங்கள், பயன்பாட்டு ஆராய்ச்சி மற்றும் சமூக ஆராய்ச்சி என்ற வகையில் இரண்டிலும் கவனம் செலுத்தப்படுகிறது. பயன்பாட்டு ஆராய்ச்சி திட்டங்கள் நிறுவனங்களின் பிரச்சினைகளை தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன. சமூக ஆராய்ச்சி திட்டங்கள் அறிவை உருவாக்குவதில் கவனம் செலுத்துகின்றன, மேலும் இந்த அறிவு கல்வி வெளியீடுகள் மூலம் பகிரப்படுகிறது.

ஆராய்ச்சியை நடைமுறையில் மேற்கொள்வதும் அறிவைப் பகிர்வதும் ஆராய்ச்சியின் முக்கியமான அம்சமாகும். முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் (PIM) ஆராய்ச்சி கண்டுபிடிப்புகள் முக்கியமாக தரப்படுத்தப்பட்ட மற்றும் சக மதிப்பாய்வு செய்யப்பட்ட சஞ்சிகைகளில் வெளியிடப்படுவதன் மூலம் புதிய அறிவை உருவாக்கப் பயன்படுத்தப்படுகிறது. முகாமைத்துவ பட்டப்பி பின்படிப்பு நிறுவனம் மற்றும் கற்றல் கூட்டாளர்களால் நடாத்தப்படும் ஆராய்ச்சி பெரும்பாலும் மற்றவர்களால் மேற்கோள் காட்டப்படுவதுடன், இதன் மூலம் உருவாக்கப்படும் அறிவின் பரிமாற்ற திறன் மற்றும் மதிப்பு மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது.

அறிவு உருவாக்கத்திற்கான பீடத்தின் பங்களிப்பு பின்வரும் அட்டவணை மூலம் காட்டப்படுகின்றது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் வெளியீடுகள் மற்றும் மேற்கோள்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில்

அதிகரித்துள்ளது.

| நிறைவு செய்யப்பட்ட ஆண்டு | **Journal Papers** ஆய்விதழ் கட்டுரைகள் | கருத்தரங்கு பணிகள் | புத்தக அத்தியாயங்கள் | விடய ஆய்வு | மேற் கோள்கள் |
|---|---|---|---|---|---|
| 2023 | 15 | - | 01 | - | 87 |
| 2022 | 12 | 06 | 01 | 01 | 42 |
| | | | | | |

**முகாமைத்துவ அபிவிருத்தி மற்றும் அறிவு அணுகுமுறை**

பணியிடத்திற்கு மற்றும் வேலைக்கு ஏற்புடையதாக மட்டுமல்லாமல், பங்கேற்பாளர்களின் குறிப்பிட்ட அறிவு மற்றும் அனுபவ நிலைகளுக்கும் பொருத்தமான கற்றல் உள்ளடக்கத்தை வழங்குதல் முக்கியமாகும். வழங்கும் முறைகளைப் பொறுத்தவரை, நிறுவனத்தின் கலப்பு கற்றல் முறைகள் சரியான தீர்வாக அமைகின்றன. நிறுவனம் பயன்படுத்தும் பயிற்சித் திட்டங்களை வழங்குவதில் கூறல், காட்ல், கேட்டல் மற்றும் செய்தல் ஆகிய முறைகளின் சமநிலையான கலவை அடங்கும். இந்த முறை பயிற்சி முழுவதும் பங்கேற்பாளர்களின் கவனம், ஆர்வம் மற்றும் ஊக்கத்தை பராமரிக்க தேவையான பன்முகத்தன்மையை சேர்க்கிறது. இதனுடன், நிகழ்வு ஆய்வுகள் (Case studies) பயன்பாடு பங்கேற்பாளர்களுக்கு மதிப்புமிக்க அனுபவப்பூர்வமான கற்றலை வழங்குகிறது.

**முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PIM) வாடிக்கையாளர்கள்**

கடந்த 10 ஆண்டுகளில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PIM), தமது நிபுணத்துவ துறைகளில் முன்னணி பதவிகளை வகிக்கும் வலுவான வாடிக்கையாளர் குழுவுடன் சிறப்பு உறவுகளை வளர்த்துள்ளது. இதில் பின்வருவன உள்ளடங்கும்.

- இலங்கை வங்கி
- ஹட்டன் நேஷனல் வங்கி
- டொயிஸ் வங்கி
- பீப்பிள்ஸ் லீசிங் அண்ட் /பைனான்ஸ் பீஎல்சி
- CDB (Citizens Development Business Finance Ltd)
- ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி
- சீபெட்கோ (இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்)
- ஹேலீஸ் பீஎல்சி
- ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பீஎல்சி
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
- Millenium IT
- SLASSCOM (இலங்கை மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் சங்கம்)
- தேசிய போக்குவரத்து ஆணைக்குழு
- உயர் கல்வி அமைச்சு
- பொதுச் சேவை ஆணைக்குழு
- சுகாதார அமைச்சு
- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை
- நகர அபிவிருத்தி அதிகார சபை
- மருத்துவ விஞ்ஞான பட்டநிலை பின்படிப்பு நிறுவனம்
- யூனியன் அசுவரன்ஸ் பீஎல்சி
- சென்ட்ரல் /பைனான்ஸ் நிறுவனம்
- இலங்கை அரசு சேவை ஆணைக்குழு
- ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ்
- ஹோல்சிம் (லங்கா) நிறுவனம்
- தேசிய சேமிப்பு வங்கி
- கார்கில்ஸ் (லங்கா) நிறுவனம்
- ஜெட்விங் டிராவல்ஸ்
- ஸ்ரீ லங்கா டெலிகாம்

- அமேசன் டிரேடிங் (பிரைவேட்) நிறுவனம்.

இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PIM) திறன் மேம்பாட்டுத் திட்டங்கள், பல்வேறு செயல்பாட்டுத் துறைகளில் உள்ள சமீபத்திய கருத்துக்கள், யோசனைகள், கருவிகள் மற்றும் நுட்பங்கள் குறித்து புதுப்பித்த நிலையில் மற்றும் ஊக்கத்துடன் இருப்பதற்கு பின்வரும் வகையில், இலங்கையின் சேவை மற்றும் உற்பத்தி துறைகள், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொடர்பாடல், நகர அபிவிருத்தி, வங்கி, நிதித் துறைகள், உயர் கல்வி மற்றும் அரசுத் துறைகள் மற்றும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நிறைவேற்று அலுவலர்களுக்காக கருதப்படுகிறது.

- சந்தைப்படுத்தல்
- வாடிக்கையாளர் உறவு முகாமைத்துவம்
- பொது முகாமைத்துவம்
- நிதி மற்றும் விலை நிர்ணயம்
- மனித வளங்கள்
- குழு இயக்கவியல்
- ஆக்கப்பூர்வத்தன்மை - புத்தாக்கம் மற்றும் மாற்றங்களின் முகாமைத்துவம்
- உற்பத்தித்திறன்
- பேச்சுவார்த்தைகள்
- தகவல் தொடர்பு
- செயல்பாட்டு முகாமைத்துவம்
- மூலோபாய முகாமைத்துவம்
- நிறுவன திட்டமிடல்
- தனிப்பட்ட சிறப்பை அடைதல்
- சிறந்த முகாமைத்துவ நடைமுறைகள்
- தலைமைத்துவம்.

**நிறுவனங்களின் சிரேஷ்ட முகாமைத்துவம் ஊழியர்களுக்கான Glo-Bus Simulation திட்டத்தின் மூலம் மூலோபாய முகாமைத்துவம் தொடர்பான உயர் கற்கைநெறி (ACSM).**

மூலோபாய முகாமைத்துவம் தொடர்பான உயர் கற்கைநெறி (ACSM) என்பது நிறைவேற்று அபிவிருத்தி திட்டங்களின் (EDPs) மேம்பட்ட பதிப்பாகும். தொடர்ச்சியான திறன் மேம்பாட்டு முயற்சிகள் மூலம் ஒரு முக்கிய வணிக சமூகத்திற்கு சேவை செய்யும் அதே வேளையில், PIM நிறுவனம் 2018 இல் நிர்வாகக் கல்வியின் மேம்பட்ட பதிப்பை அறிமுகப்படுத்தியது. சிரேஷ்ட முகாமையாளர்களுக்காக ACSM மூலம் Glo-Bus Simulation ஊடாக ஒரு மூன்று முனை text-case-simulation கற்கைநெறி மாதிரியை வழங்குவதுடன், இது மூலோபாய முகாமைத்துவத்தின் அடிப்படை கருத்துக்களைப் பயன்படுத்துவதில் முகாமையாளர்களுக்கு கணிசமான கூடுதல் அறிவை வழங்குகின்றது. ஒரு நிறுவனத்தில் உத்திகளை செயல்படுத்துவதிலும் பூரணப்படுத்துவதிலும் பங்கேற்பாளர்கள் பல்வேறு சவால்களுக்கு ஆளாவார்கள். சுருக்கமாக, இது ஒரு கிட்டத்தட்ட சரியான மெய்நிகர் அமைப்பில் உத்தியை செயல்படுத்துதல் மற்றும் பூர்த்தி செய்தலாகும். இந்த பாடத்திட்டத்தின் ஒரு முக்கிய அம்சம் Simulation ஆகும். இதில் பங்கேற்பாளர்கள் டிஜிட்டல் கேமரா தொழிலில் பங்கேற்பதன் மூலம் ஒரு நிறுவனத்தை இயக்குவார்கள். முகாமையாளர்கள் ஆண்டுக்கு 8-10% வளர்ச்சி கொண்ட ஒரு தொழிலில் நிறுவனத்தை இயக்க வேண்டும். அவர்கள் ஆண்டுக்கு குறைந்தது 8% பங்குச் சந்தை வருவாய் (EPS) மற்றும் பங்கு விலையை அதிகரித்தல் பங்கு மீதான வருவாயை (ROE) ஆண்டுக்கு 15% அல்லது அதற்கு மேல் பராமரித்தல் மேலும், B+ அல்லது அதற்கு மேற்பட்ட கடன் மதிப்பீட்டைப் பராமரித்தல் மற்றும் 70 அல்லது அதற்கு மேற்பட்ட ‘‘படத்திற்கு மதிப்பீட்டை’’ அடைதல் போன்ற பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்த திட்டத்தின் முக்கிய அம்சங்கள்: (அ) 3-4 மாத பாடநெறிப் பணிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (ஆ) 14 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்ட முடிவு சுற்றுகள். (இ) இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் (PIM) 5-7 நாட்கள் பட்டறையை நிறைவு செய்தல். (ஈ) நிகழ்வு ஆய்வுகளை பகுப்பாய்வு செய்வதில் முகாமையாளர்களின் அதிக ஈடுபாட்டுடன் கூடிய கூடுதல் நிகழ்நிலை விநியோகம், பிரக்ஞா (Moodle) தளம் மூலம் நிகழ்நிலை வினாக்கள். (உ) 3 வார நிகழ்நிலை முன் தயார் நிலை. இந்தத் திட்டம் வழக்கமான விரிவுரைகள், நிகழ்வுகள் பற்றிய வகுப்பு கலந்துரையாடல் (30%), மற்றும் 12-14 வாரங்களுக்குள் வியாபித்த Simulation (60%) மூலம் வழங்கப்படுகிறது. நிறுவனத்தின் இணை முகாமையாளர்கள் தங்கள் தயாரிப்புகளுக்கான குறிப்பிட்ட திட்டங்கள் மற்றும் கூறுகள், பணியாளர்களின் இழப்பீடு மற்றும் பயிற்சி, வழங்கப்படும் உத்தரவாத காலம், நிறுவனத்தின் தயாரிப்புகளை வாங்குபவர்களுக்கு வழங்கப்படும் தொழில்நுட்ப ஆதரவுக்கான செலவு மற்றும் இணைக்கும் செயல்முறையை நிர்வகிப்பது ஆகியவற்றின் அடிப்படையில் உற்பத்தி செலவுகளை கட்டுப்படுத்துகின்றனர். நிறுவனத்தின் இணை முகாமையாளர்கள்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் 44 வகையான முடிவுகளை எடுக்கப்படுவதுடன், அவை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கூறுகள் மற்றும் தயாரிப்பு செயல்திறன் (10 முடிவுகள்) முதல் உற்பத்தி செயல்பாடுகள் மற்றும் பணியாளர் இழப்பீடு (15 முடிவுகள்) வரை மற்றும் விலை நிர்ணயம் மற்றும் சந்தைப்படுத்தல் (15 முடிவுகள்) மற்றும் நிறுவன செயல்பாடுகளுக்கான நிதியளிப்பு (4 முடிவுகள்) வரை நீண்டுச் செல்கின்றது.

> இந்த புதிய முயற்சியின் முக்கிய நோக்கங்களை எய்துக்கொள்வதற்கு வழி வகுக்கின்றது. அ) பல்வேறு தொழில்கள் மற்றும் போட்டிச் சூழ்நிலைகளில் மூலோபாய பகுப்பாய்வு செய்யத் தேவையான அறிவு மற்றும் திறன்களை விருத்தி செய்தல், குறிப்பாக, உலகளாவிய சந்தை சூழலில் உள்ள போட்டி சவால்கள் பற்றிய வலுவான புரிதலை வழங்குதல். ஆ) வணிக உத்திகளை உருவாக்குதல், மூலோபாய மாற்றுவிருப்பங்களை கவனமாக விவாதித்தல், செயல்பாட்டு விருப்பங்களை மதிப்பிடுவதற்கு ‘‘what-if’’ பகுப்பாய்வைப் பயன்படுத்துதல் மற்றும் சிறந்த மூலோபாய முடிவுகளை எடுப்பது பற்றிய நடைமுறை அனுபவத்தைப் பெறுதல். இ) ஒரு நிறுவனம், அதன் தற்போதைய வணிக நிலை, அதன் நீண்டகால திசை, அதன் வளங்கள் மற்றும் போட்டி திறன்கள், அதன் மூலோபாயத்தின் தரம் மற்றும் நிலையான போட்டி advantage ஐப் பெறுவதற்கான வாய்ப்புகள் குறித்து மூலோபாய ரீதியாக சிந்திக்க முகாமையாளர்களின் திறனை மேம்படுத்துதல். ஈ) நிறுவன உத்திகளை செயல்படுத்துதல் மற்றும் செயல்படுத்துவது தொடர்பான முகாமைத்துவ செயல்பாடுகள் குறித்து அறிவூட்டுதல், திறமையான மூலோபாய செயலாக்கத்தை ஊக்குவிப்பதற்கு முகாமையாளர்கள் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் குறித்த வரம்பில் ஒரு பங்கேற்பாளரை பயிற்றுவித்தல் மற்றும் நிறுவனத்தின் மூலோபாய செயலாக்கக் குழுவின் ஒரு பகுதியாக திறம்பட செயல்பட முடியும் என்ற நம்பிக்கையை பங்கேற்பாளருக்கு வழங்குதல்.

# இயக்குவிக்கும் காரணி (Enabler) 01: உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலை

ஒரு நிறுவனம் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தரமான கலாச்சாரத்தைக் கொண்டுள்ள நிறுவனமாகக் கருதப்படுவது, அதன் உள்ளக கட்டமைப்பில் தரம் உள்ளடக்கியுள்ளவிடத்து மற்றும் அதன் படிநிலையின் மேல் இருந்து கீழ் வரை மேற்கொள்ளப்படும் அனைத்து நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்கும்போது ஆகும். 1986 இல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PIM) தனது 2024-2026 மூலோபாயத் திட்டத்தில் ”தெற்காசியாவில் முகாமைத்துவ மூன்றாம் நிலைக் கல்விக்கான சிறப்பு நிலையமாக மாறுதல்” என்ற இலக்கை அடைய ”தரம்” என்பதை ஒரு இயக்குவிக்கும் காரணியாக உள்ளடக்கியுள்ளது.

**கடந்த காலம்**

1986 இல் தொடங்கப்பட்ட இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் (PIM) ஆரம்பத்தில் கிட்டத்தட்ட ஒரு ஏகபோக நிலையை அனுபவித்தது. எனவே, ஒழுக்கம், வருகை, நேரந்தவறாமை மற்றும் கல்வி மற்றும் அறிவு பகிர்வுக்கான கடுமையான அணுகுமுறை ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இது 2000 ஆம் ஆண்டுகளின் முற்பகுதி வரை நீடித்தது. இருப்பினும், பொருளாதாரம் தாராளமயமாக்கப்பட்டதன் விளைவாகவும், பல போட்டியாளர்கள் தொழிலில் நுழைந்ததன் விளைவாகவும், இலங்கை முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தரமான தரங்களுக்கு முரணில்லாமல் மாறிவரும் உலகத்துடன் பரிணாமம் செய்ய ஒரு சுறுசுறுப்பான மூலோபாயத்தை பின்பற்றியது. உதாரணமாக, இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் புதிய கற்கைநெறிகளை (பாடங்களை) அறிமுகப்படுத்துதல், புதிய திட்டங்களை தொடங்குதல் மற்றும் அறிவுசார் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக 1996 இல் இலங்கை முகாமைத்துவ சஞ்சிகை (SLJM) வெளியிடல் போன்றவற்றை மேற்கொண்டது. கூடுதலாக, இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஒரு தலைமைப் பங்கை வகித்து, 2004 சுனாமி பேரழிவின் போது தனது சமூகப் பொறுப்பின் ஒரு பகுதியாக இலங்கையின் மீனவர்களுக்கு உதவி அளிப்பதற்கு பங்களித்தது. இலங்கை முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், அதன் முதன்மை தயாரிப்பாக காணப்படும் வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் (MBA) கற்கைநெறி மற்றும் பொது நிர்வாகத்தில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு (MPA) கற்கைநெறி மற்றும் கலாநிதி (Ph.D.) கற்கைநெறி ஆகியவற்றின் மூலம் உயர்மட்ட பதவிகளுக்கு பல முன்னாள் மாணவர்களை தொடர்ந்து உருவாக்கி வருகின்றது.

2015 இல், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் மற்றும் வணிகப் பள்ளிகளுடன் இணங்குவதற்காக, மேம்பட்ட வணிகப் பள்ளிகள்

சங்கத்தின் (AACSB) அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சவாலான செயல்முறையைத் தொடங்கியது. இந்த காலகட்டத்தில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம, வரிவிதிப்பு தொடர்பான வணிக நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு பட்டம், சுங்கம் மற்றும் சர்வதேச வர்த்தகம் தொடர்பான வணிக நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு பட்டம், 2016 இல் வணிக நிர்வாகத்தில் நிர்வாக பட்டப் பின்படிப்பு (EMBA) மற்றும் 2022 இல் வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டம் (DBA) உள்ளிட்ட பல புதிய கல்வித் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. போட்டி மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத இலங்கை உயர் கல்விச் சந்தையில் உள்ள இடைவெளிகளை அடையாளம் கண்டறிந்த பின்னரே இந்தத் திட்டங்கள் மேம்படுத்தப்பட்டன. AACSB அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் கற்பித்தல், ஆராய்ச்சி, கூட்டாண்மைகள், நிலைத்தன்மை மற்றும் முன்மாதிரியான ஆளுகை ஆகிய ஐந்து முக்கிய தூண்களில் கவனம் செலுத்தி ”நோக்கத்தை வழிநடத்தும்” அமைப்பாக மாறியது. கூடுதலாக, அனைத்து வகையான மதிப்பீடுகளுக்கும் நன்கு வரையறுக்கப்பட்ட ரூப்ரிக்ஸ், விரிவான பாடத்திட்டங்கள் மற்றும் பரீட்சை வினாத்தாள் மத்தியஸ்தப்படுத்தல் மற்றும் இரண்டாவது மதிப்பெண் செயல்முறையை முறைப்படுத்துதல் உள்ளிட்ட பல மேம்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. பீடத்திற்கான எதிர்பார்ப்புகள் தொடர்பான தரநிலைகள் (SOEs) நிறுவப்பட்டன. மேலும் எழுத்திலான ஒப்படைகளுக்காக முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் வழிகாட்டிகள் (7வது பதிப்பு) புதுப்பிக்கப்பட்டது. ஏனைய நடவடிக்கைகளுக்கிடையில் கட்டுரைத் திருட்டைத் தடுக்கும் கொள்கை, சூழ்நிலைகளைத் தணிக்கும் கொள்கை மற்றும் எழுத்திலான மென் பொருள்களை சமர்ப்பிப்பதற்கு மிகச் சிறந்த அணுகலுக்கான விரிவாக்கப்பட்ட போர்டல் ஆகியவைகளும் இவற்றுக்குள் அடங்கும்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தனது வணிக நிர்வாகம் தொடர்பான பட்டப் பின்படிப்பு கற்கைநெறிகளை ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன், கட்டார், ஓமான், குவைட் மற்றும் பங்களாதேஷ் போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு வழங்குவதை விரிவுபடுத்தியது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இந்த நாடுகளில் விரிவுரைகளை நடாத்தி, வெளிநாடுகளில் உள்ள மாணவர்களுக்கு கொழும்பில் உள்ளதைப் போன்ற கற்றல் அனுபவத்தை உறுதி செய்தது. இந்த விரிவாக்கம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பொருளாதார ஸ்திரத்தன்மையை வலுப்படுத்தவும் உதவியது. கூடுதலாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் கற்பித்தல், கற்றல் மற்றும் மதிப்பீட்டு கொள்கை, பாலின சமத்துவம், சமத்துவக் கொள்கை பாடத்திட்ட மேம்பாடு மற்றும் மதிப்பாய்வுக் கொள்கை உட்பட இருபத்தி ஒன்பது கொள்கைகளை அறிமுகப்படுத்தியது. இந்த கொள்கைகள் 2021 இல் நிறுவப்பட்ட தர உத்தரவாத நிலையம் (CQA) மூலம் செயல்படுத்தப்பட்டன, மேலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகார செயல்முறைக்கு இணங்குவதோடு இலங்கை தகுதி கட்டமைப்பு (SLQF) தரநிலைகளைப் பூர்த்தி செய்கின்றது. இதன் விளைவாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் AACSB தரநிலைகள் இரண்டையும் பின்பற்றியதுடன், அதன் கல்வி வாய்ப்புகள் உயர் மட்டத்தின் தரம் மற்றும் கண்டிப்புடன் பராமரிக்கப்படுவதை உறுதி செய்தது.

**தற்காலம்**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இலங்கை தகுதி கட்டமைப்பின் (SLQF) தரநிலைகளுக்கு

இணங்க நிலை 8 முதல் நிலை 12 வரை அனைத்து பட்டப் பின்படிப்பு பட்டங்களையும் வழங்குகின்றது. குறிப்பாக கோவிட் தொற்றுநோய்க்குப் பின்னர், கல்வித்துறையில் ஏற்பட்ட விரைவான மாற்றங்களை அடையாளம் கண்டு, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் 2024-2026 ஆம் ஆண்டிற்கான நான்கு முக்கிய தூண்களைக் கொண்ட ஒரு புதிய மூலோபாயத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது: புதிய கற்றல், ஊக்கமளிக்கும் ஆராய்ச்சி, வளமான கூட்டாண்மைகள் மற்றும் எதிர்கால மேம்பாடு என்பனவாகும். புதிதாக நியமிக்கப்பட்ட பணிப்பாளர் கலாநிதி திரு. அசங்க ரணசிங்கவின் தலைமையில், சான்றளிக்கப்பட்ட தரம், முன்மாதிரியான ஆளுகை மற்றும் ஊக்கமளிக்கும் நிலைத்தன்மை ஆகியவற்றால் இந்த தூண்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றன. நிறுவனத்தின் கருப்பொருள் ”நாட்டின் வணிகப் பள்ளி” என்றும் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அதன் நிறுவப்பட்ட தரநிலைகளைத் தொடர்ந்து பராமரிக்கும் அதே வேளையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் அதன் கல்வி நம்பகத்தன்மையை மேலும் மேம்படுத்துவதற்காக தெற்காசிய தரநிலைகள் (SAQS) எனப்படும் சர்வதேச தர உத்தரவாத திட்டத்தை தீவிரமாகப் பின்தொடர்கிறது.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் கற்றலுக்கான கற்கைநெறிகள் கல்விப் பீடத்தால் வழிநடத்தப்படுகின்ற, அதே நேரத்தில் நிர்வாகம் நிர்வாக சபையால் வழிநடாத்தப்படுகிறது. இந்த சபைகள் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் முன்னாள் மாணவர்கள், அரசு பிரதிநிதிகள், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர்கள் மற்றும் முன்னணி நிறுவனங்களின் உயர் பதவிகளை வகிக்கும் பெருமைமிக்க உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. இந்த வேறுபட்ட கலவை நிறுவனத்தை நிர்வகிப்பதற்கான ஒரு முழுமையான அணுகுமுறையை நிறுவனம் உறுதி செய்கின்றது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் அனைத்து மூலோபாய மற்றும் கட்டமைப்பு மாற்றங்களும் இந்த சபைகளால் அங்கீகரிக்கப்பட்டு இருத்தல் வேண்டும். ஏறத்தாழ மூன்று தசாப்தங்களாக ஒரு சுய-நிதியளிக்கும் நிறுவனமாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் அதன் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதில் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துகின்றது. தனியார் மற்றும் பொதுத்துறைக்கான நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்கள் (EDP) மற்றும் முகாமைத்துவ மேம்பாட்டுத் திட்டங்கள் (MDP) முக்கியமான வருவாய் ஆதாரங்களாக விருத்தியடைந்து வருகின்றன. இந்த திட்டங்கள் பீடத்தின் தனித்துவமான நிபுணத்துவத்திலிருந்து பயனடைகின்றன, மேலும் EDP/MDP மற்றும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்திற்கு இடையேயான உறவு ஒருங்கிணக்கமானது என்பதுடன், நிறுவனத்தின் நிதி ஸ்திரத்தன்மைக்கு மேலும் பங்களிக்கின்றது.

**எதிர்காலம்**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் எதிர்கால எதிர்பார்ப்புகள் என்ன? சமீபத்தில் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் நடாத்திய சந்தை ஆய்வின் அடிப்படையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் தொடர்ந்து ”நாட்டின் வணிகப் பள்ளி”யாக இருக்கும் அதே நேரத்தில், மாணவர்களின் தேவைகள் வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன என்றும், உலகம் பரிணாம வளர்ச்சியடைந்து வருகிறது என்றும், கட்டுப்படுத்தப்படாத சந்தையில் போட்டி கடுமையாகவும் தீவிரமாகவும் மாறி வருகிறது என்றும் வெளிப்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, ஒரு வதிவிட திட்டமாக ஒரு வளமான ”கருத்து உருவாக்கும்” தொடர்பான அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது. அங்கு

அனைத்து பங்குதாரர்களும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் எதிர்கால முன்னேற்றத்திற்கு பங்களிக்ப்பதற்கு அழைக்கப்பட்டு, அதை "நாட்டின் வணிகப் பள்ளி"யாக மாற்றுவதற்கான நோக்கத்துடன். "அனைவருக்கும் மேலாக பறக்க" என்ற கழுகின் குறிக்கோளால் வழிநடாத்தப்பட்டு, வளர்ந்து வரும் போக்குகளுடன் இணங்கி, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் நம்பிக்கையுடன் மாற்றத்தைத் தழுவி ஒரு புதிய திசையில் பயணிக்கும்.

இந்த முயற்சியில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இலங்கையில் முதன்முறையாக SAQS அங்கீகாரத்தைப் பெறுவதற்கு உறுதியாக உள்ளதுடன், மேலும் அதன் திட்டங்களுக்கு உலகளாவிய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பாரம்பரிய பாடங்களுக்கு அப்பால், வளர்ந்து வரும் உலகிற்கு ஏற்ப செயற்கை நுண்ணறிவு (AI), டிஜிட்டல் மாற்றம், புவிசார் அரசியல், பெருநிறுவன நிலைத்தன்மை போன்ற புதிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்துவதற்கு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் புதிய கட்டிட விரிவாக்கம், உயர்மட்ட பெருநிறுவன நிபுணர்கள் பங்கேற்கும் நிறைவேற்று மேம்பாட்டுத் திட்டங்கள் (EDP) மற்றும் நிறைவேற்று வணிக நிர்வாக பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறிகள் (EMBA) திட்டங்களை எளிதாக்குவதற்காக மேம்பட்ட 360-டிகிரி உட்கட்டமைப்புகளுடன் மேம்படுத்தப்படும். இந்த மேம்படுத்தல்கள் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஹாவர்ட் மற்றும் MIT போன்ற நிறுவனங்களில் காணப்படும் வசதிகள் மற்றும் தரமான திட்டங்களுக்கு நெருக்கமாகக் கொண்டு வரப்படுவதுடன், பல்வேறு துறைகளில் சமூகத்தின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக குறுகிய கால கற்கைநெறிகள் வழங்கப்படும். உலகளவில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களுடன் புதிய கூட்டாண்மைகளை ஏற்படுத்தி, இலங்கைக்குள் அந்தப் பட்டநிலை பின்படிப்பு திட்டங்களை வழங்குவதற்கு முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் நடவடிக்கை மேற்கொள்கின்றது. இதன் மூலம் கற்றல் கூட்டாளர்களுக்கு பரந்த அளவில் தெரிவுகளை வழங்கப்படுகிறது. SLJM, Scopus இன் கீழ் "தரவரிசைப்படுத்தப்பட்ட" சஞ்சிகையாக மேம்படுத்தப்படும், அந்த செயல்முறை ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளது. பயன்பாட்டு ஆராய்ச்சி, ஆய்வுகள் மற்றும் நிகழ்வு ஆய்வுகளுக்காக தொழில்துறையுடன் ஈடுபடவும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த முயற்சிகளுடன், கல்வித்துறையில் மட்டுமல்லாமல் "நாட்டின் வணிகப் பள்ளி"யாகவும் உயர்ந்த உயரத்தை அடைவதற்கு முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் கருதுகின்றது.

# இயக்குவிக்கும் காரணி (Enabler) 02: உலகளவில் முன்மாதிரியான ஆளுகை

நான்காவது தசாப்தத்தில் இருக்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், நல்லாட்சிக்கு ஒரு முன்மாதிரியாகத் திகழ்கின்றது. பட்டநிலை பின்படிப்பு கல்வியின் முன்னணி நிறுவனமாக, அது பின்வருமாறு அதன் மதிப்புகளை வலுப்படுத்தும் காரணியாகவே ஆளுகையை கருதுகின்றது:

- நம்பிக்கை:
  வெளிப்படைத்தன்மைக்காக தொடர்ச்சியான அர்ப்பணிப்புடன் சமூக எதிர்பார்ப்புகளைத் தொடர்ந்து பூர்த்தி செய்யும் ஆளுகை நடைமுறைகளுக்கான தெளிவாக வரையறுக்கப்பட்ட எதிர்பார்ப்புகள்.
- நோக்கம் பற்றிய பகிரப்பட்ட உணர்வு:
  குழுக்கள் ஊடாக உறவுகளை வளர்க்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவன நடைமுறைகளில் எதிர்காலத்திற்காக பகிரப்பட்ட தொலைநோக்கு.
- எழுந்துள்ள பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளுதல்: பரந்த அளவிலான பங்கேற்பை அனுமதிக்கும் வகையில் பல்வேறு கண்ணோட்டங்களிலிருந்து முன்வைக்கப்பட்ட கருத்துகளுக்கு உரிய கவனம் செலுத்தல்.
- தகவமைத்துக் கொள்ளும் திறன்:
  நெகிழ்வுத்தன்மைக்கான வாய்ப்புகளுடன் கூடிய தலைமைத்துவம் மற்றும் ஆளுகைக்கான மேம்பாட்டு அணுகுமுறைகள்.
- உற்பத்தித்திறன்:
  சமத்துவம் மற்றும் விளைவுகள் மூலம் ஒருங்கிணைந்த பொறுப்புடன் முடிவுகளில் கவனம் செலுத்திய ஆளுகை நடைமுறைகள்.

  நல்லாட்சியைப் பின்பற்றுவதில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் பின்வரும் செயல் திட்டங்களை தீவிரமாக செயல்படுத்தியுள்ளது.

- முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பல்வேறு சமூகங்களை மீண்டும் அறிந்துகொள்ளுதல், இது தற்போதைய நிலையின் செயல்திறன் குறித்த உரையாடல்களைத் தொடங்குவதன் மூலம் மேற்கொள்ளப்படுகிறது.
- ஆளுகைக்கான எதிர்பார்ப்புகளை தெளிவுபடுத்துவதன் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் எதிர்காலத்திற்காக பகிரப்பட்ட நோக்குகையை விருத்தி செய்தல்
- திறந்த வகையில் தொடர்புகொள்வதன் மூலம் வெளிப்படைத்தன்மையை பின்பற்றுதல் மற்றும் நல்லாட்சியின் முக்கிய தூணாக இருப்பதால் பொறுப்புக்கூறலை கடைப்பிடித்தல்.
- பல்வேறு கண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் தொடர்ந்து வெளிப்படைத்தன்மையை வெளிப்படுத்துதல்.
- கல்வி மேம்பாட்டில் முதலீடு செய்வதன் மூலம் மனித மூலதனத்தை உருவாக்குதல். PIM இன் உறவு வலைப்பின்னலை மேலும் செறிவூட்டப்பட்டுள்ளது. இது ஆளுகை பிரச்சினைகள் குறித்த

உள்ளடக்கிய உரையாடலை எளிதாக்கியது.

- ஆளுகைக்கான நிகழ்ச்சி நிரல் திட்டமிடப்பட்டது மற்றும் அசாதாரண முடிவெடுக்கும் சூழ்நிலைகளுக்கு நெகிழ்வான அணுகுமுறை விவாதிக்கப்பட்டது. இது ஆளுகையின் சாதனைகளை கொண்டாடவும் கடனைப் பகிர்ந்து கொள்ளவும் வழிவகுத்தது.
- திறந்த தகவல்தொடர்பு மூலம் வெளிப்படைத்தன்மை பராமரிக்கப்பட்டதுடன், நல்லாட்சியின் முக்கிய கொள்கையாக பொறுப்புக்கூறல் உறுதிப்படுத்தப்பட்டது.
- பல்வேறு கண்ணோட்டங்களுக்கு மதிப்பளித்தல் மற்றும் தொடர்ந்து வெளிப்படைத்தன்மை காட்டப்பட்டுள்ளது.
- கல்வி மேம்பாட்டை ஊக்குவிப்பதன் மூலமும் PIM வலையமைப்பை விரிவுபடுத்துவதன் மூலமும் மனித மூலதனத்தை மேம்படுத்துதல். இது ஆளுகை பிரச்சினைகள் குறித்து திறந்த மற்றும் உள்ளடக்கிய விவாதங்களுக்கு உதவியது.
- ஆளுகை நிகழ்ச்சி நிரல் தயாரிக்கப்பட்டு சிறப்பு முடிவெடுக்கும் சந்தர்ப்பங்களை கையாளுவதற்காக, நெகிழ்வான அணுகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இது ஆளுகை வெற்றிகளை அடையாளம் காணுவதற்கும் விருதுகளைப் பகிர்ந்து கொள்ளவும் வாய்ப்பை அளிக்கின்றது.

# இயக்குவிக்கும் காரணி (Enabler ) 3: நிலைத்தன்மைக்காக தூண்டுவித்தல்

நிலைத்தன்மை

நாட்டின் முதன்மையான முகாமைத்துவ கல்வி நிறுவனம் என்ற வகையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் ஒட்டுமொத்த நாட்டிற்கான தனது அர்ப்பணிப்புகள் மற்றும் கடமைகள் குறித்து எப்போதும் அறிந்திருக்கின்றது. எனவே, முகாமைத்துவ பிரச்சினைகளுக்கான அதன் அணுகுமுறை தொலைநோக்குடன் கூடியதாகும். சமூகத்துடனான அதன் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதன் கட்டாய அம்சமாக நிறுவன சமூகப் பொறுப்பை ஊக்குவிக்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், அதன் மூலோபாய வணிகத் திட்டத்தில் “நிலைத்தன்மைக்கான தூண்டுவித்தல்“ என்பதைச் சேர்ப்பதன் மூலம் நிலைத்தன்மைக்கான அர்ப்பணிப்பு முயற்சிகளை உறுதியாக உள்ளடக்கியுள்ளது.

**நிலைத்தன்மைக்கான உயர் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பு**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் செயல்பாடுகளின் ஒரு பகுதியாக நிலைத்தன்மை முயற்சிகளுக்காக அசைக்க முடியாத மற்றும் உறுதியான அர்ப்பணிப்பு, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை மேம்படுத்துவதற்காக நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும் செயல்படுத்துவதற்கும் 2023 இல் சுற்றுச்சூழல் நிலைத்தன்மைக்கான ஒரு குழுவை நியமித்ததன் மூலம் நிரூபிக்கப்படுகிறது. பணிப்பாளரே இந்த குழுவின் தலைவராக இருத்தல், நிலைத்தன்மைக்கான உயர் நிர்வாகத்தின் அர்ப்பணிப்பைக் காட்டுகின்றது. பீடத்தின் கல்வி மற்றும் கல்விசாரா உறுப்பினர்களைக் குழு உள்ளடக்கிதாக செயற்படுகின்றது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை நோக்கத்தின் கீழ் அடையாளம் காணப்பட்டுள்ள குறிப்பிட்ட மூலோபாய நடவடிக்கைகளுக்கிடையில் நீர் மற்றும் மின்சாரம் வீணாவதைக் குறைத்தல், காகித பயன்பாட்டைக் குறைத்தல் மற்றும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவன வளாகத்தில் பிளாஸ்டிக் பயன்பாட்டை அகற்றுதல் ஆகியவை அடங்கும்.

2022 இல் தயாரிக்கப்பட்ட 5 ஆண்டு மூலோபாயத் திட்டத்தின் இலக்காக “பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் துறைகளில் ஊக்கமளிக்கும் நிலைத்தன்மையை உறுதி செய்தல்” என்பதைச் சேர்ப்பதன் ஊடாக நிலைத்தன்மைக்காக கவனம் செலுத்தப்பட்டது. பணிப்பாளரால் எதிர்பார்த்த “புதிய உலகிற்கு” ஏற்றவாறு முகாமைத்துவத்தின் சிறப்பிற்கான நிலையமாக நிர்வாக முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தை மாற்றுவதற்கான மதிப்பு இயக்கியாக (Value driver) வலுவூட்டும் காரணியாக நிலைத்தன்மையை அடையாளம் காண்பதன் மூலம் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் புதுப்பிக்கப்பட்ட மூலோபாயத் திட்டத்தில் இதனை மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளது. இது நவீன கற்பித்தல் மற்றும் கற்றல், ஆழமான புரிதல் மற்றும் பொருத்தமான ஆராய்ச்சி மற்றும் வெளியீடுகள், ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண்மைகளை வளப்படுத்துதல், எதிர்கால திறன் மேம்பாடு மற்றும் தலைமைத்துவ மேம்பாடு போன்ற மதிப்பு இயக்கிகள் மூலம் தனிநபர்கள்

மற்றும் நிறுவனங்களுக்குள் மதிப்பை உருவாக்குவதன் மூலம் செயற்படுத்தல் வேண்டும். மதிப்பு இயக்கிகளை செயல்படுத்துவது உலகத்தரம் வாய்ந்த தரம், முன்மாதிரியான ஆளுகை, ஊக்கமளிக்கும் நிலைத்தன்மை மற்றும் சிந்தனையைத் தூண்டும் டிஜிட்டல் சிறப்பு ஆகியவை ஆகும்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் சிறப்பு கட்டிடத்தின் நிலைத்தன்மை தொடர்பாக 5 தூண்கள் ஊடாக 5 மூலோபாயங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

மூலோபாயம் 01:

வலுசக்தி சேமிப்பு, கழிவுகளைக் குறைத்தல் மற்றும் நீர் முகாமை அடங்கலாக பல்கலைக்கழக செயல்பாடுகள் முழுவதும் நிலையான பயன்பாடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் செயல்படுத்துதல்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் செயல்பாடுகளில் பெரும்பாலான நிலையான நடைமுறைகள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

(i) பல்கலைக்கழக செயல்பாடுகளில் 5S ஐ செயல்படுத்துதல்.




- මම හොහර කළමනාකරණයකින් පිරිසුදු කළමනාකරණයක් වඩවමි.
- මම, කිසිවක් බිම නොඉහිරවමි.
- බිම වැටෙන කවරක් හෝ, මම සැණෙකින් අහුලා තබමි.
- පිරිසුදු කළ යුතු යමක් වෙතොත්, ඒ සෙස්සනට ඉතිරි නොකරමි.
- මාගේ සේවා ඒකකයේ පිරිසුදු කළ යුතු යමක් වෙතොත්, ඒ පිරිසුදු කරමි.
- මාගේ සේවා ඒකකයෙහි වන සියලු දෑ නිසි තන්හි රඳවා ඇති බවට සහතික වෙමි.
- මැකී ගිය කිසිවක් වෙතොත්, පැහැදිලිව දකිමට හැකිවන සේ එය යථා තත්ත්වයට පත් කරමි.
- සියලු කල්හි ම මාගේ සේවා ඒකකය පිරිසුදුව තබා ගන්නා බවට සහතික වෙමි.
- මාගේ සේවා කොටස ආදර්ශවත් ඒකකයක් බවට පත් කිරීමට මෙ උපරිම ලෙසින් යත්න දරමි.
- අත්පත් කරගත් 5S තත්ත්වයෙන් මම සෑහීමකට පත් නොවෙමි.
- අභිමානවත් කොටස් කරුවන් බවට හැඟීයන ලෙසින් අපගේ ආයතනය දෘශ්‍ය ඒකකයක් බවට පත් කර ගැනීමට මම සහාය වෙමි.

- I will promote clean management through lean management.
- I will not spill anything on the floor.
- I will pick up instantly anything that falls on the floor.
- I will not leave anything to be cleaned by others.
- I will clean anything that needs cleaning in my work-unit.
- I will ensure that everything in my work-unit is in its proper place.
- I will restore anything that has got erased to make it visible.
- I will ensure tidiness at my workplace at all times.
- I will strive my best to make my work-place an exemplary one.
- I will never rest with 5S.
- I will help the organization to create a visual work place where we can feel proud to be a part of it.

Director




(ii) இலங்கை தர நிர்ணய நிறுவனத்திடமிருந்து ISO 9001: 2018 சான்றிதழைப் பெற்றுக்கொள்ளுதல்

இதன் மூலம் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் அனைத்து செயல்பாடுகளிலும் உயர்தர தரநிலைகள் பராமரிக்கப்படுவதை உறுதி செய்யப்படுகிறது.



(iii) வலுசக்தி/நீர் சேமிப்பு, கழிவுகளைக் குறைத்தல்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் வளங்களைப் பாதுகாப்பதற்கும் கழிவுகளைக் குறைப்பதற்கும் பல நடைமுறைகளை வெற்றிகரமாக செயல்படுத்தியுள்ளது.

வலுசக்தி மற்றும் நீர் குறித்த அடிப்படை கணக்காய்வுகள் திட்டமிடப்பட்டுள்ளதுடன், மேலும் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட பரப்பளவை கொண்டுள்ள பிரதேசத்திற்காக 5% ஆன வலுசக்தி

மற்றும் நீர் பயன்பாட்டைக் குறைப்பதற்காக திணைக்களத்து இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

அனைத்து செயல்பாடுகள், கூட்ட அறிக்கைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்கு மின்னணு தகவல்தொடர்புகளைப் பயன்படுத்துவதன் மூலம் காகித பயன்பாடு கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் சமர்ப்பிக்கும் அனைத்து சமர்ப்பிப்புகளும் (தனிப்பட்ட ஒப்படைகள், குழு ஒப்படைகள், வீட்டுக்கு எடுத்துச் செல்லும் தேர்வுகள்) நிகழ்நிலையில் உள்ளதுடன், இது காகித பயன்பாட்டைக் குறைப்பதில் முக்கிய பங்களிப்பை வழங்குகின்றது.

ஒவ்வொரு பீட உறுப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள அச்சுப்பொறிகள் அகற்றப்பட்டு, 5 இடங்களில் மத்தியமாக்கப்பட்ட அச்சுப்பொறிகளை பொருத்தப்பட்டுள்ளது. இது காகிதம், வலுசக்தி மற்றும் அச்சு மை பயன்பாட்டை கணிசமாகக் குறைக்கும்.

ஒவ்வொரு பீட அறையிலும் தனித்தனி குளிரூட்டல் அலகுகளுக்குப் பதிலாக மத்திய குளிரூட்டல் பயன்பாடு குறித்த ஆய்வு நடந்து வருகின்றது.

ப்ளாஸ்றிக் பயன்பாட்டை ஒழித்தல்

பிளாஸ்டிக் ஒழிப்புக்கான நடவடிக்கைகள் ஏற்கனவே வெற்றிகரமாக பின்பற்றப்பட்டுள்ளன. கட்டிடத்தின் ஒவ்வொரு தளத்திலும் மற்றும் சிற்றுண்டிச்சாலையிலும் பொருத்தப்பட்டுள்ள dispensers இல் இருந்து தண்ணீரை நிரப்புவதற்காக ஒவ்வொரு ஊழியருக்கும் ஒரு போத்தல் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்கள் மீண்டும் நிரப்பக்கூடிய போத்தல்களைக் கொண்டு வந்து dispensers இருந்து தண்ணீரை நிரப்பவும் இது வழிவகுத்துள்ளது. இது ஒரு முறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் தண்ணீர் பாட்டில்களின் பயன்பாட்டை கணிசமாகக் குறைத்துள்ளது. ஒரு முறை பயன்படுத்தக்கூடிய பிளாஸ்டிக் கொள்கலன்களைக் குறைப்பதற்காக மூலோபாயத் திட்டம் மூலம் நடவடிக்கைகளை அடையாளம் காணப்பட்டுள்ளது. முகாமைத்துவ பட்டப் படிப்பு நிறுவனத்தின் நுழைவாயிலில் மறுசுழற்சி செய்பவர்களால் சேகரிக்கப்பட்டு எடுத்துச் செல்ல பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக் பொதி சேகரிப்பு இடங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

**மூலோபாயம் 2**:

சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் சமூகப் பொறுப்பு குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பாடத்திட்டங்களில் நிலைத்தன்மை குறித்த கோட்பாடுகளை ஒருங்கிணைத்தல்.

PIM நிறுவனம் தனது பாடத்திட்டத்தில் நிலைத்தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கும் கற்கைநெறிகளைச் சேர்த்துள்ளது. உதாரணமாக, MBA 621 - மூலோபாய நிறுவன

நிலைத்தன்மை – கற்கைநெறி மூலம் வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களின் பயன்பாடு மீது அதிகமாக தாக்கங்களை ஏற்படுத்தும் முறை மற்றும் காலநிலை மாற்றங்கள் அத்துடன் தீவிர வானிலை நிகழ்வுகள, விநியோகச் சங்கிலிகள் என்பன வணிக மூலோபாயங்கள் மீது எவ்வாறு பாதிக்கின்றன என்பதை ஆராய்கின்றது. இந்த கற்கைநெறி எதிர்கால வணிகத் தலைவர்களுக்கு நிலையான வளர்ச்சியின் உலகளாவிய நிகழ்ச்சி நிரலைப் புரிந்துகொள்ளவும் பதிலளிக்கவும் உதவுகின்றது. நுகர்வோர் மற்றும் வணிகத் தேவைகள் இரண்டையும் பொறுப்புடனும் மூலோபாய ரீதியாகவும் பூர்த்தி செய்யும் புதிய நிலையான சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வணிகங்கள் தங்கள் நிறுவன உத்திகளில் நிலைத்தன்மையை எவ்வாறு ஒருங்கிணைக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது

மூலோபாயம் 3:

சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கும் நிலையான அபிவிருத்தி முயற்சிகளை ஊக்குவிப்பதற்கும் பிரதேச சமூகங்கள் மற்றும் அமைப்புகளுடன் கூட்டாண்மைகளை உருவாக்குதல்.

மூலோபாயம் 4:

சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் நிலையான தொழில்நுட்பங்களை மேம்படுத்துவதற்கும் PIM ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க திட்டங்களை மேற்கொள்ளப்படுகின்றது. மேலே குறிப்பிட்டுள்ள 3 ஆவது மற்றும் 4 ஆவது மூலோபாயங்களின் பங்களிப்பு நிலையானதும் அர்த்தமுள்ளதுமாகும். ஒவ்வொரு ஆண்டும், PIM நிறுவனம் சமூகப் பொறுப்பு திட்டங்கள் இரண்டுக்கு ஆதரவளிக்கிறது: கிராமப்புற ஆரம்ப பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துதல் மற்றும் ஒரு சமூக அபிவிருத்தி திட்டம். இவை MBA மாணவர்களால் இறுதி ஆண்டு திட்டங்களாக மேற்கொள்ளப்படுகின்றன. நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) இலக்கு 3 – சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு - ஆகியவற்றை ஆதரிக்கும் வகையில் இரண்டு திட்டங்களும் வடிவமைக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) இலக்கு 3 - நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு - ஆகியவற்றை ஆதரிக்கும் திட்டங்களை திட்டமிட்டு செயல்படுத்துவதை PIM தொடங்கியுள்ளது. இது SDGs ஐ அடைதலும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான தேசிய அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகிறது. நிலையான வளர்ச்சி கொள்கைகளை உருவாக்குவதன் மூலம், சமூகங்களுடன் இணைந்து செயல்படும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், உலகளாவிய சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து வயதினருக்கும் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் இலக்கு 3 இல் கவனம் செலுத்தி, PIM குழந்தைகளின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு உதவும் வகையில் கிராமப்புற பாடசாலைகளில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. CSR திட்டத்தின்

நோக்கம் யாதெனில், தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தின் (NPS) வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தெரிவு செய்யப்பட்ட பாடசாலையில் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதாகும். தகுதி பெறுவதற்கென்றால், பாடசாலை – குடும்பங்களில் 40% க்கும் அதிகமான சமூர்த்தி நன்மைகளைப் பெறும் ஒரு கிராமத்தில் அமைந்திருத்தல் வேண்டும் என்பதாகும். மேலும் கல்வி அமைச்சினால் ஒரு கஷ்டப் பிரதேசமாக அடையாளம் காணப்படுதலும் வேண்டும். பாடசாலையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதும், மாணவர்களுக்கு சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஆதரிப்பதும் முக்கிய குறிக்கோளாகும்.

இந்த திட்டங்களின் விளைவுகளில் பாடசாலை சூழலை மேம்படுத்துதல், அதாவது சிறந்த பாதைகள், வகுப்பறைகள் மற்றும் மாணவர்களிடையே 5S மனநிலையை ஊக்குவித்தல் ஆகியவை அடங்கும். இந்த திட்டங்கள் குழந்தைகளுக்கு ஒரு தொலைநோக்கு மற்றும் இலக்குகளை உருவாக்க வழிகாட்டுவதன் மூலம் தலைமைத்துவ திறன்களை வளர்க்கவும் உதவுகின்றன. படைப்பாற்றல் மற்றும் சிக்கல் தீர்க்கும் திறன்களை வளர்த்தல், தர வட்டம் (QC) மேம்பாட்டு திட்டங்களில் மாணவர்களை ஈடுபடுத்தல் மற்றும் மாதிரி வகுப்பறைகளை நிறுவுவது ஆகியவையும் உள்ளடங்கும். கூடுதலாக, திட்டங்கள் மூலம் மாணவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல், சிரேஷ்ட மாணவர்களுக்கு தனிப்பட்ட அபிவிருத்தி அத்துடன், மென் திறன் பட்டறைகளை நடாத்துதல், புலமைப்பரிசில் வழங்குதல், பாடசாலைக்குப் பின்னரான கல்விக்கு உதவுதல், படைப்பாற்றலை மேம்படுத்துவதற்காக போட்டிகளை நடாத்துதல், பசுமை கருத்துக்கள் மற்றும் தோட்டக்கலையை ஊக்குவித்தல் அத்துடன் பாடசாலை சமூகத்தின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றன. 2013 இல் தொடங்கப்பட்டதிலிருந்து, பாடசாலை உற்பத்தித்திறன் மேம்பாட்டுத் திட்டம் 11 திட்டங்களை வெற்றிகரமாக முடிவுறுத்தியுள்ளது.

நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG); இலக்கு 1: வறுமையை ஒழித்தல்

வறுமையை ஒழிப்பதற்கான முதல் இலக்கை ஆதரிக்கும் வகையில் - PIM நிறுவனம், பாடசாலை, பன்சலை மற்றும் பிராந்திய சமூகத்தை ஒருங்கிணைத்து ஒரு சமூக மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்கியுள்ளது. பரேய்கம, மேமா/மத்/பரெய்கம மகா வித்தியாலயத்தைச் சுற்றியுள்ள சமூகத்தில் இத்தகைய திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப்பகுதியில் உள்ள மக்கள் தொகையில் 70% க்கும் அதிகமானோர் சமூர்த்தி பயனாளிகள், மேலும் பல குடும்பங்கள் தினசரி வருமானத்தை நம்பி வாழ்கின்றனர்.

திட்டத்தின் நோக்கங்கள்:

அ. பரேய்கம மகா வித்தியாலயத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிப்பது, அவர்களுக்கு ஒரு சிறிய வணிகம்/வீட்டுத் தொழிலை உருவாக்குவதற்கு உதவுதல்.

ஆ. வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் நல்ல ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு மற்றும் சமூகத்தின் எதிர்கால தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துதல்.

இ. மத, சமூக, கலாச்சார நடவடிக்கைகள் மற்றும் விவசாய உற்பத்தியின் மூலம் பன்சலை மற்றும் பாடசாலையுடன் சமூகத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் சமூகத்தின் பங்கேற்பை வலுப்படுத்துதல்.

3 ஆண்டுகள் நீடித்த இந்த ஆய்வு, பாடசாலை சமூகத்தையும் பன்சலையையும் இணைக்கும் மாதிரியை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதிபரின் தலைமையில் பாடசாலை முக்கியப் பங்கு வகிப்பதுடன பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் ஒருங்கிணைவதற்கான தளமாகப் பயன்படுத்தப்பட்டது. வாழ்வாதார மேம்பாடு முக்கியமாக இருந்தது. பன்சலையைச் சுற்றி மையப்படுத்தப்பட்டு, சமூகத்தை பன்சலையுடன் ஒருங்கிணைத்தல், 5S மூலம் உற்பத்தித்திறனை ஊக்குவித்தல், போதைப்பொருள் குறித்து சமூகத்திற்கு விழிப்புணர்வு ஏற்படுத்தல், நிலையான சுகாதாரம் மற்றும் பாலியல் ஆரோக்கியம் குறித்த பட்டறைகள் அத்துடன் சுகாதார நாப்கின்களை நன்கொடையாக வழங்குதல், கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிப்பதோடு சமூகத்தின் சமூக மேம்பாடும் தொடங்கப்பட்டது.

மூலோபாயம் 5:

பல்கலைக்கழக சமூகத்தை ஈடுபடுத்துவதற்கும் நிலையான நடத்தைகளை ஊக்குவிப்பதற்கும் விழிப்புணர்வு பிரச்சாரங்கள், பட்டறைகள் மற்றும் நிகழ்வுகளை நடாத்துதல். மாணவர் பிரதிநிதிகளின் பங்கேற்பு உட்பட முகாமைத்துவ பட்டப் படிப்பு நிறுவனத்தின் நிலையான முயற்சிகள் குறித்து ஊழியர்களைப் புதுப்பிப்பதற்கான விழிப்புணர்வு அமர்வுகள் அவ்வப்போது நடாத்தப்படுகின்றன. நிலையான நடவடிக்கைகளை முன்னிலைப்படுத்தும் செய்திமடல்கள் விநியோகிக்கப்படுகின்றன. 5S மற்றும் நிலையான முயற்சிகளை முன்னிலைப்படுத்தும் வகையில் மாணவர் ஆய்வுப் பகுதி/சிற்றுண்டிச்சாலையில் இதற்கென

ஒதுக்கப்பட்ட அறிவிப்புப் பலகை வைக்கப்பட்டுள்ளது.



# இயக்குவிக்கும் காரணி (Enabler ) 04: புதிய டிஜிரல் சிறப்பு

தொடர்ந்து மாறிவரும் கல்வித் துறையில், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் சிறப்பின் புதிய தரநிலைகளை அமைப்பதற்காக டிஜிட்டல் மாற்றத்தைத் தழுவியுள்ளது. புத்தாக்கம் மற்றும் தகவமைத்துக் கொள்ளும் திறனுக்கான முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, கற்றல் அனுபவத்தை மேம்படுத்தல், நிர்வாகப் பணிகளை மிகவும் திறமையானதாக்கும் மற்றும் கற்றல் கூட்டாளர்கள் அத்துடன் பதவியணி ஆகிய இரண்டுக்கும் அதிகாரம் அளிக்கும் முன்னோடி முயற்சிகளை அறிமுகப்படுத்த வழிவகுத்துள்ளது. "புதிய டிஜிட்டல் சிறப்பு" என்ற கருப்பொருளின் கீழ், நிறுவனத்தின் மாற்றும் தொடர்பான முன்னேற்றத்தின் கண்ணோட்டம் பின்வருமாறு ஆகும்.

நிகழ்நிலை சேர்க்கை

எங்கள் காகிதமற்ற, நிகழ்நிலை சேர்க்கை முறை, வருங்கால கற்றல் கூட்டாளர்களுக்கு நுழைவு செயல்முறையை எளிதாக்குகின்றது. பயனர் நட்பு இடைமுகம் மூலம், விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கவும், அவர்களின் சேர்க்கை நிலையை அவதானிக்கவும் மற்றும் சரியான நேரத்தில் அறிவிப்புகளைப் பெறவும் முடியும். இந்த தடையற்ற அனுபவம் பல்வேறு பின்னணியில் இருந்து திறமையான நபர்கள் எங்கள் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு கற்கைநெறிகளை எளிதாக அணுகுவதை உறுதி செய்கின்றது.

கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு (பிரக்ஞா)

எங்கள் கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு (பிரக்ஞா) (prajna.pim.sjp.ac.lk) எங்கள் கற்றல் கூட்டாளர்களுக்கு அறிவைப் பரப்புவதற்கான ஒரு இடத்தில் உள்ள அனைத்தையும் உள்ளடக்கிய தளமாக செயல்படுகிறது. டிஜிட்டல் சிறப்பைப் பொறுத்தவரை, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் இந்த தளம் மிக முக்கியமான ஒன்றாகும். பீட உறுப்பினர்கள் பாடத்திட்டப் பொருட்கள், ஒப்படைகள் மற்றும் ஊடாடும் உள்ளடக்கத்தைப் பதிவேற்றுகிறார்கள், இது ஒரு கவர்ச்சியான கற்றல் சூழலை வளர்க்கிறது. கற்றல் கூட்டாளர்கள் எந்த நேரத்திலும் ஆதாரங்களை அணுகலாம் மற்றும் சக ஊழியர்களுடன் ஒத்துழைக்கலாம். மேலும் விவாதங்களில் பங்கேற்கலாம். கட்டுரைத் திருட்டை கண்காணிக்க Turnitin போன்ற தொழில்துறையின் முன்னணி பயன்பாடுகளுடன் மிக உயர்ந்த அளவிலான ஒருங்கிணைப்புகளைப் பயன்படுத்தி இது செறிவூட்டப்பட்டுள்ளது. கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு பௌதீக எல்லைகளைத் தாண்டி, வகுப்பறைக்கு அப்பால் வாழ்நாள் முழுவதும் கற்றலை செயல்படுத்துகின்றது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நூலகத்திலிருந்து மின்னணு வாசிப்புப் பொருட்கள் மற்றும் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்கான அட்டவணை இரண்டும் கற்றல் கூட்டாளர்களால் எளிதான மற்றும் சரியான நேரத்தில் குறிப்புக்காக பிரக்ஞர்வில் பட்டியலிடப்பட்டுள்ளன.

பிரக்ஞா மூலம் எமது நிகழ்நிலை கற்பித்தல் மற்றும் கற்றல் முறைகளுக்கான தயார்நிலை காரணமாக, தொற்றுநோய்களின் போது முகாமைத்துவ பட்டநிலை பின்படிப்பு நிறுவனம் கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான எந்த சவால்களையும் சந்திக்கவில்லை, மேலும் நிறுவனம் சரியான நேரத்தில் வேலை செய்யும் வழக்கமான அம்த்தைப் பின்பற்றி எங்கள் கற்றல் கூட்டாளர்களுக்கு சேவை செய்ய முடிந்தது என்பதில் பெருமிதம் கொள்கின்றது.

நிகழ்நிலை மற்றும் கலப்பின கற்பித்தல்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் கல்வியின் நெகிழ்வுத்தன்மையின் தேவையைப் புரிந்துகொள்வதோடு உயர் தரநிலைகளை பராமரிக்கின்றது. பீடம் நிகழ்நிலை மற்றும் கலப்பின கற்பித்தல் முறைகளுக்கு இடையே சுமூகமாக மாறுவதுடன், பயனுள்ள பாடங்களை வழங்குவதற்காக தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றது. கற்றல் கூட்டாளர்கள் நேரில் அல்லது நிகழ்நிலை வகுப்புகளில் சேர்ந்தாலும், மல்டிமீடியா விளக்கக்காட்சிகள், நிஜ வாழ்க்கை நிகழ்வு ஆய்வுகள் மற்றும் ஊடாடும் உருவகப்படுத்துதல்களால் ஆதரிக்கப்படும் அதே தரமான கல்வியைப் பெறுகின்றார்கள்.

**சுஹுரு மெய்நிகர் வகுப்பறைகள்**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் ஸ்மார்ட் மெய்நிகர் வகுப்பறைகள் கற்றலை மேம்படுத்த நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துகின்றன. ஊடாடும் வைட் போர்டுகள், வீடியோ கான்பரன்சிங் மற்றும் நிகழ்நேர வாக்கெடுப்பு போன்ற கருவிகள் மாணவர் பங்கேற்பை அதிகரிக்க உதவுகின்றன. மாணவர்கள் பாடத்தை எவ்வளவு நன்றாகப் புரிந்துகொண்டுள்ளனர் என்பதை பீடம் உடனடியாக சரிபார்த்து, தேவைக்கேற்ப அவர்களின் கற்பித்தலை சரிசெய்ய முடியும். இந்த மெய்நிகர் வகுப்பறைகள் குழு வேலை, விமர்சன சிந்தனை மற்றும் கற்றல் செயலில் பங்கேற்பதை ஊக்குவிக்கின்றன.

**மாணவர் முன்னேற்ற முகாமைத்துவம்**

தனிப்பயனாக்கப்பட்ட ஆதரவை வழங்குவதற்காக மாணவர்களின் முன்னேற்றத்தைக் அவதானித்தல் முக்கியமாகும். முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் மாணவர் முன்னேற்ற முகாமைத்துவ அமைப்பின் வருகை, மதிப்பெண்கள் மற்றும் ஒட்டுமொத்த செயல்திறன் பற்றிய புதுப்பித்த தகவல்களை வழங்குகின்றது. ஆலோசகர்கள் இந்த தகவலை உதவி தேவைப்படும் மாணவர்களை அடையாளம் காணவும், அவர்களுக்கு சரியான ஆதரவை வழங்கவும் மற்றும் அவர்களின் சாதனைகளை அங்கீகரிக்கவும் பயன்படுத்துகின்றனர். தகவலறிந்த முடிவுகளை எடுப்பது மாணவர்கள் வெற்றிபெற உதவும் என்று முகாமைத்துவ பட்டப் படிப்பு நிறுவனம் நம்புகின்றது.

**நிகழ்நிலை பரீட்சைகள் மற்றும் பரீட்சை முகாமை**

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் டிஜிட்டல் பரீட்சை தளம் பரிட்சைகளை

நியாயமான, பாதுகாப்பான மற்றும் திறமையானவை என்பதை உறுதி செய்கிறது. கற்றல் கூட்டாளர்கள் தொலைதூர இடங்களில் இருந்து தங்கள் பரீட்களை எதிர்கொள்ள முடியும், மேலும் மோசடி தடுப்புக்கான வலுவான அமைப்புகள் செயல்படுத்தப்படுகின்றன. புறநிலை கேள்விகள் அமைப்பால் தானாகவே மதிப்பிடப்படுகின்றன. இது பீடத்திற்கு எழுத்திலான பதில்களை மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்த அனுமதிக்கின்றது. திட்டமிடல், மேற்பார்வை மற்றும் முடிவுகளை வெளியிடுதல் உட்பட பரீட்சை செயல்முறையன் அனைத்து பகுதிகளும் நிகழ்நிலை அமைப்பு மூலம் சுமூகமாக நிர்வகிக்கப்படுகின்றன.

மாணவர் கற்கைநெறி கட்டண முறை

பண அறவிடல் அலுவலகத்தில் நீண்ட வரிசையில் காத்திருந்த காலம் முடிவடைந்து முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் நிகழ்நிலை கட்டண முறை, கற்றல் கூட்டாளர்கள் உதவி வகுப்புகள், கட்டணம் மற்றும் பிற கட்டணங்களை மின்னணு முறையில் செலுத்துவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பான கட்டண நுழைவாயில்கள் ரகசியத்தன்மையை உறுதி செய்கின்றன. மேலும் தானியங்கி ரசீதுகள் நிதி பதிவுகளை வைத்திருப்பதை எளிதாக்குகின்றன. இந்த மேம்பாடுகளுடன், கற்றல் கூட்டாளர்கள் நிர்வாக விடயங்களைப் பற்றி சிரமங்களை எதிர் நோக்காது தங்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்துவதற்கு முடியும்.

**பதவியணி அறிக்கைகளின் முகாமைத்துவம்.**

நிறுவன செயல்திறனுக்கு திறமையான பதவியணி அறிக்கைகளின் பதிவு முகாமைத்துவம் அவசியம். எங்கள் டிஜிட்டல் கட்டமைப்பு மூலம் ஒப்பந்தங்கள், சான்றிதழ்கள் மற்றும் செயல்திறன் மதிப்பீடுகள் உட்பட ஊழியர் தரவை மையப்படுத்தப்படுகிறது. லீவு கோரிக்கைகள், பதவி உயர்வுகள் மற்றும் மதிப்பீடுகள் போன்ற மனித வள செயல்முறைகள் முறைப்படுத்தப்பட்டுள்ளன. பதவியணி உறுப்பினர்கள் தங்கள் பதிவுகளை நிகழ்நிலை ஊடாக அணுகுவதன் வெளிப்படைத்தன்மை மற்றும் வசதியை மதிக்கின்றார்கள்.

"சிந்தனையை வழிநடத்தும் டிஜிட்டல் சிறப்பு" என்பது வெறும் உரையை விட அதிகமானதாகும் - இது கல்வியின் எதிர்காலத்தை மேம்படுத்துவதற்கான எங்கள் உறுதியான அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன் மூலம், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் அனைத்து பங்குதாரர்களுக்கும் அதிகாரம் அளிக்கின்றது என்பதுடன், புத்தாக்கங்களை ஊக்குவிக்கின்றது, கற்றலுக்கு எல்லைகள் இல்லாத ஒரு ஆற்றல்மிக்க சூழலை உருவாக்குகின்றது. முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் இந்த மாற்றுப் பாதையில் தொடர்ந்து பயணிக்கும்போது, டிஜிட்டல் அதிகாரம் மூலம் சிறப்பை உருவாக்குவதற்கு ஏனைய தரப்பினரையும் அழைக்கின்றது.

# ஸ்வொர்ட் (SWOT) பகுப்பாய்வு

| பலம் | பலவீனங்கள் |
| --- | --- |
| 1. கல்வி மற்றும் தொழில் ரீதியாக திறமையான பல்விடய துறை பீடங்கள்<br>2. ஆற்றல்மிக்க (portal) கூடிய விரிவான கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு (Prajna)<br>3. உறுதிப்படுத்திய முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் வணிகக் குறியீடை உயர்த்தக்கூடிய வலுவான முன்னாள் மாணவர்கள்.<br>4. வெளிநாட்டு சந்தையில் வலுவான நிலைப்பாடு<br>5. ISO **9000:2015** போன்ற சான்றிதழ்கள்.<br>6. நன்கு பொருத்தப்பட்ட ஆராய்ச்சி நிலையம்<br>7. வசதியான இடத்தில் அமைந்திருத்தல் மற்றும் முகாமைத்துவ கல்விக்கான நல்ல உள்கட்டமைப்பு/நூலக வசதிகள்.<br>8. சுய-நிதியளிக்கும் நிலை. | 1. இதுவரை சர்வதேச அங்கீகாரம் இல்லாமை.<br>2. பாடத்திட்டங்களுக்கு இடையே credit transfer பரிமாற்ற முறை இல்லாமை.<br>3. தொழில்துறை அனுபவம் மற்றும் கல்வித் தகுதிகளின் சரியான கலவையுடன் பீட ஊழியர்கள் வரையறுக்கப்பட்டிருத்தல்.<br>4. போதுமற்ற கல்வி/நிர்வாக உதவி ஊழியர்கள் இல்லாமை.<br>5. பரந்த பொதுமக்களுடன் தேசிய பிரச்சினைகளில் மட்டுப்படுத்தப்பட்ட தலையீடு/புலப்படல்<br>6. கற்கைநெறிகளுக்காக வெளிநாட்டு மாணவர்களின் மட்டுப்படுத்தப்பட்ட பங்கேற்பு.<br>7. முறையான ஒருங்கிணைந்த நிறுவன வள திட்டமிடல் (ERP) கட்டமைப்பு இல்லாமை.<br>8. சந்தை இலக்காக கொண்ட நிகழ்ச்சித்திட்டங்களில் “சந்தைக்கு வேகம்” என்பதைத் தடுக்கும் கடுமையான கணக்காய்வு முறை. |
| **வாய்ப்புகள்** | **அச்சுறுத்தல்கள்** |
| 1. வெளிநாட்டினருடன் அதிக வலையமைப்புகளை அதிகரித்துக் கொள்வதற்கு இயலுதல்.<br>2. முன்னணி வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு நிறுவனங்களுடன் குறுகிய கால கற்கைநெறிகளுக்கான அதிக ஒத்துழைப்பு.<br>3. ஆலோசனை நிறுவனங்களின் முனைப்பான பங்கேற்பு.<br>4. புத்துயிர் பெறுவதற்கான சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கு (SME) ஆதரவளிப்பதில் விரிவான பங்கு.<br>5. தேசிய அளவில் தொடர்புடைய பிரச்சினைகள் | 1. நாட்டின் மூளைச் சாலிகளின் வெளியேற்றம் / நிலைமை காரணமாக சந்தை சுருங்குதல்.<br>2. வேகமாக மாறிவரும் சந்தை நிலப்பரப்பில் இருந்து கடுமையான போட்டி.<br>3. உள்ளூர் வணிக நிர்வாக பட்டநிலைப் பின்படிப்பு (MBA) படிப்புகளை பார்க்க சர்வதேச தகுதிகள் மேலோங்குதல்.<br>4. நிதி ரீதியாக தன்னிறைவு பெறுவதற்கு வணிக நிர்வாக பட்டப்படிப்பு மீது அதிகமாக நம்பியிருத்தல்.<br>5. நிதி சவால்கள் காரணமாக பட்டநிலை |

| | |
|---|---|
| குறித்து பயன்பாட்டு ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்.<br><br>6. இடம்பெயர விரும்புபவர்களை இலக்காகக் கொண்டு வெளிநாட்டு கூட்டு வணிக நிருவாக பட்டப் பின்படிப்பு (MBA) வழங்குதல்.<br><br>7. நிறைவேற்று அபிவிருத்தி திட்டங்களிட்டங்கள் (EDP) மூலம் நிறுவன நிர்வாகிகளின் திறனை கட்டியெழுப்புதல் | பின்படிப்பு கற்கை நடவடிக்கைகளில் நிறுவனங்களிலிருந்து குறைந்த ஊக்கம்.<br><br>6. மூளைச் சாலிகளின் வெளியேற்றம் காரணமாக உயர் அறிவுள்ள மாணவர்களை இழத்தல்.<br><br>7. அனுபவம் வாய்ந்த கல்விசாரா ஊழியர்களை இழத்தல்<br><br>8. செலவு கட்டமைப்பு மற்றும் வட்டி வருமானத்தை அதிகரித்தல். |

# தற்கால செயலாற்றுகை

**மாணவர்களின் ஆட்சேர்ப்பு**

| நிகழ்ச்சித்திட்டம் | உட் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டம் (DBA) | 12 |
| வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBA) | 278 |
| வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBA)(கடார்) | 30 |
| வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டநிலை பின்படிப்பு பட்டம் (EMBA) | 22 |
| வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டநிலை பின்படிப்பு (EMBA)(சீனா) | 24 |
| கல்வி முகாமைத்துவம் தொடர்பான அரசாங்க நிருவாக பட்டப் பின் படிப்பு பட்டம் | 45 |
| முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா | 41 |
| **மொத்த ஆட்சேர்ப்புகளின் எண்ணிக்கை** | **452** |

**வெளியேறும் பட்டதாரிகள்**

| | |
|---|---|
| வணிக நிருவாகம் தொடர்பான முது தத்துவமாணி பட்டப்படிப்பு (Ph.D.) | 04 |
| வணிக நிருவாகம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBA) | 302 |
| வணிக நிருவாகம் தொடர்பான நிறைவேற்று பட்டநிலை பின்படிப்பு பட்டம் (EMBA) | 28 |
| வரியிடல் தொடர்பான நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MBAT) | 07 |
| சுங்கம் மற்றும் சர்வதேச வியாபாரம் தொடர்பான வணிக முகாமைத்துவ விஞ்ஞான முதுமாணி பட்டம் (MBA-CIT) | 23 |
| கல்வி முகாமைத்துவம் தொடர்பான அரசாங்க நிருவாக பட்டப்பின் படிப்பு பட்டம் (MPAEM) | 38 |
| முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா(PDM) | 12 |
| **மொத்த பட்டதாரிகளின் எண்ணிக்கை** | **414** |

வெளிநாட்டு மாணவர்கள்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்புக்காக மாணவர்களை அனுப்புவதற்குத் தகுதியான நிறுவனமாக "குயின் எலிசபெத் பொதுநலவாய புலமைப் பரிசில் நிகழ்ச்சித் திட்டம்" மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிறுவனமாகும்.

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், **2023** ஆம் ஆண்டு முதல் சீன மாணவர்களுக்கு வணிக நிர்வாகத்தில் நிர்வாகத்தில் முதுமாணி பட்டப்படிப்பை வழங்கி வருகிறது. வணிக நிர்வாகத்தில்

முதுமாணிப் பட்டப்படிப்பு ஐக்கிய அரபு எமிரேட்ஸ், கட்டார், குவைத், ஓமன் மற்றும் பஹ்ரைன் ஆகிய நாடுகளுக்கும் வழங்கப்படுகிறது.

வணிக நிர்வாகத்தில் நிறைவேற்று முதுமாணிப் பட்டம் பயிலும் மாணவர்கள் வெளிநாட்டு பயிற்சித் திட்டங்கள் மூலம் சர்வதேச நிர்வாகத்திற்கு வெளிப்படுத்தப்படுகிறார்கள். சமீபத்தில், கசெட்ஸார்ட் (Kasetsart) பல்கலைக்கழகம் மற்றும் கஜாமாடா (Gadjah Mada) பல்கலைக்கழகத்துடன் உள்ள கூட்டாண்மை மூலம் முறையே தாய்லாந்திற்கும் இந்தோனேசியாவிற்கும் இதுபோன்ற கல்விப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# பதவியணி பற்றிய விபரங்கள்

**2023 டிசம்பர் 31 அன்றுள்ளவாறு சேவை வகுப்பு வாரியாக நிரந்தர பணிக்குழாம் பற்றிய விபரங்கள்**

| சேவை வகுப்பு | சம்பளக் குறியீடு | அனுமதிக்ப்ப ட்ட பதவியணி | உண்மைய ான பதவியணி | வெற்றிடங்க ள் |
|---|---|---|---|---|
| **1. ஆரம்ப நிலை** | | | | |
| பணி உதவியாளர்கள் | U - PL 1 | 02 | - | 02 |
| சாரதி | U - PL 3 | 03 | 01 | 02 |
| **2 இரண்டாம் நிலை** | | | | |
| முகாமைத்துவ உதவியாளர் | U - MN 1 | 09 | 02 | 07 |
| முகாமைத்துவ உதவியாளர் (காசாளர்) | U - MT 1 | 01 | 01 | - |
| முகாமைத்துவ உதவியாளர் (புத்தகம் பதியுநர்) | U - MN 1 | 01 | 01 | - |
| தொழில்நுட்ப அலுவலரட (சிவில்/மின்சாரம்/இயந்திரவியல்) | U - MN 1 | 02 | 02 | - |
| நூலக தகவல் உதவியாளர் | U - MN 1 | 04 | 03 | 01 |
| சிரேஸ்ட பதவிநிலை உதவியாளர் | U - MN 4 | 01 | 01 | - |
| **3 மூன்றாம் நிலை** | | | | |
| செய்நிரலாகக்குநர் மற்றும் முறைமை ஆய்வாளர் | U - AS 2 | 01 | 00 | 01 |
| மக்கள் தொடர்பு அலுவலர் | U - EX 1 | 01 | 00 | 01 |
| **4. சிரேஸ்ட நிலை** | | | | |
| பணிப்பாளர் | U – AC 5 | 01 | 01 | - |
| பேராசிரியர் | U – AC 5 | 01 | 01 | - |
| உதவி நூலகர் | U – AC 3 | 01 | 00 | 01 |
| சிரேஸ்ட முகாமைத்துவ ஆலோசகர் (ஒப்பந்த அடிப்படை) | U – AC 3 | 12 | 11 | 01 |
| முகாமைத்துவ ஆலோசகர் (ஒப்பந்த அடிப்படை | U – AC 3 | | | |
| சிரேஸ்ட விரிவுரையாளர்/ விரிவுரையாளர்ட/ விரிவுரையாளர்(மதகுகாண்) | U – AC 4 | 03 | 03 | - |
| சிரேஸ்ட உதவி நிதியாளர்/ பிரதி நிதியாளர் | U – EX 2 | 01 | 01 | - |
| சிரேஸ்ட உதவப் பதிவாளர்.். பிரதிப் பதிவாளர் | U – EX 2 | 01 | 01 | - |

❖ *பதவியணி வெற்றிடங்கள் ஒப்பந்த அடிப்படை நியமனங்கள் மூலம் நிரப்பப்படுகின்றன.*

# கல்விசார் பதவியணியின் பதவிகள் மற்றும் தகைமைகள்

பிரதான பீடங்கள்

| **தொடர் இலக்கம்** | **பெயர்** | **பதவி** | **பிரதான தேர்சி துறை** | **கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் ( தொழில்சார் தகைமைகள் கடும் கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளன.)** |
|---|---|---|---|---|
| 1 | சிரேஷ்ட பேராசிரியர் ஏ. தர்மசிறி | சிரேஷ்ட பேராசிரியர் | மனிதவள முகாமைத்துவம் | BSc Eng. (Moratuwa), CEng, MBA (PIM-SJP), PhD (PIM-SJP), **FCIPM (SL), CMgr, FCMI (UK)** |
| 2 | திரு.அமரசேகர | சிரேஷ்ட விரிரையாளர் | நிதி | BSc (Comp) (Staffordshire), MSc (USQ), MBA (Colombo), PG. Dip (UK), **ACMA (UK), PQHRM (IPM, SL), Certified Coach (ABNLP)** |
| 3 | கலாநிதி சமந்த ரத்நாயக்னக | சிரேஷ்ட விரிரையாளர் | பொது முகாமைத்துவம் | BBMgt (HRM) Sp. (Kelaniya), NDHRM (IPM), PG Dip. Mktg (SL), CPM (Asia), MBA (PIM-USJ), PhD (IUKL-Malaysia) |
| 4 | கலாநிதி அசங்க ரணசிங்க | சிரேஷ்ட விரிரையாளர் | சந்தைப்படுத்தல் | BSc Hons (Colombo), MBA (PIM-SJP), DBA (Manipal GlobalNxt), Professional PG Dip. Mktg**, FCIM (UK), Chartered Marketer** |

ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ள பீட உறுப்பினர்கள்

| தொடர் இலக்கம் | பெயர் | பதவி | விடய துறை | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் ( தொழில்சார் தகைமைகள் கடும் கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளன.) |
|---|---|---|---|---|
| 1 | கலாநிதி ஏ.கே.எல். ஜெயவர்தன | சிரேஷ்ட ஆலோசகர் | மனிதவள முகாமைத்துவம் | BTech (Madras), MBA (PIM-SJP), PhD (Canberra) |
| 2 | கலாநிதி ட்ரெவர் மெண்டிஸ் | சிரேஷ்ட ஆலோசகர் | மூலோபாய முகாமைத்துவம் | AIB, PG Dip Business & Fin Adman., MBA (PIM-SJP), MSc Mgmt (Massey, NZ), PhD (Kelaniya), **FCMI (UK)** |
| 3 | கலாநிதி ட்ரெவிஸ் பெரேரா | சிரேஷ்ட ஆலோசகர் | தொழில்முயற்சி | MBA (PIM-SJP), PhD (PIM-SJP), **MIED (UK),** |
| 4 | கலாநிதி டி குணதிலக்க | சிரேஷ்ட ஆலோசகர் | நிதி | Dip. M (UK), MBA (PIM-SJP), MA in Financial Economics (Colombo), MPhil, DBA (MSM - Netherlands), **FCMA (UK), MCIM (UK),** |
| 5 | எஸ். அத்துரலியகே | சிரேஷ்ட முகாமையாளர் | தகவல் தொழில்நுட்பம் | BSc (Ruhuna), MSc. (Colombo), **MCP, MBCS** |
| 6 | எஸ் நிவுன்ஹெல்ல | சிரேஷ்ட முகாமையாளர் | வங்கியிடல் | BSc Mgt. (SJP), MBA-PIM (SJP), **FIB (SL), MISMM** |

வெளியக பீட உறுப்பினர்கள்

| தொடர் இலக்கம் | பெயர் | விடய துறை | கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகள் ( தொழில்சார் தகைமைகள் கடும் கருப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ளன.) |
|---|---|---|---|
| 1 | திரு. ஜே. குணதிலக்க | வணிக தொடர்பாடல் | BSc (Col), Dip. M (UK), MBA (PIM-SJP), **FCMA (UK), CGMA, CIMA (UK), CIM (UK)** |
| 2 | கலாநிதி ஆர் எதிரிசிங்க | நிதி | MBA (PIM-SJP), MSc (Cranfield - UK), PhD (London School of Economics) **FCMA, ACCA, CMILT,** |
| 3 | டப்.ஏ.சீ.ஜே. த கொஸ்தாக | தொழில்முயற்சி | BSc Eng. (Moratuwa), MA(Kelaniya), MBA (PIM-SJP), **C.Eng.; MIE (SL)** |
| 4 | கலாநிதி ஆர். பமுனுசிங்க | தொழில்முயற்சி | MSc (Surrey), MA (Kelaniya), PhD (MUST, Malaysia), **CIM (UK), SLIM (Sri Lanka**) |
| 5 | கலாநிதி எஸ் துரைரத்னம் | பொது முகாமைத்துவம் | BSc (Peradeniya), MSc (SJP), MBA (PIM- SJP), M.I. Chem. C (SL); PhD (MSU, M`sia), **C. Chem (SL)** |
| 6 | திரு.ஆர்.குமார் | சந்தைப்படுத்தல் | MBA (PIM-SJP), MCA (University of Canberra) |
| 7 | திரு.எம்.எம்.எம்.ரிஸ்பி | சந்தைப்படுத்தல் | MSc International Customs law and administration (Canberra), LLB, BDev Hons, (Colombo), **Attorney at Law,** |
| 8 | திரு. ஜே.ஏ.டீ.ஏ. பெரேரா | சந்தைப்படுத்தல் | MBA (PIM-SJP), Dip (Gemology) |
| 9 | பேராசிரியர் ஏ.ஆர்.அஜ்வர்ட் | கணக்கிடல் | MBA, PhD (Japan) |

| | | | |
|---|---|---|---|
| 10 | கலாநிதி டப்.ஏ.விஜேவர்தன | பொருளியல் | BPA (SJP), PGDip (SJP), MSc (UK), Doctor of Civil Law (Northumbria), **FIB (Sri Lanka)** |

| | | | |
|---|---|---|---|
| 11 | திரு. எச். பெர்னாண்டோ | சட்ட வடிவமைப்பு | MBA (NTU-MIT), LLM (Lond.), Attorney at Law |
| 12 | கலநிதி பெட்ரிக் அபேரத்ன | கருத்திட்ட முகாமைத்துவம் | B.Sc. Agric (Cey), PGDip (UK), M.Sc. (Reading, UK), PhD (Virginia USA), FSLIAg |
| 13 | திரு. சி. குமாரசிறி | கணக்கிடல் | BSc (SJP), MBA (Colombo), ACCA (UK), CA (SL), AAT (SL), CMA (SL) |
| 14 | கலாநிதி எல்.என்.பீ. வெடிகந்தகே | கல்வி முகாமைத்துவம் | BEd (Colombo), MEd (Colombo), MPhil (Colombo), PhD (UK) |
| 15 | திருமதி டீ.குணதிக்க | வரியிடல் | BSc (Colombo), MSc (SLIDA) |
| 16 | திருமதி எஸ்.வீரவங்ஸ | பொருளியல் | BA (Kelaniya), MA (Colombo), MBA (PIM-SJP) |
| 17 | திரு.எஸ்.திசாநயக்க | வரியிடல் | BA (Peradeniya), MA (Kelaniya), MBAT (PIM-SJP), MBus (Kelaniya) |
| 18 | திரு.எஸ்.தர்மவர்தன | நிதி | BSc (SJP), MPA (PIM-SJP) |
| 19 | திரு.டீ.எம். ஜயசேகர | பொது முகாமைத்துவம் | BSc Eng. (Peradeniya), MBA (PIM-SJP) |
| 20 | கலாநிதி தினுகா விஜேதுங்க | சந்தைப்படுத்தல் | B.Sc.. Marketing (SJP), MBA (PIM-SJP), PhD (Melbourne) |
| 21 | கலாநிதி எஸ்.ஜே.நவரத்ன | மூலாபாய முகாமைத்துவம் | MA, PhD (Japan), MBA (PIM-SJP) |
| 22 | திரு.எஸ்.எஸ்.செனெவீர | நிதி | NDT (Moratuwa), DTEC (OUSL), PGDM, MBA (PIM-SJP), MIIE (SL), |
| 23 | திருமதி பர்சானா ஜமீல் | சட்ட வடிவமைப்பு | LLB (Colombo), LLM (Colombo), LLM (Lond.), |

| | | | |
|---|---|---|---|
| 24 | பேராசிரியர் டீ.பொன்சேகா | பொருளியல் | BA (Ceylon), MA (Colombo), LLB (Colombo), MBA (PIM-SJP), PhD (PIM-SJP), Attorney-at-law |

| | | | |
|---|---|---|---|
| 25 | கலாநிதி ரவீந்திர ஏ பிரனாந்து | மூலோபாய முகாமைத்துவம் | MBA (Colombo), MSt (Cambridge), DBA (European Business School), **FCIM** |
| 26 | கலாநிதி ஏ கப்ரால் | சட்டம் தயாரித்தல் | PhD (Canberra-Australia) |
| 27 | திரு.எம்.லியனகே | சட்டம் தயாரித்தல் | LLB (London), LLM (Singapore), **Attorney at Law** |
| 28 | கலாநிதி லொயி பிரனாந்து | பொருளியல் | MSc (Moscow), PhD (Sussex) |
| 29 | சிரேஷ்ட்ட பேராசியிர் ஷிரோனிகா கருணாநாயக்க | கல்வி முகாமைத்துவம் | DEd (Wollongong), PGD in Education (Colombo), BSc (OUSL) |
| 30 | கலாநிதி உபாலி சேதரே | கல்வி முகாமைத்துவம் | PhD (Iowa), PhD (Mahachulalongkorn, Thailand), MA. (Iowa), BEd Hons (Peradeniya) |
| 31 | திரு.திஸ்ஸ திசாநாயக்க | வணிக தொடர்பாடல் | BSc Bus. Adm (SJP), MBA (PIM), |
| 32 | திரு.எஸ்.ஜயசுநந்தர | தகவல் தொழில்நுட்பம் | BSc (Colombo), PGDip in Comp. Sc. (Colombo), MBA (PIM-SJP) |
| 33 | காநிதி ஏ சிவகாநந்தன | கருத்திட்ட முகாமைத்துவம் | BEng (Hons) (London), MBA (Cranfield), PhD (USA), **AMIE (SL), FCMA (UK),** |
| 34 | பேராசிரியர் ஜே.எல். ரத்னசேகர | கல்வி முகாமைடத்துவம் | BSc, PhD (Russia) |
| 35 | தி.எல்.வீரதுங்க | வணிக தொடர்பாடல் | BSc (Colombo), MBA (Colombo), |
| 36 | திருமதி .கயனி த அல்விஸ் | பொது முகாமைத்துவம் வணிக தொடர்பாடல் | MBA (PIM-SJP), MSc (Reading), **CSCM (ISCEA USA), FISMM, CMILT** |

# கற்கைநெறிகள்

கலாநிதி பட்டம் ( Ph.D)

சமகால கல்வித்துறையில் முன்னணியில் இருக்கும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு நிறுவனம், கோட்பாடு மற்றும் நடைமுறை ஆகிய இரண்டிலும் சிறந்து விளங்கக்கூடிய ஆராய்ச்சி அடிப்படையிலான அறிஞர்களை பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்ட அதிநவீன பாடத்திட்டத்தை வழங்குகின்றது. கல்வி மற்றும் பயிற்சித் துறையில் உள்ள சிக்கலான சவால்களை எதிர்கொள்ளத் தேவையான கருவிகள் மற்றும் அறிவுடன் விண்ணப்பதாரரை தயார்படுத்துவதே எங்கள் கலாநிதி பட்டத்தின் நோக்கமாகும். மேலும், இது இடைநிலை ஆய்வு ஒத்துழைப்புக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது. எமது புகழ்பெற்ற பீடத்தின் நிபுணத்துவம் மற்றும் அதிநவீன வசதிகளைப் பயன்படுத்தி வழங்கப்படும் இந்த கற்கைநெறி, அறிவுசார் வளர்ச்சி மற்றும் புத்தாக்கங்களை போஷிக்கும் ஒரு கற்றல் அனுபவத்தை வழங்குகிறது.

கலாநிதி பட்டப் படிப்பு கற்கைநெறியை கற்பதற்கு தகைமை பெற்றவர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

அ. முகாமைத்துவத் துறையின் தற்போதைய, சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொழில்முறை பயன்பாட்டிற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றை பகுப்பாய்வு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஆ. புதிய அறிவை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குதல், ஆராய்ச்சி முறைமையில் பட்டதாரி மாணவர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் குறிப்பிட்ட துறையில் மற்றவர்களால் மேற்கொள்ளப்பட்ட முதல் ஆராய்ச்சியை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் மூலம் சுயாதீன ஆராய்ச்சி திட்டங்களை வடிவமைத்து மேற்கொள்வதை பிரதிபலிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

இ கருத்துக்கள் மற்றும் முடிவுகளுடன், நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களை அணுகவும், அவற்றை தெளிவாகவும் திறம்படவும் தொடர்புகொள்ளவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஈ. முகாமைத்துவத் துறையின் சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாக தீர்ப்புகள் எடுப்பதன் முக்கியத்துவத்தை புரிந்து கொள்ளவும், தொழில்முறை சூழலில் எதிர்பாராத சந்தர்ப்பங்களிலும் தனிப்பட்ட தீர்ப்பு மற்றும் பொறுப்பை செயல்படுத்தவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.

உ. ஆராய்ச்சி செய்யும் போது நெறிமுறைகளை வலுப்படுத்தவும், சக மதிப்பாய்வு செய்யப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட சஞ்சிகைகளின் வெளியீடுகள் மூலம் புதிய அறிவைப் பகிரக் கூடியவராக இருத்தல் வேண்டும்.


PhD
Postgraduate
Institute of
Management

வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டம் (DBA)

வணிக உலகின் அறிவுசார் சக்தி, ஒரு தேசத்தின் சமூக-பொருளாதார நலனுக்கு மிகவும் முக்கியமானது. நம்பகமான முடிவுகளை வழங்கும் பாரம்பரியத்தை தொடர்ந்து நிலைநிறுத்தும் முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு நிறுவனம், உள்நாட்டு யதார்த்தத்தையும் உலகளாவிய அணுகுமுறையையும் இலக்காகக் கொண்டு வடிவமைக்கப்பட்ட புதிய வணிக நிர்வாகத்தில் கலாநிதிப் பட்டப் படிப்பை பெருமையுடன் வழங்குகின்றது. முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தால் செயல்படுத்தப்படும் புகழ்பெற்ற வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டப் படிப்பு கற்கைநெறி, விண்ணப்பதாரர்கள் கடுமையான ஆராய்ச்சியை மேற்கொள்ள தேவையான திறன்களை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்த கண்டுபிடிப்புகளை நிஜ உலக தொழில்களிலும் அரசாங்கத்தின் முடிவுகளை எடுப்பதிலும் பயன்படுத்துவார்கள் என்ற நோக்கத்துடன் இதனை உருவாக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், பயன்பாட்டு வணிக முகாமைத்துவ ஆராய்ச்சியை வடிவமைக்க விண்ணப்பதாரர்கள் ஊக்குவிக்கப்படுகிறார்கள். மேலும் இலங்கையில் முகாமைத்துவ நடைமுறையை பாதிக்கும் அசல் ஆராய்ச்சியை மேம்படுத்த விண்ணப்பதாரர்கள் வழிநடாத்தப்படுகின்றார்கள். மேலும், இது கோட்பாடு மற்றும் பயன்பாட்டை இணைக்கும் உயர்தர, கடுமையான, பொருத்தமான மற்றும் பயன்பாட்டு ஆராய்ச்சிக்கான சந்தை இடைவெளியை நிரப்புவதோடு, உள்நாட்டு, பிராந்திய மற்றும் உலகளாவிய பொருளாதாரங்களின் வளர்ச்சிக்கு பங்களிக்கிறது.

வணிக நிர்வாகத்தில் கலாநிதி பட்டப் படிப்புக்கு தகுதி பெறுபவர்கள் பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

அ) முகாமைத்துவத் துறையின் தற்போதைய, சிக்கலான மற்றும் சர்ச்சைக்குரிய பிரச்சினைகளை அடையாளம் கண்டு, தொழில்முறை பயன்பாட்டிற்கு பொருத்தமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றை பகுப்பாய்வு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஆ) உள்நாட்டு மற்றும் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த நிறுவன அல்லது தொழில் சார்ந்த பிரச்சினைகளை தீர்க்க புதிய அறிவை உருவாக்குவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்குதல், சுயாதீன ஆராய்ச்சி திட்டங்களை வடிவமைத்து செயல்படுத்துவதை பிரதிபலிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

இ) கருத்துக்கள் மற்றும் முடிவுகளுடன், நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களை அணுகி, கோட்பாடு மற்றும் பயன்பாடு ஆகியவற்றுக்கு இடையேயான இடைவெளிகளை நிரப்பி, அவற்றை தெளிவாகவும் திறம்படவும் தொடர்புகொள்ளக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஈ) முகாமைத்துவத் துறையின் சிக்கலான பிரச்சினைகள் தொடர்பாக தீர்ப்புகள் எடுப்பதன் முக்கியத்துவத்தை புரிந்து கொண்டு, தொழில்முறை சூழலில் எதிர்பாராத சந்தர்ப்பங்களிலும் தனிப்பட்ட தீர்ப்பு மற்றும் பொறுப்பை செயல்படுத்தவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.

உ) ஆராய்ச்சி செய்வதில் நெறிமுறைகளை வலுப்படுத்தவும், வெளியீடுகள், விளக்கக்காட்சிகள் மற்றும் பிற செல்வாக்கு மிக்க தகவல் தொடர்பு முறைகள் மூலம் புதிய அறிவைப் பரப்பக் கூடியவராக இருத்தல் வேண்டும்.




வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBA)

கல்விசார் சிறப்பின் அடையாளமாக, மிக நுணுக்கமாக வடிவமைக்கப்பட்ட வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு கற்கைநெறியை முகாமைத்துவம் தொடர்பான பட்டபபின்படிப்பு நிறுவனம் வழங்குகின்றது. இங்கே, கோட்பாடு மற்றும் நடைமுறை பயன்பாடுகளின் ஆற்றல்மிக்க கலவை மூலம், எந்தத் துறையிலும் வெற்றிக்கு இன்றியமையாத விமர்சன சிந்தனை திறன்கள், தலைமைத்துவ திறன்கள் மற்றும் மூலோபாய மனப்பான்மையை நீங்கள் வளர்த்துக் கொள்வீர்கள். நிஜ உலக சவால்கள் மற்றும் அனுபவம் அடிப்படையிலான கற்றலுக்கு முக்கியத்துவம் அளிப்பதன் மூலம், கற்றல் பங்காளிகள் தங்கள் தொழில் வாழ்க்கையிலும் அதற்கு அப்பாலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்த தயாராக இருப்பதை இது உறுதி செய்கின்றது. முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு நிறுவனம் வழங்கும் வணிக நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டம், மூலோபாய சிந்தனையை மேம்படுத்துவது முதல் பயனுள்ள முடிவெடுக்கும் கலையை தேர்ச்சி பெறுவது வரை, கற்றல் பங்காளிகளுக்கு தலைமைத்துவப் பாத்திரங்களில் வெற்றிபெற தேவையான திறன்களையும் நுண்ணறிவையும் வழங்குகின்றது.

> முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின்படிப்பு நிறுவனத்தின் வணிக நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு பட்டதாரிகள், பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

அ) உள்ளூர் மற்றும் உலகளாவிய அளவில் அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை அடையாளம் கண்டு, தற்போதைய முகாமைத்துவ பிரச்சினைகள் பற்றிய கூர்மையான புரிதலை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஆ) கூர்மையான மற்றும் தர்க்கரீதியான சிந்தனையுடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, பொருத்தமான முகாமைத்துவ நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆழமான பகுப்பாய்வின் மூலம் வணிகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு புத்திசாலித்தனமான தீர்ப்புகளுடன் தீர்வு காண்பதை பிரதிபலிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

இ) தொடர்புடைய அரசு மற்றும் தனியார் நிறுவனங்களை வலையமைப்பு மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் அணுகுவதற்கும், தொடர்புடைய நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களுக்கு முடிவுகளை தெளிவாக தொடர்புகொள்ளவும் கூடியவராக இருத்தல் வேண்டும்.

ஈ) பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தையும் வணிக நடவடிக்கைகளின் மனிதாபிமான அம்சங்களையும் புரிந்து கொண்டு, நம்பகரமான தலைவராக தன்னியக்க கட்டுப்பாடு மற்றும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

உ) ஒவ்வொரு மட்டத்திலும் முடிவுகளை எடுக்கும்போது விழுமியங்களைப் பற்றி அறிந்து, தொழில்முறை, ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.




PIM இன் MBAT தெற்காசியாவில் வரிவிதிப்பில் முதலாவது சிறப்பு MBA ஆகும். MBA (வரிவிதிப்பு) கவனமாக வடிவமைக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்டு, வழங்கப்படுகிறது. இதனை கற்கும் பங்காளிகள் ஒரு உலகளாவிய மனநிலையை வளர்த்துக் கொள்வதற்கு உதவுகின்றது. அதே நேரத்தில் அவர்கள் செயல்படும் வணிகத் துறைகளில் தேர்ச்சி பெறுவதற்கு ஒரு உள்ளூர் உணர்வையும் கொண்டிருக்க உதவுகிறது. போட்டியை வெல்வது மட்டுமல்லாமல், போட்டியைத் தேவையற்றதாக்கவும் அவர்கள் பயிற்சி பெற்று மேம்படுத்தப்படுகின்றார்கள். இதனால் அவர்கள் வாடிக்கையாளர்களுக்கும் மற்ற பங்குதாரர்களுக்கும் அதிக மதிப்பைப் உருவாக்குகின்றார்கள். இது நெகிழ்வானது மற்றும் தொழில்நுட்பத்தில் மிகவும் புதுப்பித்த நிலையில் உள்ளது. இது எங்கள் கற்கும் பங்காளிகள் தங்கள் வாழ்க்கையில் அடுத்த கட்டத்தை எடுக்கத் தயாராக இருப்பதற்கு உதவுகிறது. PIM இன் ஆசிரியர்கள் கல்வி மற்றும் தொழில்துறை தலைவர்களின் சிறந்த கலவையாக உள்ளனர். அவர்கள் விரிவான அறிவையும் அனுபவத்தையும் கொண்டு வருகிறார்கள். இதன் விளைவாக, மற்றவர்களை விட உயர்ந்து நிற்கும் அதே வேளையில், அவர்கள் அடைந்த தேர்ச்சியின் மூலம் வித்தியாசமாக விடயங்களைச் செய்யும் அல்லது வித்தியாசமாக செயற்படும் தொழில்முறை முகாமையாளர்களின் குழுவை உருவாக்குதல் அதன்

பயனாகும்.

PIM இன் MBA (வரிவிதிப்பு) பட்டதாரிகள் பின்வருவனவற்றை பின்வருவனவற்றை மேற்கொள்வதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.

அ. உள்ளூர் மற்றும் உலகளாவிய மட்டங்களில் உள்ள முக்கியமான அறிவு, திறன்கள் மற்றும் மனப்பான்மைகளை அடையாளம் கண்டு, நிதிச் சூழலில் உள்ள தற்போதைய பிரச்சினைகள் குறித்து விமர்சன விழிப்புணர்வை வெளிப்படுத்துவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.
ஆ நாட்டில் உள்ள நிதிச் சிக்கல்களைத் தீர்க்க பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி விமர்சன மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் ஆழமான பகுப்பாய்வுடன் சிக்கல் கண்டறிதலைப் பிரதிபலித்து, சரியான தீர்ப்புகளை வழங்குவதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும்.
இ. வலைப்பின்னல் மூலம் உள்ளூர் மற்றும் உலகளாவிய அளவில் தொடர்புடைய பொது மற்றும் தனியார் நிறுவனங்களை அடைவதற்கும், தொடர்புடைய நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களுக்கு முடிவுகளைத் தெளிவாகத் தெரிவிப்பதற்கும் முடியுமாக இருத்தல் வேண்டும்.
ஈ.வணிக மற்றும் நிதி நடவடிக்கைகளின் பொருளாதாரம், சமூகம் மற்றும் அரசியல் பிரச்சினைகளில் மற்றும் மனிதாபிமான அம்சங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, சிந்தனைத் தலைவர்களாக சிக்கல்களைத் தீர்ப்பதில் சுய-திசை மற்றும் அசல் தன்மையை வெளிப்படுத்தல் வேண்டும்.
நு. நிதிச் சூழலில் முடிவுகள் எடுக்கப்படும்போது மதிப்புகள் குறித்த உணர்வுடன் இருப்பதன் மூலம் தொழில்முறை, நேர்மை மற்றும் நெறிமுறைகளை வலுப்படுத்தக் கூடியவராக இருத்தல் வேண்டும்.




MBAC (சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம்) தொடர்பான வணிக நிருவாக பட்டப் பின்படிப்பு பட்டம்

PIM இன் சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம் தொடர்பான வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBAC) எங்கள் சுங்க அலுவலர்களை தகுதிவாய்ந்த நிபுணர்களாக மாற்றுவதன் மூலம் விரும்பிய மாற்றத்தை அடைவதில் கவனம் செலுத்துகின்றது. நாட்டின் மீதான இதன் மறைமுக தாக்கம் மிக அதிகம். இந்த உயர் மதிப்புள்ள முழுநேரப் கற்கைநெறி சுங்க அலுவலர்களின் தொழில்முறை மேம்பாட்டிற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை பணியமர்த்துபவர்கள் மற்றும் பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட

கருத்துகள், திட்டத்தின் செயல்திறனுக்கான பலரின் எதிர்பார்ப்புகளுக்கு சான்றுகளை வழங்குகின்றது.

இரண்டு வருட காலப்பகுதியில் நடாத்தப்படும் இந்த கற்கைநெறி, ஊடாடும் வகுப்பறை அமர்வுகள், திறன் மேம்பாட்டிற்கான பீட ஆலோசனை, செயல்பாட்டு ஆய்வுகள், வதிவிட பட்டறைகள் மற்றும் நடைமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சி/திறன் திட்டத்துடன் முடிவடைகின்றது.

PIM இன் சுங்கம் மற்றும் சர்வதேச வணிகம் தொடர்பான வணிக நிர்வாகத்தில் பட்டநிலை பின்படிப்பு பட்டம் (MBAC) பெற்ற பட்டதாரிகள் பின்வருவற்றை மேற்கொள்வதற்கு முடியுமானவராக இருத்தல் வேண்டும்.

அ. உள்ளூர் மற்றும் உலகளாவிய மட்டங்களில் அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை அடையாளம் கண்டு, சுங்க நடவடிக்கைகளின் தற்போதைய பிரச்சினைகள் குறித்து ஆழமான புரிதலை வெளிப்படுத்த முடியுமாதல் வேண்டும்.
ஆ. கூர்மையான மற்றும் தர்க்கரீதியான சிந்தனையுடன் பிரச்சினைகளை அடையாளம் கண்டு, பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் ஆழமான பகுப்பாய்வின் மூலம் நாட்டின் சுங்க நடவடிக்கைகள் தொடர்பான பிரச்சினைகளை புத்திசாலித்தனமான தீர்ப்புகளுடன் மிக உயர்ந்த மட்டத்தில் தீர்க்க முடியும் என்பதை வெளிப்படுத்த முடியுமாதல் வேண்டும்.
இ. வலைப்பின்னல் மூலம் தொடர்புடைய பொது மற்றும் தனியார் நிறுவனங்களை உள்நாட்டிலும் உலக அளவிலும் அடையவும், தொடர்புடைய நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களுக்கு முடிவுகளை தெளிவாக தெரிவிக்கவும் முடியுமாதல் வேண்டும்.
ஈ. பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் முக்கியத்துவத்தையும், சுங்க கொள்கை முயற்சிகளின் மனிதாபிமான அம்சங்களையும் அடையாளம் கண்டு, நம்பகமான தலைவராக சுய கட்டுப்பாடு மற்றும் திறமையை வெளிப்படுத்த முடியுமாதல் வேண்டும்.
உ.சுங்கத் துறை தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது விழுமியங்களைப் பற்றிய புரிதலுடன் தொழில்முறை, ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முடியுமாதல் வேண்டும்.

பொது நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்பு பட்டம் (MPA)

1988 இல் அறிமுகப்படுத்தப்பட்ட பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டப் படிப்பு, முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவனத்திலும; (Postgraduate Institute of Management - PIM), இலங்கையிலும் முன்னோடி முதுமாணிப் பட்டப் படிப்புகளில் ஒன்றாகும். இது அரச துறையின் சிரேஷ்ட அலுவலர்களை இலக்காகக் கொண்டுள்ளது. இந்தத் திட்டம் கொழும்பு மட்டுமல்லாது, இலங்கை முழுவதும் உள்ள அரச துறை அலுவலர்களுக்குச் சேவைகளை வழங்குகின்றது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின், பொது நிர்வாகம் தொடர்பான கலை முதுமாணி கற்கைநெறி மூலம், 1988 ஆம் ஆண்டு முதல் அமைச்சின் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள் மற்றும் ஆணையாளர் நாயகர்கள் மட்டுமல்லாது, முப்படைகளின் மேஜர் ஜெனரல்கள், பிரிகேடியர்கள், கொமடோர் மற்றும் விங் கமாண்டர்கள், மருத்துவ மருத்துவர்கள் மற்றும் பிற வல்லுநர்களையும் உருவாக்கியுள்ளது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது நிர்வாகத்தில் கலை முதுமாணி பட்டப்படிப்பின் மூலம் அவர்கள் பெற்றுள்ள பரந்த அறிவு, திறன்கள் மற்றும் நம்பிக்கை, அரச துறையின் உயர் பதவிகளை வகிக்கவும், அந்தத் துறையில் உள்ள மற்ற சமகாலத்தவர்களை விட முன்னேறவும் அவர்களுக்குப் பெரிதும் உதவியுள்ளது. வேறு வார்த்தைகளில் கூறுவதானால், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பு அதன் கற்றல் பங்காளர்களை தனித்துவமான திறன்களால் முழுமையடையச் செய்கின்றது.

அரச துறையில் எழும் தேவைகளுக்கு ஏற்ப பாடத்திட்டம் மாற்றங்களுக்கு உட்படுகிறது. அனைத்து பங்குதாரர்களின் மதிப்புமிக்க உள்ளீடுகள் மற்றும் புரிதல்களுடன் அவ்வப்போது கலந்தாலோசித்த பின்னரே இது வடிவமைக்கப்படுகிறது. எனவே, அறிவு, கொடுக்கப்பட்ட சூழ்நிலைக்கு அறிவைப் பயன்படுத்துதல், திறன் மேம்பாடு மற்றும் அரச துறையின் சவால்களை சமாளிக்கும் திறன் ஆகியவை இந்தத் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளில் தகவலறிந்த, தர்க்கரீதியான முடிவுகளை எடுப்பதற்காக உண்மையான வாழ்க்கை நிகழ்வுகள் மற்றும் உதாரணங்கள் மூலம் இவை வலுப்படுத்தப்படுகின்றன.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் பொது நிர்வாகத்தில் முதுமாணிப் பட்டப்படிப்பு பெற்றவர்கள் பின்வரும் திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அ. உள்நாட்டு மற்றும் உலகளாவிய மட்டங்களில் அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை அடையாளம் கண்டு, பொது நிர்வாகத்தின் தற்போதைய பிரச்சினைகள் குறித்த ஆழ்ந்த

புரிதலை வெளிப்படுத்த முடியுமாதல் வேண்டும்.

ஆ. கூர்மையான சிந்தனை, முறையான மற்றும் ஆக்கப்பூர்வமான பகுப்பாய்வு மூலம் பிரச்சினைகளை அடையாளம் காணுதல் மற்றும் பொது நிர்வாகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு அறிவார்ந்த தீர்ப்புகளுடன் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தி தீர்வு காண்பதற்கு முடியுமாதல் வேண்டும்.

இ. சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் வலைப்பின்னல் மற்றும் குழு பங்கேற்பின் மூலம் அண்மிப்பதற்கும், சம்பந்தப்பட்ட நிபுணர் மற்றும் நிபுணர் அல்லாத குழுக்களுக்கு தெளிவான முடிவுகளைத் தெரிவிப்பதற்கும் முடியுமாதல் வேண்டும்.

ஈ. பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் முக்கியத்துவம் மற்றும் சுங்கக் கொள்கை முயற்சிகளின் மனிதாபிமான அம்சங்களை அடையாளம் காணுவதற்கும், மேலும் நம்பகமான தலைவராக தன்னம்பிக்கை மற்றும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துவதற்கும் முடியுமாதல் வேண்டும்.

உ. பொது நிர்வாகம் தொடர்பான பணிகளைத் திட்டமிடுதல் மற்றும் செயல்படுத்துதல் தொடர்பான முடிவுகளை எடுக்கும்போது விழுமியங்களைப் பற்றிய புரிதலுடன் தொழில்முறை, ஒருமைப்பாடு மற்றும் நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முடியுமாதல் வேண்டும்.



## கல்வி முகாமைத்துவம் தொடர்பான பொது நிருவாக பட்டப் பின்படிப்பு பட்டம் (MPA-EM)

கல்வி முகாமைத்துவம் தொடர்பான பொது நிர்வாக கலைமுதுமாணி (MPAEM) கற்கைநெறி, எமது பாடசாலை அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளின் பரந்த அறிவுத் தேவைகள் பற்றிய மதிப்பீட்டின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. உண்மையில், PIM இன் கல்வி முகாமைத்துவம் தொடர்பான பொது நிர்வாக கலை முதுமாணி கற்கைநெறி, பாடசாலை அதிபர்கள், கல்வியாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகளை திறமையான நிபுணத்துவவாதிகளாக மாற்றுவதன் மூலம் விரும்பிய மாற்றத்தை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது. இந்த மாற்றத்தின் நேரடி மற்றும் மறைமுக தாக்கம் நாட்டிற்கு மிகவும் முக்கியமானது ஆகும்.

கல்வி முகாமைத்துவம் தொடர்பான பொது நிர்வாக கலை முதுமாணி கற்கைநெறியின் கற்றல் இலக்குகள் பின்வருமாறு ஆகும்.

அ. உள்நாட்டு மற்றும் உலகளாவிய மட்டங்களில் அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை அடையாளம் கண்டு, கல்வி நிர்வாகத்தின் தற்போதைய பிரச்சினைகள் குறித்த கோட்பாட்டு அறிவு மற்றும் விமர்சன விழிப்புணர்வு பற்றிய ஆழமான புரிதலை வெளிப்படுத்துதல் மற்றும் தொழில்முறை பயன்பாட்டிற்கு பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தும் திறன் இருத்தல் வேண்டும்.

ஆ. கூர்மையான மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பகுப்பாய்வை பிரதிபலித்தல், கல்வி நிர்வாகத்தின் சிக்கலான பிரச்சினைகளை முறையான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் தீர்ப்பதுடன், அத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் கல்வி முறையை மேலும் மேம்படுத்துவதற்கும் தொழில்முறை மட்டத்தில் தேவையான பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்துவதற்கு முடியுமாதல் வேண்டும்.

இ. சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் வலைப்பின்னல் மற்றும் குழு பங்கேற்பின் மூலம் உள்நாட்டிலும் உலகளாவிய அளவிலும் தொடர்புகொண்டு உறவுகளைப் பேணுதல், கல்வி நிர்வாகம் தொடர்பான முடிவுகளை மற்றவர்களுக்கு தெளிவாகத் அறிவிப்பதற்கு முடியுமாதல் வேண்டும்.

ஈ. பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் முக்கியத்துவம் மற்றும் கல்வித்துறையின் மனிதாபிமான அம்சங்களை அடையாளம் காணுதல், நம்பகமான தலைவராக பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தன்னம்பிக்கை மற்றும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துதல் மற்றும் அறிவார்ந்த தீர்ப்புகளை வழங்குதல்.

உ. அடுத்த தலைமுறைக்கு அத்தகைய விழுமியங்களை எடுத்துச் செல்வது குறித்த புரிதலுடன் அனைத்து நடவடிக்கைகளிலும் மற்றும் முடிவெடுக்கும்போதும் நேர்மை மற்றும் நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முடியுமாதல் வேண்டும்.




வணிக நிர்வாகத்தில் நிர்வாக பட்டப் பின்படிப்பு பட்டம் (EMBA)

ஓராண்டு காலப்பகுதியில் நடாத்தப்படும் வணிக நிர்வாகத்தில் நிர்வாக பட்டப் பின் படிப்பு, முக்கியமான பட்டறைகள், நிகழ்வு ஆய்வுகள், கலந்துரையாடல்கள், வீடியோ விளக்கக்காட்சிகள் மற்றும் கற்றல் பங்காளிகளுக்கு அறிவை வழங்குவதற்கான பிற முறைகளில் கவனம் செலுத்துகின்றது. அனைத்து விரிவுரைகளும் உள்ளூர் மற்றும் உலகளாவிய தொழில்துறை துறைகளில் "நடைமுறை" அனுபவமுள்ள நன்கு தகுதிவாய்ந்த நிபுணர்களால் நடாத்தப்படுகின்றன. ஒப்படைகள் தேவையான திறன் மேம்பாட்டை வழங்குவதுடன், மேலும் தேர்வுகளில் பெறப்பட்ட அறிவும், கொடுக்கப்பட்ட சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பெறப்பட்ட அறிவைப் பயன்படுத்துவதும் சோதிக்கப்படும். இறுதித் திட்டத்தில், கற்றல் பங்காளிகள் செயல்திறன் இடைவெளியை சரியாக அடையாளம் காணுதல் மட்டுமல்லாமல், அதை தொழில்ரீதியாக தீர்க்கவும் வழிகாட்டப்படுவார்கள்.

கூடுதலாக, முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் வணிக நிர்வாகத்தில் நிர்வாக பட்டப் பின்படிப்பு பட்டம், கற்றல் பங்காளிகளின் தொழில்முறை பயணத்தை நிறுவன நிர்வாக மட்டத்தில் இருந்து அதற்கு அப்பால் மாற்றுகின்றது. "Capstone" கற்கைநெறியாக செயல்படும் ஒருங்கிணைந்த முகாமைத்துவக் கற்கைநெறி (Globus Simulation), அவர்கள் ஒரு உலகளாவிய நிறுவனத்தை நிர்வகிப்பதாகக் கருதி, உலகம் முழுவதும் உள்ள மற்ற குழுக்களுடன் நிகழ்நிலையில் போட்டியிட அவர்களை தயார்படுத்துகிறது. நிறுவன சுற்றுலாக்களுடன் கூடிய வெளிநாட்டு கல்விப் பயணம், பாடத்திட்டத்திற்கு மேலும் மதிப்பு மற்றும் ஆழத்தை சேர்க்கிறது. இது மிகவும் தேவையான வெளிப்பாட்டை வழங்குகின்றது. மேலும் பெறப்பட்ட நுண்ணறிவு, நமது அமைப்புகளை உலகளவில் செயல்படும் சிறந்த நடைமுறைகளுடன் ஒப்பிடும்போது நல்ல நிலையில் காணப்படும்.

2016 இல் வணிக நிர்வாகத்தில் நிர்வாக பட்டப் பின்படிப்பு அறிமுகப்படுத்தப்பட்டதில் இருந்து, எங்கள் கற்றல் பங்காளிகள் நிறுவன உலகில் மிக உயர்ந்த பதவிகளை அடைவதையும், திட்டத்தை வெற்றிகரமாக முடித்த பிறகு அவர்கள் தங்கள் கனவுகளை நனவாக்குவதையும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பெருமையுடன் பார்க்கின்றது.

வணிக நிர்வாகத்தில் நிர்வாகப் படிப்பின் படிப்பு கற்றல் இலக்குகள்:

அ. உள்நாட்டு மற்றும் உலகளாவிய மட்டங்களில் அத்தியாவசிய அறிவு, திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை அடையாளம் காணுதல், நிர்வாகத்தின் தற்போதைய பிரச்சினைகள் குறித்த கோட்பாட்டு அறிவு மற்றும் கூர்மையான விழிப்புணர்வு பற்றிய ஆழமான புரிதலை வெளிப்படுத்துதல் மற்றும் தொழில்முறை பயன்பாட்டிற்கு பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தும் திறன் இருத்தல் வேண்டும்.

ஆ. கூர்மையான மற்றும் தர்க்கரீதியான சிந்தனை மற்றும் பகுப்பாய்வை பிரதிபலித்தல், சிக்கலான பிரச்சினைகளை முறையான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் தீர்ப்பதுடன், தொழில்முறை மட்டத்தில் பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்த முடியுமாதல் வேண்டும்.

இ. சம்பந்தப்பட்ட அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுடன் வலைப்பின்னல் மற்றும் குழு பங்கேற்பின் மூலம் உள்நாட்டிலும் உலகளாவிய அளவிலும் தொடர்புகொண்டு மற்றவர்களுக்கு முடிவுகளைத் தெளிவாக அறிவிப்பதற்கு முடியுமாதல் வேண்டும்.

ஈ. பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளின் முக்கியத்துவம் மற்றும் வணிக நடவடிக்கைகளின் மனிதாபிமான அம்சங்களை அடையாளம் காணுதல், நம்பகமான தலைவராக பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தன்னம்பிக்கை மற்றும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துதல் மற்றும் அறிவார்ந்த தீர்ப்புகளை வழங்குவதற்கு முடியுமாதல் வேண்டும்.

உ. அடுத்த தலைமுறைக்கு அத்தகைய விழுமியங்களை எடுத்துச் செல்வது குறித்த புரிதலுடன் அனைத்து நடவடிக்கைகளிலும் மற்றும் முடிவெடுக்கும்போதும் நேர்மை மற்றும் நெறிமுறைகளை மேலும் வலுப்படுத்துவதற்கு முடியுமாதல் வேண்டும்.




முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா ( PGDip)

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் (PIM) புதிய பாடத்திட்டமான முகாமைத்துவத்தில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமா (PGDip) நிர்வாக அலுவலர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த ஓராண்டு கற்கைநெறி வளர்ந்து வரும் வணிகத் தேவைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் தொழில்நுட்பம் மற்றும் பௌதீக கற்றல் சூழல் மூலம் செயலூக்கமான கற்றல் வழங்கப்படுகிறது. நிபுணர் பீடத்துடன் மெய்நிகர் மற்றும் நேரடி தொடர்புகள் மூலம் கற்றல் எளிதாக்கப்படும். புதிய சிக்கல்களைச் சமாளிக்கத் தேவையான கருவிகளை வழங்குவதே இதன் முக்கிய குறிக்கோளாகும்.

முகாமைத்துவம் தொடர்பான பட்டநிலை பின்படிப்பு டிப்ளோமா பட்டம் பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது.

அ. முகாமைத்துவத்தின் கோட்பாட்டு அறிவு பற்றிய தெளிவான புரிதலை வழங்குதல்.

ஆ. தற்போதைய முகாமைத்துவ பிரச்சினைகள் குறித்த விமர்சன விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

இ. முகாமைத்துவத்திற்குப் பொருத்தமான நுட்பங்களைப் பயன்படுத்தும் திறனை வளர்த்தல்.

ஈ. சிக்கலான முகாமைத்துவ பிரச்சினைகளை முறையான மற்றும் ஆக்கப்பூர்வமான முறையில் கையாண்டு, சரியான தீர்ப்புகளை வழங்கி, முடிவுகளைத் தெளிவாகத் தொடர்புகொள்ளும் திறனைப் பெறுதல்.

உ. நம்பகமான தலைவராக பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தன்னம்பிக்கை மற்றும் புத்திசாலித்தனத்தை வெளிப்படுத்துதல், அறிவார்ந்த முடிவுகளை வழங்குதல், மற்றும் தொழில்ரீதியாகத் சுயாதீனமாக பணிகளைத் திட்டமிட்டு செயல்படுத்தும் இருத்தல் வேண்டும்.


PGDip (Mgmt)
POSTGRADUATE DIPLOMA IN MANAGEMENT
Postgraduate Institute of Management

## நிறைவேற்று மேம்பாட்டுத் திட்டங்கள் (Executive Development Programmes - EDPs)

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) சிறந்த பண்பு மற்றும் திறமை உடைய நம்பகமான தலைவர்களை உருவாக்குவதில் முன்னணியில் திகழ்கின்றது. குறிப்பாக கடந்த பத்தாண்டுகளில் வளர்ந்துள்ள இதன் நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்கள் உள்ளடக்கம் மற்றும் செயல்பாடு ஆகியவற்றில் மிக உயர்ந்தும், இணையற்றதாகவும் உள்ளன. தற்போதைய தொழில்துறை தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இவை, தனியார் மற்றும் அரசுப் துறையினரை சென்றடைவதில் எதிர்பார்க்கப்படும் முக்கியமான தொடர்பை வழங்குகின்றன. இதன் மூலம், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) சார்ந்திருக்கும் முக்கியமான காரணிகளில் ஒன்றான கூட்டாண்மைகள் வலுப்படுத்தப்படுகின்றன. நிறைவேற்று மேம்பாட்டுத் திட்டத்தின் நோக்கம், நிறுவன அமைப்பின் பல்வேறு நிலைகளில் செயல்படும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிர்வாகிகளுக்குத் தேவையான பயிற்சி மற்றும் மேம்பாட்டை வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் முகாமைத்துவ பயன்பாடுகள், அமைப்புகள் மற்றும் நடைமுறைகளை மேம்படுத்த உதவுவதாகும். இது நேரடி மற்றும் மெய்நிகர் முறைகள் இரண்டின் மூலமாகவும் வழங்கப்படுகிறது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் கற்றல்-இலக்கு-சார்ந்த அணுகுமுறையில் பொறுப்பான விளைவுகளை வழங்கும் ஒரு நிறுவனமாகும். கூட்டாண்மை நிறுவனங்களுக்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தால் நிறுவப்பட்ட நடைமுறை நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் அதிகரித்து வரும் தேவை உள்ளது. பயிற்சி தொடர்பான வெற்றி என்பது நிறுவனங்களுக்கு உண்மையான மதிப்பை உருவாக்குகின்ற, முதலீடுகளான நேர்மறையான விளைவுகளை உருவாக்குவதைக் காட்டுகின்றது. நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்களின் தொடர்ச்சியான கற்றல் ஒருங்கிணைப்பு தளம், நிறுவனத்திற்கு குறிப்பிட்ட சவால்கள், அறிவு மற்றும் பல்வேறு வேலை வாய்ப்புகள்/திட்டங்களுக்கு பங்கேற்பாளர்களை வெளிப்படுத்துவதன் மூலம் கற்றலின் செயல்திறனுடன் ஒரு நேர்மறையான தொடர்பை பிரதிபலிக்கின்றது.

கற்றலும் மேம்பாடும் நிச்சயமாக, பாடநெறி-மையமாகவும், விளைவு-மையமாகவும் இருத்தல் வேண்டும். அதன்படி, ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட நிர்வாக மேம்பாட்டுத் திட்டம், பொறுப்புக்கூறலுக்கான திறன்களைப் பெறுவதற்கும் பயன்படுத்துவதற்கும் பங்கேற்பாளர்களுக்கு ஒரு கற்றல் பாதை வரைபடத்தை வழங்க வேண்டும் என்று நிறுவனங்கள் உறுதி செய்தல் வேண்டும். எனவே, கற்றல்-இலக்கு-சார்ந்த அணுகுமுறையில் பொறுப்பான விளைவுகளைப் பெறுவதற்காக முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தனது அனுபவமிக்க கற்றல் மற்றும் முகாமைத்துவ அறிவின் மூலம் கூடுதல் தூரம் சென்றுள்ளது என்பதை புதிய முயற்சிகள் மற்றும் செயல்படுத்தப்படும் நிர்வாக மேம்பாட்டுத் திட்டங்கள் உறுதிப்படுத்துகின்றன.

## தொழில்சார் திறன் அபிவிருத்தி கற்கைநெறிகள்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தொழில்சார் திறன் மேம்பாட்டுப் பிரிவு, இலங்கை நிறுவனத் துறையின் நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முகாமையாளர்களின் திறன்களையும், வணிகம் மற்றும் பிற துறைகளைச் சேர்ந்த வல்லுநர்களின் திறன்களையும் மேம்படுத்துவதற்காக குறுகிய கால, தொழில்துறை சார்ந்த திட்டங்களை வழங்குவதில் அர்ப்பணித்துள்ளது. நாளைய சவால்களுக்கும் வாய்ப்புகளுக்கும் இன்று

உங்களைத் தயார்படுத்துவதற்கான வாய்ப்பை உறுதி செய்வதற்காக நாங்கள் எங்கள் திட்ட நிரலை தொடர்ந்து புதுப்பிக்கிறோம்.

# ஒட்டு மொத்த நிறுவனம்
# சர்வதேச ஒத்துழைப்பு

முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனம் (PIM) வெளிநாடுகளில் உள்ள புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களுடன் உறவுகளை வளர்ப்பதற்கு அதிக முன்னுரிமை அளிக்கின்றது. சர்வதேச சூழலில் நிபுணத்துவத்தை வளர்ப்பதற்கும், ஒழுக்கமான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ள எதிர்பார்ப்பு, ஒத்துழைப்புகளைத் தேடுவதற்கான உந்து சக்தியாகும். உலகெங்கிலும் உள்ள சிறந்த கல்வி நியைங்களுடன் இணைந்து செயல்படுவது நிறுவனத்தின் கொள்கையாகும்.

குறிப்பாக, முகாமைத்துவப் பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஆசியா-பசிபிக் பிராந்தியத்தில் உள்ள சிறப்பு நிலையங்கள் மற்றும் தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சங்கம் (சார்க்), இந்திய முகாமைத்துவ நிறுவனங்கள் (IIMs) மற்றும் பிற இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள ஆர்வமாக உள்ளது.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் கான்பராவில் உள்ள நியூ சவுத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் (UNSW) வணிகப் பள்ளியுடன் (SBU) ஆராய்ச்சி ஒத்துழைப்பை மேற்கொண்டுள்ளது. வணிகம், பொருளாதாரம், முகாமைத்துவம் மற்றும் பொதுக்கொள்கை ஆகிய துறைகளில் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக இந்த இரண்டு நிறுவனங்களும் இணைந்து செயல்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள வணிகத் திட்ங்களில் 5% மட்டுமே வணிக மேம்பாட்டுக்கான கல்லூரிகளின் கூட்டமைப்பால் (AACSB) அங்கீகாரம் பெற்றுள்ளன. மேலும் அவுஸ்திரேலிய தலைநகரப் பிராந்தியத்தில் AACSB-அங்கீகாரம் பெற்ற ஒரே வணிகப் பள்ளியாகும். SBU நிறுவனம் ஆளுகை மற்றும் பொதுத்துறை கணக்கியல், பொருளியல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு, மனிதவள முகாமைத்துவம், தொழில்முனைவு மற்றும் புத்தாக்கம், வழங்கல் சங்கிலி மற்றும் பெரிய தரவு பகுப்பாய்வு, தலைமைத்துவம் மற்றும் மாற்றமடயும் முகாமைதவம், பொதுத்துறை முகாமைத்தும் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகிய துறைகளில் தீவிரமான ஆராய்ச்சி திட்டங்களை நடாத்துகின்றது.

UNSW என்பது roup of Eight குழுவின் நிறுவன உறுப்பினராகவும், அவுஸ்திரேலியாவின் ஆராய்ச்சி-தலைமைத்துவ பல்கலைக்கழகங்களில் முதன்மையானதாகவும் விளங்குகின்றது. 2020 QS உலக பல்கலைக்கழக தரவரிசையில் இது 43வது இடத்தைப் பிடித்துள்ளது. UNSW நிறுவனம், “2012 Excellenc in Reseach for Australia Report அங்கீகரிக்கப்பட்டதுடன், இது பல்கலைக்கழகத்தின் அனைத்து பரந்த ஆராய்ச்சி துறைகளின் செயல்திறனையும் ”உலகத் தரத்திற்கு சமமாக, அதற்கு மேலே அல்லது மிக மேலே” என்று மதிப்பிப்பட்டது. UNSW இன் ஆராய்ச்சி பலம் பரந்த மற்றும் மாறுபட்ட வியங்களில் பரவியுள்ளது. UNSW மற்றும் முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் பரஸ்பர ஆர்வம், ஆசிரியர்

பரிமாற்றம் மற்றும் பாடத் துறைகளில் ஒருங்கிணைந்த கல்வி ஆராய்ச்சி திட்டங்களை மேற்கொள்கின்றன.

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் ஆராய்ச்சி மாணவர்களுக்கு UNSW இல் கலாநிதி பட்டப் படிப்பிற்கான இடங்களைப் பெறுதற்கு உதவுகின்றது. UNSW பீடத்தின் பல உறுப்பினர்கள் கலநிதி பட்ட ஆய்வாளர்களாகவும், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் முதன்மை ஆராய்ச்சி சஞ்சிகையான இலங்கை முகாமைத்துவ சஞ்சிகையின் (SLJM) ஆசிரியர் ஆலோசனை குழுவிலும் பணியாற்றுகின்றனர். இது மற்றொரு தனித்துவமான மதிப்பை சேர்க்கின்றது, இது முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தனது கற்றல் பங்காளிகளுக்கு வழங்கும் வாய்ப்பாகும். எனவே, இந்த தனித்துவமான வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனம் தனது கற்றல் பங்காளர்களை கேட்டுக்கொள்கின்றது.

# தனிநபர் ஆலோசனை

தனிப்பட்ட ஆலோசனை அமர்வுகளின் மூலம், கற்றல் பங்காளிகளுக்கு கற்கை சவால்களை எதிர்கொள்ளவும், இலக்குகளை அடையவும், அவர்களின் முழு திறனையும் மேம்படுத்தவும் தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதலும் உதவியும் கிடைக்கின்றது. எங்கள் பயிற்சித் திட்டங்கள் கற்றல் பங்காளிகளுக்கு நேர முகாமைத்துவம், ஆய்வு நுட்பங்கள் மற்றும்  அழுத்த முகாமைத்துவம் போன்ற அத்தியாவசிய திறன்களை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு அளிக்கப்படுவதுடன், அவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கைகளிலும் அதற்கு அப்பால் வெற்றிபெற நன்கு தயாராக இருப்பதையும் உறுதி செய்கின்றது. கூடுதலாக, முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் கல்வி ஆலோசனை, தொழில் ஆலோசனை மற்றும் நல்வாழ்வு வளங்கள் உள்ளிட்ட விரிவான வெல்லைக்குள் ஆதரவு சேவைகளை வழங்குகின்றது. இது கற்றல் பங்காளிகள்  பட்டப்படிப்பின் படிப்பின் சவால்களைச் சமாளிக்கவும், அவர்களின் கல்வி மற்றும் தொழில் முயற்சிகளில் வெற்றியை அடையவும் உதவுகிறது.

# முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் ஆரம்பம்

முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் “மக்கள் மற்றும் அமைப்புகளிடையே மதிப்பை உருவாக்குதல்“ என்ற நோக்கத்திற்கு இணங்க, அதன் வணிக "Genesis" ”ஜெனிசிஸ்” இன்றியமையாத மற்றும் முக்கியமான பங்கை வகிக்கின்றது. இங்கு கல்வி மற்றும் தொழில்துறை திறன்களைக் கொண்ட நிபுணர்கள் குழுவுடன், சமூகத்தில் அடையாளம் காணப்பட்ட துறைகளில் தொழில் முனைவோர் வளர்ச்சியின் பரவலான விரிவாக்கம் எதிர்பார்க்கப்படுகிறது. இறுதித் திட்டமாக தொழில் முனைவோர் திறன் ஆராய்ச்சித் திட்டங்களைத் தெரிவு செய்து MBA கற்றல் பங்காளிகளுக்கு வழிகாட்டுதல் முக்கியமான நோக்கமாக இருந்தாலும், தற்போது "Genesis" நிறுவனம், முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் எல்லைகளைத் தாண்டி, நாட்டில் உள்ள தொடக்கநிலை தொழில் முனைவோரின் திறன்களை மேம்படுத்துவதற்கான ஊக்கியாக அதன் சேவைகளை விரிவுபடுத்துகிறது.

தொழில் முனைவோர் மேம்பாட்டின் இந்த நோக்கத்தை முதன்மையாகக் கொண்டு, எங்கள் கற்றல் பங்காளிகள் முன்வைக்கும் வணிக யோசனைகளை திட்ட முன்மொழிவுகளாக மதிப்பாய்வு செய்தல், முன்மொழிவுகளை மாற்றியமைக்க உதவுதல், யோசனைகளை சாத்தியமான வணிகங்களாக மாற்றுவதற்கான பயிற்சி அளித்தல், பலவீனமான தொடக்கங்களை வளர்த்தல், தொடக்க தடைகளை சமாளிக்க அவர்களுக்கு உதவுவது மற்றும் தொழில் முனைவோர் பயணத்தில் நிலையான முன்னேற்றத்திற்கு அவர்களுக்கு வழிகாட்டுதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளை Genesis ஒருங்கிணைக்கின்றது. எங்கள் கற்றல் பங்காளிகள் தங்கள் பட்டநிலை பின்படிப்பு பட்டப்படிப்பின்போது வணிக நிர்வாகத்தில் திறம்படப் பெறும் திறன்கள் மற்றும் அறிவைப் பயன்படுத்தி விரும்பிய முடிவுகளை அடைவதை Genesis உறுதி செய்கிறது.

முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் எங்கள் கற்றல் பங்காளிகளுக்கு அப்பால் சென்று, புதிய தொழில் முனைவோர்கள் அவர்கள் செயல்படும் வணிகச் சூழலின் சிக்கல்களைச் சமாளிக்கத் தேவையான திறன்கள் மற்றும் மனப்பான்மையுடன் அவர்களை உருவாக்குவதே Genesis நோக்கமாகும். இந்த முயற்சியில், Genesis முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் வலுவான பழைய மாணவர்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட தொடக்க வணிகங்களின் வழங்குநர்கள், கொள்வனவாளர்கள், பிற கல்வி நிறுவனங்கள், வர்த்தக சங்கங்கள், கட்டுப்பாட்டாளர்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் வலையமைப்புகளுடன் இணைக்கும் ஒரு ஆற்றல்மிக்க நிலையமாக செயல்படுகின்றது.

இத்தகைய முயற்சிகளுடன் இணைந்து, வழிகாட்டுதல் அமர்வுகள், தனிப்பட்ட ஆலோசனை, பயிற்சித் திட்டங்கள் மற்றும் வழக்கு ஆய்வுகள் ஆகியவை அடங்கும், இதன் மூலம் இறுதியில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கப்படுகிறது.

# பேராசிரியர் உதித லியனகே ஞாபகார்த்த நூலகம்

முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவன நூலகம், இலங்கையின் மிகவும் விரிவான முகாமைத்துவ நூலகங்களில் ஒன்றாகும் என்பதுடன், மேலும் இது 18,000 க்கும் மேற்பட்ட தொகுதிகளுக்கான அணுகலை வழங்குகிறன்து. நிறுவனத்தின் கற்றல் பங்காளிகள், வல்லுநர்கள் மற்றும் பீடங்களுக்கு தேவையான முக்கிய தகவல் வழங்குநராக செயல்படுகின்றது. ஆகையால் தொடர்ந்தும் மேம்படுத்தப்பட்ட சேவையை வழங்கும் நோக்கத்துடன், நூலகத்தின் அறிவு மூல அமைப்பு, அணுகல் மற்றும் வசதிகளை தொடர்ந்து வளப்படுத்தி விரிவுபடுத்தப்படுகின்றது. முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் நூலகம், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனக் கட்டிடத்தின் முதல் மாடியில் அமைந்துள்ளது. தனிப்பட்ட ஆய்வு அறைகள் முதல் Wi-Fi வசதியுடன் கூடிய திறந்த ஆய்வு மேசைகள் வரை 60 கற்றல் பங்காளிகளுக்கு நூலகத்தில் இருக்கை வசதிகள் உள்ளன. Ebscohost மற்றும் Emerald ஆகிய இரண்டு தரவுத்தளங்கள் முழுமையான கட்டுரைகளுக்கான நிகழ்நிலை அணுகலை வழங்குகின்றன, மேலும் நூலகம் Pearson வெளியீடுகள், SAGE வெளியீடுகள், டெய்லர் மற்றும் /பிரான்சிஸ் வெளியீடுகள் மற்றும் ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிகழ்நிலை பொது அணுகல் அட்டவணை உள்ளிட்ட மின்புத்தகங்களின் தொகுப்பிற்கான அணுகலையும் வழங்குகிறது.

# முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம்

கல்வித் திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்துவதற்காக, தகவல் தொழில்நுட்பத்தை முறையாக பயன்படுத்துவதன் மீது முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. முகாமைத்துவ பட்டப்படிப்பு நிறுவனத்தின் பயனுள்ள, திறமையான மற்றும் நவீன கற்றல் நுழைவாயிலான "பிரக்ஞா", உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களின் கற்றல் முகாமைத்துவ அமைப்புகளுடன் ஒப்பிடத்தக்கது. இந்த தேவையை பூர்த்தி செய்வதில், முகாமைத்துவ பட்டப்பின் படிப்பு நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப நிலையம், கற்றல் பங்காளிகள், பீடம் மற்றும் நிர்வாகம் ஆகிய மூன்று தரப்பினருடனும் நெருக்கமாக இணைந்து, தகவல் தொழில்நுட்பம் தொடர்பான அவர்களின் அனைத்து முயற்சிகளுக்கும் வழிகாட்டுதல் மற்றும் ஆதரவை வழங்குகின்றது.

நுட்பமாக வடிவமைக்கப்பட்ட அதிநவீன கற்றல் முகாமைத்துவ கட்டமைப்பு (பிரக்ஞா) என்பது கல்வி மற்றும் தொழில்நுட்பத்தை தடையின்றி ஒருங்கிணைக்கும் ஒரு தளமாகும். மாணவர்களின் கல்விப் பயணத்தை மேம்படுத்துவதற்காக பல்வேறு செயல்பாடுகளை தடையின்றி ஒருங்கிணைக்கும் பிரக்ஞா, தனித்துவமான மாணவர் அனுபவத்தின் முதுகெலும்பாக விளங்குகிறது.

நிகழ்நிலை கற்றல் உதவி: எண்ணிம வளங்களின் களஞ்சியத்தில் மூழ்குங்கள். விரிவுரை ஸ்லைடுகள் மற்றும் மின்புத்தகங்கள் முதல் மல்டிமீடியா விளக்கக்காட்சிகள் வரை, எங்கள் LMS கற்றல் பொருட்கள் எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்கிறது.

வலைவழி வினாடி வினா மற்றும் தேர்வுகள்: செயல்திறனை எளிதாக மதிப்பீடு செய்தல். "பிரக்ஞா" ஊடாடும் வினாடி வினாக்கள் மற்றும் நேர வரையறை செய்யப்பட்ட தேர்வுகளை நடத்துகிறது, உடனடி பின்னூட்டத்தை வழங்குகிறது மற்றும் முன்னேற்றத்தைக் கண்காணிக்க உதவுகிறது.

கலந்துரையாடல் மன்றங்கள்: பிரக்ஞா, கேள்விகளை எழுப்புதல், நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் சக மாணவர்கள் மற்றும் வழிகாட்டிகளுடன் ஒத்துழைப்பை எளிதாக்குதல் போன்ற கலந்துரையாடல் மன்றங்கள் மூலம் உயிரோட்டமான நிகழ்நிலை சமூகத்தை வளர்க்கிறது. மெய்நிகர் வகுப்பறை கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் அறிவைப் பரிமாறிக்கொள்வதால் நிரம்பியுள்ளது.

நூலக அட்டவணை, முன்னேற்ற அறிக்கைகள், வருகை மற்றும் பல: முக்கிய

செயல்பாடுகளுக்கு அப்பால், பிரக்ஞா அனைத்து கல்வி முன்னேற்ற அறிக்கைகள், நிகழ்நேர வகுப்பு வருகைப் பதிவுகள் மற்றும் ஒரு ஒருங்கிணைந்த இடைமுகத்திற்குள் சிற்றுண்டிச்சாலை உணவு முன்பதிவு செய்யும் வசதியையும் வழங்குகின்றது.

## பிரக்ஞா, மாணவர்களுக்கு வசதி, வெளிப்படைத்தன்மை மற்றும் தனிப் பயனாக்கலை வழங்குகிறது.

PIM தகவல் தொழில்நுட்ப நிலையம், முகாமைத்துவத்தில் IT பயன்பாடுகளைக் கற்றுக்கொள்ளுதல், செய்முறை அமர்வுகளை நடாத்தல், இணையத்தில் உலாவல், நிறுவனத்தின் LAN அமைப்பை நிர்வகித்தல் மற்றும் உள்நாட்டு IT தொடர்பான தேவைகளுக்கு வசதிகளை வழங்குவது ஆகியவற்றை மேற்கொள்கிறது. இந்த மையம் சமீபத்திய முன்னணி மென்பொருள் பயன்பாடுகள் நிறைந்த 80 அதிநவீன மல்டிமீடியா கணினிகள், அதிவேக இணைய வசதியுடன் கூடிய உள்ளூர் பகுதி வலையமைப்பு, அதிவேக வயர்லெஸ் நெட்வொர்க் (Wi-Fi), உயர்தர மல்டிமீடியா ப்ரொஜெக்டர் மற்றும் DTS 6.1 அலைவரிசை ஒலி அமைப்பு ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

# தர உத்தரவாதம் மற்றும் அங்கீகாரம்

தற்போதைய இலங்கையின் பல்கலைக்கழக கட்டமைப்பு தர உத்தரவாதத்திற்கு மிக உயர்ந்த முன்னுரிமை அளித்துள்ளது. அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களிலும் உயர் மட்ட செயல்பாட்டுடன் கூடிய உள்ளக தர உத்தரவாத அமைப்புகளை நிறுவுதல் கட்டாயமாகும். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, உள்ளக தர உத்தரவாத நடவடிக்கைகளை திட்டமிடுதல், மேம்படுத்துதல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் ஆகியவற்றிற்காக PIM தர உத்தரவாத செயல்முறை அமைக்கப்பட்டுள்ளது. மேலும், முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் வழங்கும் கல்வித் திட்டங்களுக்கான அங்கீகாரத்தை மேம்படுத்துவதற்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச அங்கீகார நிறுவனங்களுடனும் செயல்படுகின்றது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தர உத்தரவாதம் மற்றும் அங்கீகார கவுன்சில் (QAAC) மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் தர உத்தரவாத நிலையம் (IQAU) மற்றும் சர்வதேச அங்கீகார நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படும் முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம், வெளிப்புற தர உத்தரவாத மதிப்பாய்வுகளுக்காக சுய மதிப்பீட்டு அறிக்கைகளைத் தயாரிப்பதோடு, அனைத்து ஊழியர்களுக்கும் தர உத்தரவாதம் குறித்து வழிகாட்டுதலையும் வழங்குகின்றது. மேலும், ஊழியர்களிடையே நல்ல நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்வதற்கும் உதவுகிறது.

# சமகால கற்றல் சூழல்

முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனம் என்பது கற்றல் பங்காளர்களுக்கு அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக ஒத்துழைப்பு வழங்குவதற்கு ஒரு நவீன கற்கை நிலையங்கள், டிஜிரல் உதவி கருவிகள் மற்றும் ஆராய்ச்சி வசதிகள் உள்ளடக்கிய வளங்களையும் வசதிகளையும் வழங்குகின்ற நிறுவனமாகும். இது நிகழ்நிலை வளங்களை அணுகுவதாக இருந்தாலும், ஆய்வுக் குழுக்களில் பங்கேற்பதாக இருந்தாலும் அல்லது அனுபவமிக்க பயிற்றுநர்களிடமிருந்து வழிகாட்டுதல் பெறுவதாக இருந்தாலும், எங்கள் கற்றல் பங்காளிகள் கல்வியில் சிறந்து விளங்கவும் அவர்களின் இலக்குகளை அடையவும் தேவையான கருவிகள் மற்றும் ஒத்துழைப்பை பெறுவதற்கு முடியும்.

# முகாமைத்துவ பட்டப் பின்படிப்பு நிறுவனத்தின் பழைய மாணவர்கள்

